# அய்யா துணை
# அகிலத்திரட்டு அம்மானை
## முதல் பருவம்(SEMESTER 1)
Day 1
## காப்பு

ஏரணியும் மாயோன் இவ்வுலகில் தவசுபண்ணிக்
காரணம் போல் செய்தகதை கட்டுரைக்க -பூரணமாய்
ஆராய்ந்து பாட அடியேன் சொல் தமிழ்க்குதவி
நாராயணர் பாதம் நாவினில்
பாண்டவர் தமக்காய்த் தோன்றிப் பகைதனை முடித்து மாயோன்
வீன்றிய கலியன் வந்த விசளத்தால் கயிலை யேகிச்
சான்றவர் தமக்கா யிந்த தரணியில் வந்த ஞாயம்
ஆண்டவர் அருளிச் செய்ய அம்மானை எழுத லுற்றேன்
சிவமே சிவமே சிவமணியே தெய்வ முதலே சிதம்பரமே
தவமே தவமே தவக்கொழுந்தே தாண்டவ சங்காராதமியே -எங்களுட
பவமே பவமே பல நாளுஞ் செய்த பவமறுத்துன்
அகமேவைத் தெங்களை யாட்கொள்வாய்
சிவசிவ சிவசிவா அரகர அரகரா
அலையிலே துயில் ஆதிவராகவர்
ஆயிரத்தெட்டாண்டினி லோர்பிள்ளை
சிலையிலே பொன்மகர வயிற்றினுள்
செல்லப்பெற்றுத் திருச்சம் பதிதனில்
முலையிலே மகரப்பாலை உமிழ்ந்துபின்
உற்றதெச்சண மீதில் இருந்துதான்
உலகில் சோதனை பார்த்தவர் வைந்தரின்
உவமை சொல்ல உகதர்ம மாகுமே
திருமொழி சீதையாட்குச் சிவதலம் புகழ எங்கும்
ஒரு பிள்ளை உருவாய்த் தோன்றி உகபர சோதனைகள் – பார்த்துத்
திருமுடி சூடித் தர்மச்சீமையில் செங்கோ லேந்தி
ஒரு மொழி யதற்குள் ளாண்ட உவமையை உரைக்க லுற்றார்

விளக்கம்:-

அய்யா நாராயணர் கனிவாயால் எடுத்துக் கொடுத்த "ஏரணியும்"என்ற சீரை தொடக்கமாக கொண்டு அகிலத்திரட்டு அம்மானையை அரிகோபாலன் சீசர் எழுதியுள்ளார். "ஏர்" என்பதற்கு "நன்மை", "அழகு" என்பது பொருள் ஆகும். ஏரணியும் என்றால் நன்மை செய்வதையே தனது இயல்பாக கொண்டிருக்கிறவர் என்றும்,அழகு, ஐஸ்வர்யம், பொழிவு, மங்களம் போன்ற அனைத்து விதமான நன்மைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கிறவர் என்றும் பொருள் ஆகும். இறைவழி நடக்கின்ற மேலும் கலியில் வாழுகின்ற மக்களின் மனதைப் பண்படுத்தி ஜீவன்களுக்கு மோட்சம் என்னும் அழகினைக் கொடுத்து அவர்களை தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொள்கின்றவர் அய்யா.

இறைவனால் உருவாக்கப்பட்ட அனைத்தும் இந்த கலியுலகில் கலி என்ற மாய்கைக்குள் சிக்குண்டு இருப்பதால் அந்த மாய்கையிலிருந்து மக்களைத்

காப்பாற்றி நல்லோரைத் தேர்ந்து எடுத்துத் தர்மயுக வாழ்வுக் கொடுப்பதற்காக எம்பெருமான் அவரித்த காரணங்களை இங்கு எடுத்துரைக்கிறார். மேலும் ஆதிநாராயணர் ஐவராகிய பஞ்ச பாண்டவர்களை காப்பாற்றுவதற்காக கிருஷ்ணராக பிறந்து மகாபாரத போரை முடித்த பெருமாள் பூமியில் கலியன் தோன்றியதை அறிந்து வருத்தம் மிகக் கொண்டு திருக்கயிலாயம் சென்று சான்றோர் மக்களாகிய அய்யாவின் பிள்ளைகளை கலி என்ற மாய்கையில் இருந்து பாதுகாக்கவென்று சிவபெருமானிடம் ஆலோசனைக் கேட்க சென்றார். கைலையில் எப்போதும் தவநிலையிலிருந்து அருளும் எம்பெருமானாகியச் சிவன் முன்னிலையில் நின்று நாராயணர் போற்றுகிறார்.

உயிர்களை எல்லாம் படைத்தப் பரம்பொருளே தேவர்களுக்கெல்லாம் முதன்மையானவரே! வெள்ளியங்கிரியில் வீற்றிருப்பவரே! அவற்றுக்கெல்லாம் தகப்பனே! தாண்டவக் கூத்துத்தாடி தவறுகளை அழிக்கும் சக்தியைப் பெற்றவரே! சிவபெருமானே! எங்கள் பாவங்களை மன்னித்து உம்முடையப் பாதுகாப்பிலேயே வைத்து நல்வழிப்படுத்தி வழிநடத்தும் அம்மையே அப்பா! கருணை உள்ளம் கொண்டவரே! சிவ பரம் பொருளான நாராயண பரம் பொருளே! [அரியும், சிவனும் ஒன்றே] என்று போற்றி நின்ற நாராயணரை சிவனார், கண் திறந்துப் பார்த்து , ஏதுகாண் அச்சுதரே! என்னைத் துதி செய்தக் காரணம் என்ன என்றுக் கேட்க அய்யா நாராயணர் திருவாய் மலர்ந்து உரைப்பார், படைக்கும் பரம்பொருளே!, பூமியில் கலி நீசனின் கொடுமையால் சான்றோர் மக்கள் துயரப்படுகிறார்கள். என்னை நினைத்து அபயம் இட்டு உருகுகிறார்கள்.

நான் அவர்களுக்குத் துணைப் புரிய தாங்கள் உதவ வேண்டும் என்று உரைத்தார். இவ்வாறுச் சொன்ன வார்த்தையைக் கேட்ட சிவபெருமானை மனமுருக மொழிவார், நீயே பூமியில் கலியனின் கொடுமைகளை ஒழிக்க வைகுண்டராக அவதாரம் எடுத்து பிறந்து வரவேண்டும். நான் உற்ற துணையாய் இருந்து அருள் புரிவேன் என்று ஈஸ்வரர் திரு வாய்மொழிந்தார்.

ஈரேழு பதிநான்கு லோகத்தையும் படைத்து, அதில் எண்பத்தி நான்குலட்சம் வகையான ஜீவராசிகளையும் படைத்து, காத்து, அருளுகின்ற பரம் பொருளான ஆதி நாராயணரே இந்த கலியுகத்தில் மனுப் போல் அவதரித்து தவசு பண்ணி, நடத்திய லீலைகளை கதையாக சொல்லவும், உலக தோற்றம் முதல் இறுதிவரையுள்ள அனைத்தையும் முழுமையாக ஆராய்ந்து பாடவும், தமிழ் மொழியை தந்து, அந்த வார்த்தைகள் இறை மொழியாக அமைய நாராயணரின் கமல திருபாதமே தனது நாவில் இருக்க வேண்டும் என வேண்டி , அதர்மத்தை அழித்து தர்மத்தை காக்க வேண்டி யுகாயுகங்கள் தோறும் அவதாரம் எடுத்து வருகின்ற அய்யா நாராயணர் துவாபரயுகத்தில் கண்ணனாக அவதரித்து தர்மத்தை காத்தார்.

பஞ்ச பாண்டவர்கள் தர்மத்தின் வழியில் நடந்ததால் அவர்களுக்கு துணையாக நின்று, குருசேத்திரத்தில் நடந்த மகாபாரத போரில் அதர்மம் வழிநின்ற துரியோதனனின் படைகளை தோற்கடித்து, பாண்டவர்களுக்கு வெற்றியை கொடுத்து, அவர்களுக்கு உரிமையுள்ள குருநாட்டையும் மீட்டுக்கொடுத்து, தர்மத்தை நிலை நிறுத்தி இருக்கும் போது, முன் முடிந்த ஆறு யுகங்களிலும் பிறந்த அரக்கனின் மொத்த தீயவைகளையும் ஒன்றாக சேர்த்தாலும் எட்டில் ஒரு பங்கு கூட இல்லாத அளவுக்கு கொடிய மாபாதகனாய் கலியன் வீறுக் கொண்டு வந்த செய்தியை அறிந்து கயிலைக்கு சென்று,

அங்கிருந்து கலியை அழிப்பதற்கான காரியங்களையும், கலியுகத்தில் தாம் அவதாரம் நிகழ்த்துவதற்கான காரண காரியங்களையும் செய்துவிட்டு, சான்றோர்களை காப்பதற்காக பூமியில் அவதரித்த நியாய தர்ம முறையையும் ஆண்டவனாகிய அந்த அவதார நாயகனே கருணை உள்ளத்தோடு எனது சிந்தைக்குள்ளிருந்து எடுத்துச் சொல்ல நான் இந்த "அகிலத்திரட்டை" அம்மானை வடிவில் எழுதுகிறேன் என்கிறார் அரிகோபாலன் சீசர்.

தவமாய் இருந்து சங்கல்பம் (நினைத்தல்) செய்வதன் மூலமாகவும் இந்த பரந்தவிரிந்த பிரபஞ்சத்தை இயக்குகின்ற இறைவா! நாங்கள் பலநாளும் அதாவது இதுவரை பிறந்துள்ள பிறவிகளில் எல்லாம் செய்துள்ள பாவங்கள் எல்லாம் அழித்து, எங்களை தூய்மையாக்கி, பிறப்பு இறப்பில்லாத, நோய் நொம்பலம் இல்லாத, துன்ப துயர் இல்லாத, பசி பட்டினி இல்லாத, வளர்வு தேய்வு இல்லாத, இரவு பகலில்லாத என்றென்றும் நிலைத்திருக்கின்ற நித்திய பரமானந்தம் என்கின்ற முக்தியை தருகின்ற தருமயுக வாழ்வை தருவாய் என வேண்டி, நமது பாவத்தை போக்கும் நாமமான “அய்யா சிவசிவ சிவசிவா அரகர அரகரா” என்ற கலியழிக்கும் மகா மந்திரத்தை சொல்லி அபயமிடுகிறார்.

நாம் செய்கின்ற பாவத்தினாலே நமக்கு மீண்டும் மீண்டும் பிறவி ஏற்பட்டு துன்பப்பட வேண்டியுள்ளது. இதைத்தான் சிவ காண்ட அதிகாரப் பத்திரத்தில் அய்யா "உங்களுடைய பாவம் உயிர் வதையாய் இருக்குதடா" என்கிறார். நாம் செய்த மற்றும் செய்கின்ற பாவத்தின் காரணமாக உண்டான கர்மவினையின் காரணமாகவே நாம் (உயிர்) உடலெடுத்து பிறந்து வதைப்படுகிறோம். நமக்கு ஏற்படுகிற துன்பங்கள் அனைத்துக்கும் நாம் மனதாலும், வாக்கினாலும்(சொல்), காயத்தாலும் (உடலால்) செய்கின்ற பாவங்கள் தான் காரணமேயன்றி பிறர் யாரும் இல்லை. மனதளவில் நினைக்கின்ற தப்பான செயலுக்கு கூட பாவம் ஏற்படுவதால் தான் அய்யா நம்மை நல்ல நினைவோடு இருக்க சொல்கிறார்.(நல்ல நினைவோர்க்கு நாள் எத்தனை ஆனாலும் பொல்லாது வராது புவிமீதில் வாழ்ந்திருப்பார் ---- அருள்நூல்).

“சிவமே சிவமே சிவமணியே தெய்வ முதலே சிதம்பரமே
தவமே தவமே தவக்கொழுந்தே தாண்டவ சங்காராதமியே- எங்களுட”

அதாவது மங்கலம் புரிகின்ற, நன்மை செய்கின்ற, செம்மையாக(சிறப்பு) இருக்கின்ற, முக்தி தருகின்ற பரிபூரணமாக வீற்றிருக்கின்ற, தூய அறிவுருவாக இருக்கின்ற இறைவா கடவுளே, சிவ என்ற நாமத்தைக் கொண்ட மணியே, அஞ்ஞான இருளகற்றும் அருள் ஒளியே, ஒளித்தோன்றும் இருப்பிடமே, ஒளியாகவும் நாதமாகவும் வியாபிக்கும் இறைவா, தெய்வங்களுக்கு எல்லாம் முதலாய் சிதம்பரத்தில் இருக்கும் இறைவா, நீயே தவமாக(இறைவனாக) இருந்து கொண்டு, ஜீவர்களின் உறுதியான பக்தியினால் ஒருபுத்தியாகிபற்றிப்பிடிக்கின்றதவத்தின்பயனாககிடைக்கின்ற ஈடுயிணைய ற்றஉயர்ந்தபொருளாகவும் இருந்து,பிரபஞ்சம்இயங்கும்பொருட்டும், உயிர்களின் நன்மைக்காகவும் திருநடனம் புரியும் இறைவா!

“பவமே பவமே பல நாளுஞ் செய்த பவம றுத்துன்
அகமேவைத் தெங்களை யாட்கொள்வாய்
சிவசிவ சிவசிவா அரகர அரகரா”

நாம் செய்கின்ற பாவங்களை எல்லாம் அனுபவித்துகழித்தபின்பேஇறைவனை அடைய முடியும் என்றால் எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் முடியாது. இதனால் தான் இறைவன் தன்னுடைய அருள்பெரும் கருணையால் நமது பாவங்களை போக்கி தன்னுடன் சேர்த்துக் கொள்கிறான்.

நாம் மனதார திருந்தி செய்த பாவத்தை போக்க வேண்டி அய்யாவை சரணடையும் போது அவர் தாயுள்ளத்தோடு கர்மவினையை போக்கி தர்மயுக வாழ்வை கொடுக்கிறார். இதைத்தான் அய்யா அருள்நூலில் "கற்பமூலி உங்களுக்கு கர்மவினை தீர்க்கும் மூலி" என்கிறார். அய்யா நம்மை அவருடைய அகத்தில் வைத்து முக்தி கொடுப்பதற்கு, நாம் எப்போதும் அய்யாவை அகத்தில் வைத்து நல்வழியோடு நடக்க வேண்டும். இவ்வாறு நாம் எப்போதும் இறைவனை அகத்தில் வைத்து துதிக்கின்ற போது, நாம் செய்த பாவவினைகளை நாம் செய்த பாவவினைகளை மாற்றி நம்மைக் காத்துக் கொள்வார்.

“அலையிலே துயில் ஆதிவராவர்
ஆயிரத்தெட்டாண்டினி லோர்பிள்ளை
சிலையிலே பொன்மகர வயிற்றினுள்
செல்லப்பெற்றுத் திருச்சம் பதிதனில்
முலையிலே மகரப்பாலை உமிழ்ந்துபின்
உற்ற தெட்சணம் மீதில் இருந்துதான்
உலகில் சோதனை பார்த்தவர்
வைந்தரின் உவமைசொல்ல உகதர்மமாகுமே"

பூவுலகில் கலியனுடைய வருகையால் நீதங்கள் குன்றி தர்மம் தலைகவிழ்ந்துமக்கள் மிகுந்த துன்பத்திற்கு உள்ளானார்கள். ஏற்கனவே பூவுலகில் பிறவி செய்யப்பட்ட சான்றோர்கள் கலியனுடைய கொடுமையால் மிகுந்த இன்னலுக்கு உள்ளாயினர். சான்றோர்களுடைய துன்பத்தை பொறுக்க முடியாமல் அலையிலே துயில்கின்ற ஆதிநாராயணர், பூவுலகில் வைகுண்ட அவதாரத்தை நிகழ்த்த திருவுளம் கொண்டார். எனவே மகாலெட்சுமி அன்னையிடம் "மாதே இந்த கலியுகத்தை முடிக்க உன்னுடைய வயிற்றில் வைகுண்ட மகனை பிறவி செய்ய வேண்டும்", எனவே நீ திருச்செந்தூர் கடலில் மகர சிலையாக வளர்ந்து இரு, தருணம் வரும்போது அவதரிக்க வருவேன் என கூறி அனுப்பினார். அதன்படி ஆயிரத்து எட்டாம் ஆண்டு மகரமாக சமைந்திருக்க கூடிய அன்னை லெட்சுமியிடம் சென்று, அங்கு தானே ஒரு குழந்தையாக வைகுண்ட மாமணி என்னும் நாமத்தில் அவதாரம் எடுத்தார்.

அவதாரம் நிகழ்த்திய பின்பு தாமே தந்தையாகவும்(நாராயணர்) மகனாகவும்(வைகுண்டர்) இருந்து இவ்வுலகில் தர்மத்தினை நிலைநிறுத்தும் பொருட்டு தாம் நிகழ்த்த போகும் அவதார லீலைகளையும், தர்மத்தின் படி மக்கள் வாழ்ந்து இக்கலியிலிருந்து மக்கள் கடைந்தேறும் பொருட்டு நடத்தும் வளமைகளையும் அருள் உபதேசம் (விஞ்சை) என்னும் அமிர்தபாலாக உலகோர் அறியும்படி வெளிப்படுத்தினார்

"உற்ற தெட்சணம் மீதில் இருந்துதான்
உலகில் சோதனை பார்த்தவர்"

இப்படி விஞ்சைகளை வெளிப்படுத்திய பகவான், அதன்பிறகு முருகப்பெருமானாகவும் வைகுண்ட பரம்பொருளாகவும் நின்று முருகப்பெருமான் மற்றும் ஈரேழு பதினாலு லோகங்களில் வாழ்கின்ற தேவர்களுக்கும் சட்டம் கூறி, தாம் தவம் இருப்பதற்காக தகுதியும் சிறப்பும் பொருந்திய தெட்சணம் (உற்ற தெட்சணம்) நோக்கி வருகிறார்.

தெட்சணம் வந்த அய்யா, சுவாமி தோப்பில் ஆறு ஆண்டுகள் தவமாக இருந்து (தவமாகிய இறைவன் தன் தவ தத்துவத்தை காண்பித்த அற்புதம்) பின் மக்களுடைய நோய் நொம்பலங்களை தண்ணீர் மண்ணால் தீர்த்து, இந்த உலகத்தில் நல்லோரை தெரிந்தெடுப்பதற்காகவும், பொல்லாத பேரை நரகத்தில் தள்ளவும், தான் கலிமன்னனுடைய சோதனைக்கு ஆட்பட்டு வென்றும், தெட்சணத்தில் இருந்து உயிர்களை உக சோதனை பார்த்து கலியை வென்றார்.
"வைந்தரின் உவமை சொல்ல உகதர்மமாகுமே"

இப்படி எப்போது எல்லாம் இந்த யுகம் தர்மம் குன்றி, அதர்மம் மேலோங்கி இருக்கும் போது இந்த தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு விண்ணகத்திலிருந்து மண்ணகம் வந்த நம் அய்யா, பல அவதார அற்புதங்களையும், மகிமைகளையும் லீலைகளாக புரிந்தார். இவ்வாறு வைகுண்டமாக இருந்து புரிந்த அற்புதங்களை பெருமைகளை பாடி, துதித்து,போற்றி அனைவருக்கும் எடுத்து சொல்வதே இந்த யுகத்தினுடைய மிக பெரிய தர்மம் ஆகும்.

ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு விதங்களில் தர்மம் செய்து இறைவனை அடைந்த அன்புக்குடி கொண்ட மக்கள் இவ்வுகத்தில் நாராயணருடைய அவதார மகிமைகளை (உவமை) எடுத்து சொல்ல சொல்ல இந்த கலி நொடிந்து தர்மம் நிலைபெற்று நாமும் அய்யாவினுடைய அன்புபாத்திரங்களாகி இறைவனை அடைவோம்.

## Day 2

நூல் சுருக்கம்

சிவமே சிவமே சிவமே சிவமணியே
தவமே தவமே தவமே தவப்பொருளே
சீரான கன்னி செய்குமரி நன்னாட்டில்
பாரான தெச்சணமே பரம னுறுதலத்தில்
போர்மேனி மாயன் பிறந்து தவம்புரிந்து
ஒர்மேனிச் சாதி ஒக்க வரவழைத்து
நன்னியாய் நானூறு நாலுபத் தெட்டதினோய்
தண்ணீரால் தீர்த்த தர்மமது ஆனதையும்
செய்திருந்த நன்மை தீங்குகலி கண்டிருந்து
வயது முகிந்தகலி மாளவந்த வாறுகளும்
முன்னாள் குறோணி முச்சூர னுடல்துணித்துப்
பின்னா ளிரணியனைப் பிளந்துஇரு கூறாக்கி
ஈரஞ்சு சென்னி இராட்சதரை யுஞ்செயித்து
வீரஞ்செய் மூர்க்கர் விடைதவிர்த் தேதுவரா
தேசாதி தேசர் சென்னிகவிழ்ந் தேபணியும்

தீசாதி யான துரியோதனன் முதலாய்
அவ்வுகத் திலுள்ள அவ்வோரையும் வதைத்து
எவ்வுகமும் காணாது ஏகக்குண்டமேகி
பொல்லாத நீசன் பொருளறியா மாபாவி
கல்லாத கட்டன் கபடக்கலி யுகத்தில்
வம்பா லநியாயம் மகாதேவர் கொண்டேகி
அம்பாரி மக்களுக்கஆக இரக்கமதாய்
அறுகரத் தோன்வாழும் ஆழிக் கரையாண்டி
நறுகரத் தோனான நாராயண மூர்த்தி
உருவெடுத்து நாமம் உலகமேழுந் தழைக்கத்
திருவெடுத்த கோலம் சிவனா ரருள்புரிய
ஈசனருள்புரிய இறையோ னருள்புரிய
மாய னருள்புரிய மாதும் அருள்புரிய
பூமாது நாமாது புவிமாது போர்மாது
நாமாது லட்சுமியும் நன்றா யருள்புரிய
சரசுபதி மாதே தண்டரள மாமணியே
அரசுக் கினிதிருத்தும் ஆத்தாளே அம்பிகையே

விளக்கம்:

சிவம் என்பது யாராலும் அளவிட முடியாத ஆதி அந்தம் இல்லாத பரம்பொருள். அந்த உயர்ந்த பொருளே இந்த அண்ட சராசரங்களையும் படைத்துநிறைந்துஇருக்கின்றது.நாம்காணக்கூடியஅனைத்தும்சிவத்தின்தோற்றமே. உலக உயிர்கள் இறைவனுடைய திருவடியை காணும் பொருட்டுதவம் இருந்து அவருடைய பாதத்தை அடைகின்றனர்.

தவத்திற்கு அவ்வளவு சிறப்பு உண்டு. தவம் ஒன்றே நம் இச்சை கொண்டு இறைவனை அடைவதற்கு ஏற்றவழி. அதுவே உயர்ந்த வழி ஆகும். ஆதி காலம் முதலே முனிகளும் ரிஷிகளும் எல்லாவற்றிலும் உயர்ந்த வழியாக தவம் செய்வதையே எடுத்து அந்த தவத்தின் மூலமே இறைவனை கண்டடைந்தார்கள். தவம் ஒன்றே நல்லோர்க்கும், தீயோர்களுக்கும் நன்மை பயக்க கூடியது ஆகும். இவ்வாறு தவத்தின் பெருமை உயர்ந்ததாக இருக்கின்றது. “உலக உயிர்கள், மிகவும் உயர்ந்ததும் சிறப்பு மிகுந்ததும் மாசு இல்லாத தவத்தின் துணைகொண்டு நற்கதி அடைகிறார்கள். ஆனால் அந்த தவமாகவே தவத்தின் பொருளாகவே இறைவன் இருக்கின்றான்.”

சீரான கன்னி-சிறப்பு மிகுந்த பகவதி அன்னை, குமரி நாட்டில் உறைவிடம் கொண்டு தவம் மேற்கொண்டாள். மேலும் இந்நாடு தெட்சணத்தில் (தெற்கு பகுதி ) இருப்பதால் இதற்கு தெட்சணா பூமி என்ற பெயரும் உண்டு. இந்த தெட்சணாபுரி நாட்டில்தான் பல இறை அவதாரங்களும், இறை திருவிளையாடல்களும் நடைபெற்றது. அவ்வாறு மிகவும் சிறப்பு மிகுந்தது இந்த குமரி நன்னாடு.

போர் மேனி மாயன்-இறைவன் ஒவ்வொரு யுகங்களிலும் அந்த யுகதர்மத்தை நிலை நாட்டவும் தனக்கு எதிராக வந்த அசுரர்களை அழிப்பதற்காகவும் போர்க்கோலம் கொண்டு அந்தந்த யுகத்தில் அநியாயம் செய்கின்ற அசுரர்களை வதம் செய்கின்றார். அவ்வாறு ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு போர்க்கோலம் கொள்ளுகின்ற அந்த இறைவன் இந்த கலியுகத்தில்

கலி என்ற அசுரனை அழிப்பதற்காக திருச்செந்தூர் கடலில் பிறந்து, பண்டார கோலம் கொண்டு தவம் புரிந்து கலியை அழிக்க வகை கொண்டார்.

ஓர் மேனி சாதி- பலவித ஏற்ற தாழ்வுகளுடன் பிரிந்து கிடந்த மக்கள் அனைவரையும் "அய்யா" என்ற நாமத்தால் ஒன்றுபட்டு மக்கள் அனைவரையும் தன்பால் வரவழைத்து அவர்களுடைய துன்பங்களுக்கு காரணமான நானூற்று நாற்பத்தெட்டு நோய் நொம்பலங்களையும் தண்ணீரும் மண்ணும் கொடுத்து தர்மத்தால் தீர்த்து அருளினார் (உலகில் மொத்தம் 4448 நோய்கள் உண்டு எனவும், அதில் கட்டம் கொடிய நோய்கள் 448 எனவும் சித்தர்கள் வகைப்படுத்தி உள்ளனர்).செய்திருந்த நன்மை-இவ்வாறு மக்களுக்கு நோய்பிணியும் தீர்த்து, தர்மத்தால் உலகம் நன்மை பெற அய்யா செய்திருந்த நன்மைகளை பார்த்துக் கொண்டிருந்த கலிமாய்கை எப்படி ஒரு விட்டில் பூச்சி விளக்கு ஒளியை கண்டு ஆர்ப்பரித்து அதில் விழுந்து மடிகின்றதோ அது போல, நன்மை செய்திருந்த அய்யாவை தீமையால் அணுகி தான் மாளுவதற்கு முற்பட்டது.

குறோணி என்ற அசுரன் ஈசுரனாருடைய வேள்வியில் பிறந்து, நேர்மை ஒழுங்கு அறியாமல் கண்ணில் கண்டதை எல்லாம் எடுத்து விழுங்கினான். இதனை கண்ட திருமால் சிவனாரிடம் வரம் வேண்டி,அந்த குறோணியை ஆறு துண்டுகளாக வெட்டிவதம்செய்தார்.அதன்பிறகு குறோணியினுடைய ஒவ்வொரு துண்டுகளிலும் அசுரராக பிறந்த அசுரர்களை ஒவ்வொரு யுகத்திலும் அவ்வுகத்திற்கு ஏற்ப நாராயணர் அவதரித்து அவர்களை வதம் செய்தார்.

அதன்படி முதல் மூன்று துண்டிலிருந்து பிறந்த அசுரர்களான குண்டோமசாலி, தில்லை மல்லாலன் மல்லோசி வாகனன், சிங்கமுகாசூரன் திரள்சூரபத்மன்ஆகியோர்களைவதம்செய்தார்.அதற்குபின்னால்கிரேதாயுகத்தில்அந்த குறோணியினுடைய ஒரு துண்டு இரணியனாக பிறந்து நேர்மை ஒழுங்கு இல்லாமல் ஆட்சி செய்யும்போது நாராயணர் நரசிம்மமாக தோன்றி அவனை வதம் செய்தார்.

திரேதாயுகத்தில் ஈரஞ்சு(2x5=10) சென்னியுடன்(தலை), அதாவது பத்து தலையுடன் பிறந்து வந்து, அநியாயம் செய்த இராவணவனை ஸ்ரீராமராக அவதரித்து வதம் செய்தார் நாராயணர். இவ்வாறு ஒவ்வொரு யுகத்திலும் அசுரர்கள் பலர் இறைவனைஅறிந்துகொள்ளாமல்"தான்" என்னும் அகங்காரத்தால் இறைவனுடனே யுத்தஞ் செய்ய வாதிட்டு,அவர்களுடைய அநியாயம் கண்டு இறைவன் அவர்களை அழிக்கின்றார்.

மேலும் துவாபராயுகத்திலே அசுரன் துரியோதனாக பிறந்து அரசனாக இருந்து ஆட்சி புரிகின்றான் . அவனுடைய ஆட்சியில் பல தேசத்து மன்னர்களும் அவனுக்கு அடிபணிந்து ஆட்சி நடத்துகின்றனர். அப்படிபட்ட துரியோதனன்தர்மத்தை கைவிட்டு, அதர்மத்தின் வழியில் ஆட்சி புரிந்ததால் நாராயணர் அவ்வுகத்தில் ஸ்ரீகிருஷ்ணராக அவதரித்து துரியோதனன் முதற்கொண்டு அவ்யுகத்தில் பிறந்த அசுரர்கள் அனைவரையும் வதம் செய்தார். இவ்வாறு துவாபரா யுகத்தில் தன் அவதாரத்தை நிறைவு செய்து யாருமே அறிந்து கொள்ள முடியாத வடிவெடுத்து தன்னுடைய இருப்பிடத்திற்கு சென்றார்.

துவாபர யுகத்திற்கு பின் வருகின்ற கலியுகத்தில் கலியன் பிறவி செய்யப்படுகிறான். இந்த கலியுகத்தை அய்யா "கபடக்கலியுகம்" என்று குறிப்பிடுகிறார்.அதாவது உண்மை என்பது இல்லாமல் அனைத்தும் கபடமாகவே இருக்கின்ற யுகம் என்று மக்களும் சத்தியத்தைக் கடைபிடித்து அதன்படி வாழ்ந்து மெய்யான வாழ்வு வாழ்வதை விட்டுவிட்டுப் பொய்யானக் கபடமாகவே வாழ்ந்து மடிகின்ற ஒரு யுகம் ஆகும்.

அப்படியான இந்த கலியுகத்தில் வந்த கலிநீசன் பொல்லாதவன் ஆவான் அவன் பொருளறியா மாபாவியாக இருக்கிறான்.அதாவது மெய்ப்பொருள் என்று சொல்லக்கூடிய இறைவனை அறிந்து கொள்ளக்கூடிய ஞானம் சற்றும் இல்லாதப் பெரியப் பாவி. மேலும் அந்த ஞானத்தை அறிந்துக் கொள்ள விரும்பாதக் கல்லாதக் கட்டன்.

"வம்பாலனியாயம்"- அப்படி மோசமாக இருக்கக் கூடிய இந்தக் கலியுகத்தில் தேவர்கள் நாராயணருடைய பிள்ளைகளாக இந்த பூவுலகில் பிறவி செய்யப்படுகிறார்கள். அப்படி பிறவி செய்யப்பட்ட அந்த தேவர்களைக் கலியன் வம்பால் அநியாயம் செய்கின்றான். கலியனின் அநியாயத்தால் தேவர்களாயிருந்த மக்கள் படுகிற துயரம் பொறுக்காமல் உயர்வான அந்த மக்களின்மேல் கொண்ட இரக்கத்தின் காரணமாக, அவர்களைக் காக்க அய்யா அவதாரம் எடுத்தார்.

தீயவைச் செய்த தீயவரானச் சூரர்களை அறுத்து வதம் செய்து, தீவினைகளை அறுக்ககூடியக் கரங்களையுடைய முருகபெருமான் வீற்றிருக்கக் கூடிய திருச்செந்தூர் திருத்தலக் கடற்கரையில், பாற்கடலில் பள்ளி கொண்டிருக்க கூடிய மேன்மை பொருந்திய நன்மைச் செய்கின்றத் திருக் கரங்களை யுடைய நாராயணமூர்த்தி கீழுலகம் ஏழும் மற்றும் மேலுலகம் ஏழுமாக உள்ள பதினான்கு உலகங்களும் தழைப்பதற்காக "வைகுண்டர்" என்னும் நாமம் கொண்டு கலியுகத்தில் அவதாரம் எடுத்து வந்தார்.

கலி பிறந்த உடன்பூவுலகு மட்டுமல்லாமல் பதினான்குஉலகமும் கலியின்மாய்கையால்பாதிக்கப்பட்டது.எனவேஇவ்வாறுக்கலிமாய்கையால் பாதிக்கப்பட்டஉலகங்கள்அனைத்தும்மீண்டும்தழைத்துஅறநெறியில்இயங்க வேண்டும்என்பதற்காகவேஅய்யாநாராயணர்தன்னுடையக கலியுக அவதாரமாக வைகுண்ட அவதாரத்தைஎடுத்து வந்தார். அவ்வாறு அவர் எடுத்து வந்த உருவமானது யாராலும் எளிதில் அறிந்துக் கொள்ள முடியாத அளவில் இருந்தது. கலியுகத்தில் மாயவிளையாட்டாக அவரவர்கள் எந்தந்த உருவத்தில் நினைத்தார்களோ அந்தந்த உருவத்தில் காட்சிக் கொடுத்திருந்தார். இவ்வாறு அவர் புரிந்த மாய லீலைகளை எடுத்து சொல்வதற்கு ஈசனான அந்த சிவபெருமான் அருள் புரிய வேண்டும்.

இவ்வாறு வைகுண்ட அவதாரத்தை எடுத்து சொல்வதற்கு ஈசன் அருள் புரிய வேண்டும். இறையோன் என்றுச் சொல்லக்கூடிய மும்மூர்த்திகளும் அருள்புரிய வேண்டும். மேலும் மாயன் என்றுச் சொல்லக்கூடிய திருமால் அருள்புரிய வேண்டும். அவரின் மாதுவாகிய லெட்சுமியும் அருள்புரிய வேண்டும்.

மேலும் பூமகளான லெட்சுமியும், நாமகளான சரஸ்வதி தேவியும், புவிமகளானபூமா தேவியும், போர்மாது என்றுச் சொல்லக்கூடியச் சக்திதேவியும் வைகுண்ட அவதாரத்தை எடுத்துச் சொல்வதற்கு அருள் புரிய

வேண்டும். தண்டரளம் என்று சொல்லக்கூடிய குளிர்சியான முத்துமாலையை (தரளம்- முத்துமாலை) அணிந்திருக்கக் கூடியச் சரஸ்வதி அன்னையே நீயும் வைகுண்ட அவதாரத்தை எடுத்துச் சொல்ல அருள் புரிய வேண்டும். நாட்டில் மக்கள், எந்த குறைவும் இல்லாமல் மிகுந்த மகிழ்ச்சியோடு வாழ வேண்டுமெனில் அந்த நாட்டில் அம்பிகையின் அருள் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்க கூடிய அம்பிகையும் வைகுண்ட அவதாரத்தை எடுத்துச் சொல்ல அருள் புரிய வேண்டும். மேலும் பதினான்கு உலகங்களையும் இரட்சித்து காத்து பூவுலகு மேற்கொண்டு ஏழு உலகங்களையும் அளந்து நின்ற பரமேஸ்வரித்தாயும் வைகுண்ட அவதாரத்தை எடுத்துச் சொல்ல அருள் புரிய வேண்டும்.

நடை

ஈரே ழுலகும் இரட்சித்த உத்தமியே
பாரேழு மளந்த பரமே சொரித்தாயே
பத்துச் சிரசுடைய பாவிதனைச் செயிக்க
மற்று நிகரொவ்வா வாய்த்த தசரதற்குச்
சேயா யுதிக்கச் செடமெடுத் ததுபோலே
மாயாதி சூட்சன் மனுவாய் கலியுகத்தில்
பிறந்து அறமேல் பெரிய தவம்புரிந்து
சிறந்த குழலாள் சீதை சிறையதுபோல்
இருந்த சொரூபமதும் இமசூட்ச அற்புதமும்
மருந்தாகத் தண்ணீர்மண் வைத்தியங்கள் செய்ததுவும்
தர்ம வைத்தியமாய் தாரணியி லுள்ளோர்க்குக்
கர்மமது தீரக் கணக்கெடுத்துப் பார்த்ததுவும்
ஏகாபுரிக் கணக்கும் ஏழுயுகக் கணக்கும்
மாகாளி மக்கள் வைகுண்டர் பாதமதைக்
கண்டு தொழுததுவும் கைகட்டிச்சே விப்பதுவும்
தொண்டராய்ச் சான்றோர் சூழ்ந்துநின்ற வாறுகளும்
பண்டார வேசம் பத்தினியாள் பெற்றமக்கள்
கொண்டாடி நன்றாய்க் குளித்துத் துவைத்ததுவும்
கண்டுமா பாவி கலைத்து அடித்ததுவும்
சாணா ரினத்தில் சாமிவந்தா ரென்றவரை
வீணாட்ட மாக வீறுசெய்த ஞாயமதும்
மனிதனோ சுவாமி வம்பென்று தானடித்துத்
தனுவறியாப் பாவி தடியிரும்பி லிட்டதுவும்
அன்புபார்த் தெடுத்து ஆளடிமை கொண்டதுவும்
வம்பை யழித்துயுகம், வைகுண்டந் தானாக்கி
எல்லா இடும்பும் இறையு மிகத்தவிர்த்துச்
சொல்லொன்றால் நாதன் சீமையர சாண்டதுவும்
நாலுமூணு கணக்கு நடுதிர்த்த ஞாயமதும்
மேல் எதிரி இல்லாமல் வினையில்லா தாண்டதுவும்
இந்நாள் விவரமெல்லாம் எடுத்து வியாகரரும்
முன்னாள் மொழிந்த முறை நூல் படியாலே
நாரயணரும் வந்து நடத்தும் வளமைதனை
காரணமாய் எழுதி கதையாய் படித்தோருக்கு

ஒய்யாரமாக உள்வினை நோய் தீரும் என்று
அய்யாவும் இக்கதையை அருளுகின்றார் அன்போடு
பேயெரித்தும் புதுமைமிக செய்தருவும்
ஆயர் குலத்தை ஆளாக்கிக் கொண்டதுவும்
சான்றோர் குலத்தைத் தற்காத்துக் கொண்டதுவும்
நீண்டபுகழ் தர்மம் நிறுத்தியர சாண்டதுவும்
பத்தும் பெரிய பாலருக்கா கவேண்டி
சத்தழியும் பாவி தடியிரும்பி லுமிருந்து
படுத்தின பாட்டையெல்லாம் பாலருக்கா கப்பொறுத்து
உடுத்த துணிகளைந்து ஒருதுகிலைத் தான்வருத்தித்
தேவ ஸ்திரீகளையும் சேர்த்தெடுத்துப் பாலருக்காய்ப்
பாவக் கலியுகத்தில் பாராத்தியங் கள்பட்டு
நாலு பிறவி நானிலத்தி லேபிறந்து
பாலுகுடித் தாண்டி பருவதத்தின் மேல்தாண்டி
நல்லோரை யெழுப்பி நாலுவரமுங் கொடுத்துப்
பொல்லாரை நரகில் போட்டுக் கதவடைத்து
வானம் இடியால் மலைக ளிளகிடவும்
கானமது நாடாய்க் கண்டதுவுஞ் சூரியனும்
தெக்கு வடக்காய்த் திசைமாறி நின்றதுவும்
ஒக்கவே நாதன் உரைக்கிறா ரன்போரே
அய்யர உரைக்க அன்போ ர்கள் தங்கள் முன்னே
மெய்யாயெழுதி விதிப்பேனா என்பதெல்லாம்

விளக்கம்:

திரேதா யுகத்தில் குறோணியுடைய நான்காவதுத் துண்டத்திலிருந்து இராவணன் பிறவிச் செய்யப்படுகிறான். இராவணன் முன் விதியின் படி பத்துத் தலையுடைய அசுரனாகப் பிறவி எடுக்கிறான். அவ்வாறுப் பிறந்த ராவணனை வதம் செய்வதற்காக நாராயணர் இராம அவதாரம் எடுத்து புவியில் வந்தார். நாராயணர், தான் இராமப் பெருமானாக அவதாரம் எடுத்தப் போதிலும், அயோத்தியை ஆண்ட மன்னன் தசரதனுக்கு முதல் மகனாக மனுப் போல் அவதரித்தார்.

இறைவன் மனுவாக வருவாரா என்றக் கேள்விக்கு நமக்கு ராமபெருமானுடைய அவதாரமேச் சாட்சியாக அமைகிறது. இராவணனும் இராமபெருமானை ஒரு சாதாரண மனுவாகவே எண்ணி எள்ளி நகையாடினான். ஆனால் இராவணன் , இறுதியில் இறை அவதாரமான ராமருடைய கையினாலேயே அம்பொன்றால் மாண்டுப் போனான். அவ்வாறு எப்படி இராவணனை வதம் செய்வதற்காகத் தசரதனுக்கு ஒரு குழந்தையாக நாராயணர் மனுவாக அவதரித்தாரோ, அது போல இக்கலியுகத்தில் தேவர் முதற்கொண்டு யாருமே எளிதில் அறிந்துக் கொள்ளாதபடி நாராயணர் வைகுண்ட அவதாரத்தை எடுத்தார். அதனால் தான் இன்றும் "பரம்பொருளே அய்யா வைகுண்டமாக" வந்தார் என்ற உண்மையை உணராமல், மக்கள் இருகின்றனர்.

இவ்வாறு அந்த மாயாதி சூட்சன் வைகுண்டராக இவ்வுலகில் மனுப்போலவேகப் பிறந்து அதன் பிறகு ஆறு ஆண்டுகள் இவ்வுலகில் செய்வதற்கு அரிய தவத்தைச் செய்தார். கொடியப் பாவம் சூழ்ந்திருந்த இக்லியுகத்தில் தவம் புரிவது என்பது எளியக் காரியம் அன்று. கலியன் வருகிறான் என்று அறிந்த உடனேயே அதற்குமுன் தவத்தில் இருந்த முனிகள் நம்மால் இக்கலியில் தவம் செய்ய இயலாது என மலைகளிலும் குகைகளிலும்
ஓடி ஒளிந்து கொண்டனர். அப்படிபட்ட இந்தக் கலியுகத்தில் அய்யாச் சிறப்பானத் தவம் மேற்கொண்டார்.

இவ்வாறு தவம் மேற்கொண்டு, எப்படி அன்று அசோகவனத்தில் சீதாதேவி, ராமபிரான் இராவணனை அழித்து, தர்மத்தை காத்து, தன்னை அழைத்துச் செல்ல வேண்டும் என தவமாக(சிறை) இருந்தார்களோ, அதுபோலவே இக்கலியுகத்தில் நாராயணர் தன் பலங்களைக் காட்டாமல் தனுவை அடக்கிக் கொண்டு மக்களைக் காக்கவும், கலியை அழிக்கவும் தவமிருந்தார். மஹாலெட்சுமி அன்னையின் வடிவானச் சீதாதேவியினை அவர் நினைத்தாலொழிய ராவணன் நினைத்துச் சிறைப்படுத்த இயலாது. ஆயினும் ராவணன் அழிய வேண்டும். தர்மம் மீண்டும் நிலைப் பெற வேண்டும் என்பதற்குச் சிறையாக இருந்தார்.

அதுபோலவே அய்யா வைகுண்டரும் தன் பராக்கிரமங்களைத் தன்னுள் அடக்கிக் கலி அழியத் தவம் இருந்தார். அவ்வாறுத் தவம் இருந்தக் காலத்தில் அய்யா எண்ணற்ற அற்புதங்களைச் செய்தார். தன்னை நாடி வந்த மக்களுடையத் துன்பங்கள், துயரங்களைத் தண்ணீர் மண் கொடுத்துத் தீர்த்து வைத்தார். அவ்வாறுத் தண்ணீர் மண்ணால் சகல விதமான நோய் பிணிகளையும் தீர்த்து மக்களை அருகழைத்து வைத்துக் கொண்டார்.

அய்யா மண் தண்ணீரால் உடல் நோய்களையும், அவரவர்களுடைய முன்வினை என்று சொல்லக்கூடிய "கர்மங்களையும்" மக்களுக்கு தீர்த்து வைத்து அருள் பாலித்தார். கலியில் நாம் பிறந்திருப்பதே நம்முடைய கர்மத்தின் காரணமாகத்தான். அவரவர்களுடைய வினையின் காரணமாகவே நம்பிறப்பு அமைகிறது. அவ்வாறு அமைந்த நம்முடைய வினையை தீர்க்க வேண்டுமெனில் அது இறைவனைத் தவிர வேறுயாராலும் இயலாது.

நம்முடைய அய்யா நமக்காக இறங்கி எந்தவித பிரதிபலனும் இல்லாமல் தன்னை நாடி வந்த மக்களினுடைய உடல் நோய் நொம்பலங்களை தீர்த்து அருளினார். அது போல கர்மம் தீர அவரவர்களுடைய பாவ புண்ணியகணக்கை எடுத்து பார்த்து அதன் படி அவர்களுக்கு வேண்டிய பலன்களை கொடுத்து அருள் பாலித்தார்.

இவ்வாறாக ஏகாபுரிகணக்கு என்றுச் சொல்லக்கூடிய பரம் பொருளினுடைய கணக்கையும், அதுபோல இந்த புவியில் ஏழு யுகங்களாக நடத்தப்பட்ட யுகக் கணக்கையும் எடுத்து அய்யா வைகுண்டர் நடுதீர்ப்புச் செய்வதற்காக அவதாரம் அமைந்தது.

"மாகாளி மக்கள்"-ஏழு உலக தேவர்கள் சான்றோர்களாக சப்த கன்னியர்கள் மூலமாக நாராயணர் பூவுலகில் பிறவி செய்தார். பிள்ளைகளை பெற்ற

அம்மைமார்கள் அவர்களை பாராவண்ணம் தவத்திற்குச் சென்றார்கள். எனவே தந்தையாகிய நாராயண மூர்த்தி அந்த குழந்தைகளை வளப்பதற்காக பத்திரமாகாளியை தேர்ந்தெடுத்து அவளிடம் அப்பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பை கொடுத்தார். பிள்ளைகளை மகிழ்வோடு பெற்ற மாகாளியும் அவர்களை தாயின் இடத்திலிருந்து வளர்த்து அவர்களை ஆளாக்கினாள். சான்றோர்களும் மாகாளியின் மக்களாகவே வளர்ந்தார்கள்.

இவ்வாறு வளர்ந்த மக்கள் கலிபிறந்த பின்பு தங்களுடைய சுய அடையாளத்தை இழந்து கலியின் கொடுமையால் தங்கள் சுற்றத்தோடும் தங்கள் வம்மிசங்களோடும் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாயினர். அப்படி துன்பத்தில் இருக்கும் போது நம்முடைய தகப்பன் வந்தச் செய்தி உள் உந்துதலால் அறிந்து அவரையே சரணாகதி அடைந்தார்கள். அவரை கண்டு தொழுது ஆனந்தமாக குதுகலித்தார்கள். தாய்,தகப்பன் இல்லை என்று இருந்த எங்களுக்கு தகப்பனாக வந்து எம்முடைய துயரம்தீர்த்த அவருக்கு, கைகட்டி பணிவிடை செய்து தொண்டராக இருந்து அவரைச் சுமந்தும் தம் அன்பை வெளிபடுத்தினார்கள்.

அப்படி தம்மீது அன்பு கொண்ட மக்களுக்கு அவர்கள் மேலும் உயர்வடைந்து, இவ்வுலகமும் அவர்களால் மேன்மை அடைய வேண்டுமெனவும் அய்யா திருவுளம் கொண்டார். அவர்களுக்கு கலியை வெல்லக்கூடிய பண்டார வேசத்தை அணிவித்துமனம் செம்மைபட துவையல் தவசு எனும் உயர்ந்த தவத்தைச் செய்ய அருள் கொடுத்தார். அய்யாவின் அன்பாலும்,அருளாலும் அம்மக்கள் துவையல் தவத்தையும் சிறப்போடுச் செய்து முடித்தார்கள்

இதுவரை கலியில் அகப்பட்டிருந்த மக்கள் எல்லாம், அய்யாவின் அருளால் துன்பம் நீங்கி சுகம் பெற்று வாழ்ந்தார்கள். அம்மக்களும் தங்களுடைய இறைவன் வந்துவிட்டான் என்று உள்ளத்தால் உணர்ந்து பணிவிடை செய்தார்கள். இதைக் கண்டிருந்த கலிமன்னன், உலக நிலையில் இதுவரைக்கும் உயர்ந்தச் சாதியாக கருதக்கூடிய பிராமண நம்பூரி குலங்களில் இறைவன் வராமல், தீண்டத்தகாத இந்த சாணார் குலத்தில் இறைவன் வரமாட்டான் என எண்ணி அய்யாவுக்கும் அவரைச் சுற்றி இருந்த மக்களுக்கும் துன்பம் விளைவித்தான்.

எத்தனை துன்பங்கள் மன்னன் அளித்தும் எந்த எதிர்வினையும் ஆற்றாமல், படைகளுக்கு அகப்பட்ட ஒரு மனிதன் போலவே அக்கலி மன்னுக்கும் அவன் படைப் பரிவாரங்களுக்கும் தன்னைக் காட்டினார். கலிமன்னனும் “இறைவன் என்றால் எந்த எதிர்வினையும் ஆற்றாமல் இருப்பாரா” என எண்ணி கொண்டு, இவன் மனிதன் தான் என தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டான்.

அய்யாவும் தன் அவதார சூட்சுமம் இப்படி தான் இருக்க வேண்டும் என எண்ணியதால் அப்படியே அவனுக்கு காட்சி அளித்தார். கலி மன்னனும் அய்யாவுக்கு மிகுந்த துன்பத்தை கொடுக்கூடிய தண்டனைகளைக் கொடுத்தான். அத்தண்டனைகள் எதுவும் அய்யாவை ஒன்றும் செய்யாதபோதும், அவர் அத்தண்டனைகளை விரும்பி ஏற்றார். இவ்வாறு அந்த ஏகம் படைத்த பரம்பொருளின் "தனு" என்று சொல்லக்கூடிய பராக்கிரமங்களை அறியாதக் கலிமன்னன், கையில் விலங்கிட்டு அழைத்து சென்றான். சுவாமியும் புன்னகை மாறாமல் அவனுடன் சென்றார்.

சுவாமி எந்த விதமான எதிர் வினையும் ஆற்றாமல் இருப்பதை கண்ட கலிமன்னன் மற்றும் அவன் படைகள் பரிகாசித்ததை போலவே, அவருடன் அடுத்திருந்த அவரால் நன்மை பெற்ற மக்களில் பலரும் பரிகாசித்தார்கள். இத்தனை நாட்கள் நாமும் ஒரு ஏமாற்று சாமியின் பேச்சைக் கேட்டு அவன் அருகில் இருந்தோமே, என்று எண்ணி அவர்கள் அவரை விட்டுச் சென்றார்கள்.ஆனால் அய்யாவின் மீது உள் அன்பு கொண்டிருந்த மக்கள் மட்டுமே அவரோடு அவர் பின்னால் அழுது அழுது சென்றார்கள். அவ்வாறு உண்மையான அன்போடு இருந்த மக்களை "முக்கால் அடியால் உலகளந்த மாயன்" தன் மக்களாக எடுத்துப் பணிவிடைக்காக வைத்துக்கொண்டார்.

மேலும் கலிமன்னனுடையச் சோதனைகள் எல்லாம் முடித்து, இவ்வுலகில் கலியனுடைய ஆட்சியால் அவிழ்த்து விடப்பட்ட வம்புகள் அநியாயங்களை அழித்து, இவ்வுலகத்தை வைகுண்டருடைய அதிகாரத்தின் கீழ் கொண்டு வரக்கூடியதையும்,எல்லாவிதமான அடிமைத்தன வரியும், துன்பங்களையும் தீர்த்து, வைகுண்டம் என்று சொல்லக்கூடிய ஒரு சொல்லால், அவர் நினைப்புமட்டுமே அதிகாரமாக இருக்க கூடிய, இந்த பழம் பெரும் புவியை ஆளபோவதையும், ஏழு யுகமாக தோன்றிய அசுரனை அழித்து, ஒவ்வொரு யுகங்களிலும் படைக்கப்பட்ட மக்களுக்கு, அவர்களுடைய பலாபலன்கள் படி நடுதீர்ப்புச் செய்யப் போவதையும், மேலும் இனி ஒரு அசுரன் பிறவி இல்லாமல், எந்த விதமான கர்மங்கள் இல்லாமல், இந்த தொல்புவியை ஆளப்போவதையும் தந்தருளி, உலகம் தோன்றியது முதல் யுகங்கள் பிறந்து அவ்வுகங்களில் அசுரன் பிறவிச் செய்யப்பட்டு அவனை அழித்து கடந்த காலத்தையும், தற்போது இந்த கலியுகத்தில் நாராயணர் வைகுண்டமாக பிறந்து நடத்திய வளமைகளையும், மேலும் இவ்வுலகமும் அழிந்து இனி வரபோகக்கூடிய தர்மயுகத்தில் எப்படி வாழப்போகின்றோம் எனவும் முன்னமே வியாசர் எழுதி வைத்த நூற்படியே அவதாரங்கள் நடந்தது.

இவ்வாறு நாராயணர் இவ்வுலகில் நடத்தக்கூடிய வளமைகளை, அவர் ஏன் இத்தனை வளமைகளையும் நடத்துகிறார் என கருத்தாய் கொண்டு அதனை கதையாய் எழுதிபடித்தாலே, ஊழ் வினை என்று சொல்லக்கூடிய பிறவியின் பொருட்டு, கர்மத்தின் பொருட்டு வரக்கூடிய துன்பங்கள் வராமல் இருக்கும் என்பதற்காகவே அய்யா இந்த அகிலத்திரட்டம்மானை தந்தருளியிகின்றார்.

கலியன் பிறந்த பின்பு பதினான்கு உலகமும் வரம்பு தப்பிதடுமாறின. இது கைலையையும் விட்டு வைக்கவில்லை.கைலை வரம்பு தப்பியதால் சிவபெருமான் கோபம் கொண்டு நந்தீசுரனாரை அழைத்து, கைலை வரம்பழிய காரணம் என்ன என்று கேட்டார். அதற்கு நந்தீசுரனார் கலியன் பிறந்ததால் இந்த உலகில் தான தவம் அனைத்தும் குன்றின. முன்னிருந்த சாஸ்திர முறைகள் அனைத்தும் தவறின. எனவே உலகம் கலியிருள் சூழ்ந்து தடுமாறி நிற்கின்றது. திருமாலை வரவழைத்து இதனுடைய நிலைமையை கேளாதிருந்தால் இன்னும் நிலைமை மோசமாக ஆகிவிடும் என நந்தீசுரர் சிவபெருமானிடம் கூறினார்.

உடனே சிவபெருமான் நாராயணரை வருத்த வழி என்ன என்று நந்தீசுரரிடம் கேட்டார். அப்போது நந்தீசுரர், "இது பவம் (பவம் )சூழ்ந்த காலம் ஆகவே தவம் செய்து மாயவரை வருத்த இயலாது. எனவே பேய்க்கணங்கள் மாலையை சூடி தவம் செய்தால் நாராயணர் வருவார்" என கூறினார். நந்தி முனியினுடைய

சொல்படியே சிவபெருமான் பேய்க்கணங்கள் மாலையான வசு மாலையை அணிந்து தவம் புரிந்தார்

சிவபெருமானுடைய இச்செயலால் நாராயணர் இருப்பிடத்தில் இருக்க இயலாமல் சிவபெருமான் முன் தோன்றினார். நாராயணரை கண்ட சிவபெருமான் உள்ளம் மகிழ்ந்தார். ஆனால் நாராயணர் எல்லாம் இருக்கட்டும் முதலில் நீர் தரித்திருக்க கூடிய பேய்கணங்கள் மாலையை கழற்றி எறியுங்கள் என்று கூறினார். சிவபெருமானும் அவ்வாறே அந்த மாலையை கழற்றி அக்கினியில் எறிந்தார். அக்கினியில் மாலை விழுந்ததும் அதிலிருந்து பேய்கணங்கள் வெடித்து துள்ளிக்குதித்து சிவபெருமானை வணங்கி தங்களுக்கான வரங்களை கேட்டது. பேய்கள் கேட்ட வரங்கள் மிகவும் கொடியதாக இருந்தாலும், சிவபெருமான் அதனை கொடுக்க சம்மதித்தார்.

அப்போது அருகிலிருந்த நாராயணர், இப்போது இப்பேய்களுக்கு கொடுக்க கூடிய வரங்கள் நியாயமில்லை. இருப்பினும் கலிமுடியும் காலத்தில் இப்பேய்கள் இவ்வரங்களை வைத்து ஏதாவது தவறு செய்தால், அக்குற்றத்தினை கேட்டு அவர்களை அழிப்பேன் எனசிவபெருமானிடம் கூறினார்.தாம் அன்று சிவபெருமானிடம் கூறிய படியே நாராயணர் வைகுண்டமாக அவதாரம் செய்து பேய்களினுடைய குற்ற கணக்கை கேட்டு பேய்கள் செய்திருந்தது அநியாயம் தான் என தீர்ப்புரைத்து அப்பேய்களை அக்கினியில் விழச் செய்து அழித்தார். ஆயர்குலத்தை ஆளாக்கி கொண்டதுவும் யுகா யுகங்கள் தோறும் அவ்வுகத்தில் பிறந்த அசுரர்களை வதைத்து தீமையை அழித்து நன்மையை நிலைபெறச் செய்ய நாராயணர் தாமே இரங்கி பூவுலகில் அவதாரம் செய்கின்றார்.

அவ்வாறு துவாபரா யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணனாக அவதாரம் செய்து ஆயர் குலம் என்று சொல்லக் கூடிய யாதவர் குலத்தில் சார்ந்திருந்து அவர்களுக்கு வேண்டிய உபகாரங்களை செய்து தீய அரக்கர்களை அழித்து அந்த யுகத்திலும்தர்மத்தை நிலைபெறச் செய்தார். அது போலவே கலியுகத்தில் வைகுண்டமாக அவதரித்து சான்றோர் குலத்தில் சார்ந்திருந்து அடிமைபட்டு துன்பப் பட்டு கிடந்த அவர்களை மேலும் துன்பம் அடையாமல் தற்காத்துக் கொண்டார்.

நீண்ட புகழ் தர்மம்-கலியுகம் முடிந்த பின்பு அடுத்து வரக்கூடிய தர்மயுகத்தில் தமக்கு வேண்டிய மக்களை வரவழைத்து அவர்களை வைத்து தர்மயுகம் அரசு ஆளப்போவதையும் அய்யா அழகாக எடுத்துரைக்கின்றார்.

கலி பிறப்பிற்கு முன்பு, நாராயணர் தெய்வ கன்னியர் மூலமாக எல்லா விதத்திலும் சிறப்பு வாய்ந்த , தகுதி வாய்ந்த, உயர்வு பொருந்திய ஏழு சான்றோர்களை பிறவி செய்தார். அதன் பின்பு அவர்களை மாகாளி கையில் வளர்க்க கொடுத்து அவர்களுக்கு திருமணமும் செய்து வைத்து அவர்களுடைய கிளைவழியாக மக்களுடைய மக்களும் பெற்று சிறப்போடு வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறு வாழ்ந்து வரும் போது கலியன் பிறவியால் அவன் உலகம் முழுதும் பரந்து சான்றோர்கள் வாழ்ந்திருந்த தென் பகுதியை நோக்கி வந்தான்.இங்கே சிறப்போடு வாழ்ந்திருந்த சான்றோர்கள் கலியின் மாய்கையால் ஆட்பட்டு தங்களுக்குள்ளே பகைமை ஏற்பட்டு மிகுந்த

துன்பத்தில் உழன்றார்கள். மேலும் கலியன் அவர்களை மிகவும் துன்பத்திற்கு உள்ளாக்கினான்.

சான்றோர்கள் படும் வேதனையை கண்ட தேவர்கள் நாராயணரிடம் முறையமிட்டார்கள்.நாராயணரும் ஸ்ரீபத்மநாபராக இருந்து கலியனிடம் வேண்டிய புத்திமதிகளை கூறி சான்றோர்களுக்கு செய்த துயரங்களை விட்டு விடு என கூறினார். ஆனால் கலியன் கேளாத காரணத்தால் அவனிடம் இருந்து சென்று தாம் அம்மக்களை காக்கும் பொருட்டும், தர்மத்தை நிலைபெற செய்யும் பொருட்டும் வைகுண்ட அவதாரம் எடுத்து, அம்மக்களிடமே சென்று உபகாரம் செய்தார். அப்போது சான்றோர்க்கு உபகாரியாக இருந்த அய்யாவை கலியன் சேனைகள் பிடித்து தடியிரும்பில் இட்டார்கள். சொல்லொண்ணா கொடுமைகள் செய்தார்கள். கலியன் செய்த கொடுமைகளை வைகுண்ட பெருமான் அந்த மக்களுக்காக பொறுத்து கொண்டார்.

இந்த உலகத்தில் தீமையை அழித்து நன்மையை இடம்பெற செய்வதற்கு பல அவதாரங்களாக இவ்வுலகில் எடுத்தும், உலக நிலையில் உலக மக்களோடு பொருந்தி பற்று உள்ளவராக வாழ்ந்தாலும், உண்மையில் பந்த பாசங்களுக்கு கட்டுபடாமல் அதையும் தாண்டி இருப்பவனே இறைவன்.

அவ்வாறான இறைவன் இவ்வுலகில் கலியுகத்தில் நல்லோரை காக்கும் பொருட்டும் கலி என்ற தீயதை அழிக்கவும் வைகுண்ட அவதாரத்தை எடுக்க1008-ம்ஆண்டு மாசியில் திருவுளம் கொண்டார். மற்றைய முந்தைய அவதாரங்கள் போல் அல்லாமல் நாராயணரே வைகுண்டமாக, தந்தை மகனாக திருச்செந்தூர் பாற்கடலில் வைத்து தந்தை நாராயணர், மகன் வைகுண்டருக்கு விஞ்சைகளை அருளி அந்த அருள் விஞ்சைகளின்படி இனி இக்கலியுகத்தில் காரண காரியங்கள் நடத்தவேண்டும் என பூவுலகில் வந்தார்.

இவ்வாறு திருச்செந்தூர் கடலிலேயே மூன்று நாட்கள் மனுக்கள் கண்காணாமல் இருந்து இத் திருவிளையாடல்களை அய்யா நிகழ்த்தினார். மூன்று நாட்கள் கழித்தே வைகுண்டமாக அலைவாய்க்கரை ஆறுமுகப்பெருமான் இடத்தில் வந்து சட்டங்களை உரைத்தார்

"தானுந் தவமதுவாய்"- அய்யா வைகுண்டராக அவதாரம் எடுத்த பின்பு தான் பெற்ற அருள் விஞ்சையின் படி ஆறு ஆண்டுகள் தவமிருந்தார். முதன் முதலாக சுவாமிதோப்பை தேர்ந்தெடுத்து அங்கே தனது தவத்தை தொடங்கினார். இங்கே நாம் உற்று நோக்கினால், தவம் இருப்பது யாரென்று பார்த்தால் எந்த தவத்தை செய்து முனிகளும், ரிஷிகளும் கிடைத்தற்கு அரிய பேறான அந்த இறைவனை கண்டு தித்திக்கின்றார்களோ அந்த இறைவனே இங்கே தவமாக இருக்கின்றார். தவத்திற்கு எல்லாம் எது தவமாக இருக்கிறதோ அத் தவமே இங்கு தவமாக இருந்தது. உயிர்கள் நாம் முயற்சி செய்து இறைவனை கண்டு அவரோடு இரண்டற கலந்து சாயூச்சிய நிலையை அடைவதாக சொல்வார்கள்

ஆனால் கருணையுள்ள அந்த இறைவன் தவமே தவமாக இருந்து தன்னை வந்தடையக்கூடிய உயிர்களை தாமே வந்து எடுத்து தன்னுள் சேர்த்துக் கொண்டார்.நாம் வாழக்கூடிய இந்த கலியுகத்தில் நல்லோரும், பொல்லாதாரும் நிரம்பி இருக்கிறார்கள். உயிர்கள் பூவுலகில் கர்மங்களை நிகழ்த்தி தாம் கொண்டிருக்க கூடிய சரீரத்தை இழந்து போனாலும் அவை செய்திருக்க கூடிய

நன்மை தீமைக்கு ஏற்ப அவைகள் பிறவி எடுக்கின்றனர். அல்லது காத்திருக்கின்றன. இவ்வாறு காக்கபட்ட உயிர்கள் கலியுகத்தை அழித்து மீண்டும் தர்மயுகம் தோற்றுவிக்க கூடிய காலத்தில் வைகுண்ட பெருமானால் நியாய நடு கேட்க அவைகள் எழுப்பப்படுகின்றன.

தர்மயுகம் தோற்றுவிக்கப்படும் நேரத்தில் அய்யாவின் வருகையின் பொருட்டுஇவ்வுலகில் பிரளயம் ஏற்பட்டு வானம் இடி இடித்து மலைகள் இழகி உண்டாக்கி வைக்கப்பட்ட அனைத்தும் கருகி விடும். தற்போது கிழக்கு மேற்காக இருக்க கூடிய சூரியன் அக்காலகட்டத்தில் பிரளயம் ஏற்பட்டு தெற்கு வடக்காக போய்விடும் என அய்யா கூறுகிறார். அதன் பிறகே வைகுண்டபெருமாள் கடல் மூலமாக இந்த உலகை சுத்தம் செய்து அங்கே வெற்றி சங்கை எடுத்து ஊதுகிறார். வைகுண்டருடைய சங்கு சத்தத்தை கேட்டதும் இதற்கு முன்பு காத்திருந்த நல்ல உயிர்கள் வைகுண்ட பெருமானை தஞ்சம் அடைகின்றன. பொல்லாத உயிர்களை அவர்களுடைய நியாய நடு கேட்டு நரகத்தில் தள்ளப்படுகிறார்கள். இவ்வாறு இந்த அகிலத்திரட்டு அம்மானையில் அனைத்து காரியங்களையும் தெளிவுபட கூறுகிறார்.

## Day 3

அவையடக்கம்

அய்யா உரைக்க அன்போர்கள் தங்கள்முன்னே
மெய்யா யெழுதி விதிப்பேனா னென்பதெல்லாம்
ஆனை நடைகண்ட அன்றில் நடையதொக்கும்
சேனை சரிவதென்ன சிற்றெறும்பு பற்றியென்ன
குயில்கூவக் கண்டு கூகைக் குரலாமோ
மயிலாடக் கண்டு வான்கோழி யாடினதேன்
மடந்தை தேனீக்கள் வைத்த ரசமறிந்து
கடந்தை தாடேற்றும் கதைபோலே யானடியேன்
நாலுமூணு யுகமும் நடுத்தீர்க்க வந்தபிரான்
மேலோன் திருக்கதையை எழுதுவே னென்றதொக்கும்
எம்பி ரனான இறையோ னருள்புரிய
தம்பிரான் சொல்லத் தமியே னெழுதுகிறேன்
எழுதுவே னென்றதெல்லாம் ஈசனருள் செயலால்
பழுதுமிக வாராமல் பரமே ஸ்வரிகாக்க
விளக்கம்

உயர்வு பொருந்திய அகிலதிரட்டு அம்மானையானது அய்யா அருள நமக்கு அரிகோபால சீடன் என்று சொல்லக்கூடிய சீடர் மூலமாகவே நமக்கு கிடைக்க பெற்றது. இந்த அரிகோபாலன் என்பவர் அய்யாவின் அவதார காலகட்டத்தில் இராமகிருஷ்ண நாடார் என்று சொல்லக்கூடிய அன்பருடைய மகனாக பிறந்தார். இவர் முற் பிறப்பில் சகாதேவ சீடராக துவாபரா யுகத்தில் பிறந்தவர் என்றும் சொல்லப்படுகிறது. நாம் படிக்ககூடிய இந்த திருஏடானது அரிகோபால சீடர் எழுதியது என எண்ணினோமானால் எவ்வளவு மடத்தன்மை வாய்ந்தது என்பதை அரிகோபால சீடரே இங்குவிளக்கமாக நமக்கு கூறுகிறார்.

அப்படி ஒரு எண்ணம் இருப்பின் அது, ஆனை நடைக்கண்ட அன்றில் நடையதொக்கும் என கூறுகிறார். அதாவது யானைகளுடைய கம்பீரமான நடை என்பது யானைக்கே பொருத்தமாக இருக்கும் அதை விடுத்து தாமும் யானையைப் போல் கம்பீரமாக நடக்க முடியும் என்று ஒரு அன்றில் பறவை முயற்சித்து அது நகைப்பதற்கு உள்ளாகுமோ, அது போலவே அரிகோபாலன் இந்த அகிலதிரட்டு அம்மானையை எழுதினார் என மற்றவர்கள் கூறுவதற்கு ஒப்பாகும்.

மேலும், சேனைகள் அணிவகுத்து செல்லும்போது பார்ப்பவர்களுக்கு அதன் கம்பீரமும் அதனுடைய வீரமும் கண்கூடாக தெரியும். இப்படியாக சேனை அணிவகுப்பை பார்த்து எறும்புகளும் தங்களால் சேனை அணிவகுப்பை நடத்த இயலும் என இறுமாப்பு கொண்டு அணிவகுத்தால் அது நகைப்புக்குள்ளாகுமோ, அது போலவே அரிகோபாலன் இந்த அகிலத்திரட்டு அம்மானையை எழுதினான் என்று சொல்லுவது ஆகும்.

அகிலத்திரட்டு அம்மானையை எழுதுவதற்கு அரிகோபாலன் சீடரை அய்யா ஒரு கருவியாகப் பயன்படுத்தி சிறப்பை கொடுத்தாரே அன்றி, அரிகோபால சீடர் எழுதவில்லை. தம்மால் இந்த அம்மானை எழுதப்படவில்லை என்பதனை அரிகோபால சீடரே விளக்கமாக உவமை மூலம் எடுத்துரைக்கின்றார். எப்படியெனில் ,

குயில்களினுடைய இனிமையான குரல் எளிதில் அனைவரையும் கவரக்கூடிய வகையில் இனிமையைத் தரும். அப்படிபட்ட குயிலின் குரலைக்கேட்டு ஆந்தையானது தம்மாலும் குயிலின் இனிமையான குரலை எழுப்ப முடியும் என்று எண்ணிக் கொண்டு கூவி, தன்னுடைய குரலும், குயில் குரல் போலவே உள்ளது என எண்ணுவது, அரிகோபால சீடர் இந்த ஒப்பற்ற ஆகமத்தை அவரால் எழுதப்பட்டது என கூறுவது போலாகும்.

அது போலவே மயில்கள் தோகையை விரித்து ஆடும் அழகைக் கண்டு வான்கோழிகள் தோகை விரிக்க முற்பட்டு ஆடுவது போலவும், மேலும் தேனீக்கள் கூடுகட்டி அந்த கூட்டில் இனிமையான சுவையுடைய தேனினை தம் திறமையால் சேகரிப்பதைப் பார்த்து தங்களாலும் அவ்வகையான தேனைச் சேகரிக்க முடியும் என தங்களுடைய திறத்தால் கடந்தைகள் கூடுகட்டி தேனைச் சேகரிக்க நினைப்பது போல நகைப்புக்குரியதாகவே, இந்த அகிலத்திரட்டம்மானை அரிகோபால சீடர் தம் சொந்த திறத்தால் எழுதியது எனக் கூறுவது ஆகும்.

குறோணி பிறந்த முதல் யுகமான நீடிய யுகம் முதல் அதனைத் தொடர்ந்து வரக்கூடிய (நாலு+ மூணு) ஏழு யுகமாக, அவ்வுகத்தில் பிறந்த அசுரர்கள் அவர்கள் அழிவு, நல்லவைகள் தேர்ந்தெடுத்தல் என இக்கலியுகம் வரை நடுத்தீர்த்து அரசாள்வதற்கு வைகுண்டமாக அவதரித்த, அந்த அனைத்திற்கும் அதிபதியான ஏகப்பரம் பொருளின் திருக்கதையையும், வருங்கால நிகழ்வுகளையும் இவ்வாகமத்தில் அடியேன் எழுதுகிறேன் என்று சொன்னாலும் இது என்னால் நடக்ககூடியது அல்ல; எல்லாவற்றையும் நடத்துகின்ற அந்த மேலான இறையவன் அருள் புரிந்ததால் அடியவனான நான் இதை எழுதுகிறேன்.

## தெய்வம் பராவல்

ஈசன் மகனே இயல்வாய் இக்கதைக்குத்
தோச மகலச் சூழாமல் வல்வினைகள்
காலக் கிரகம் கர்மசஞ்சல மானதுவும்
வாலைக் குருவே வாரா மலேகாரும்
காரு மடியேன் கௌவை வினைதீர
வாரு மடியேன் மனதுள் குடிகொள்ளவே
தர்ம யுகமாக்கி தாரணியை யாளுதற்குக்
கர்மக் கலியில் கடவுளார் வந்தகதை
சாகா திருக்கும் தர்மஅன் புள்ளோர்முன்
வாகாகத் தர்ம அம்மானை தான்வகுத்தார்

## விளக்கம்:

இறையவன் அருளால் அடியவனான நான் எழுத எத்தனித்தாலும் இது ஈசன் என்றுச் சொல்லக் கூடிய அந்த சிவ பெருமானுடைய அருட்செயலே ஆகும். இவ்வாறு நான் எழுதக் கூடிய இந்த ஆகமத்தில் எந்த குறைபாடும் வராமல் இருக்கப் பரமேஸ்வரித்தாயானப் பார்வதி தேவி அருள் தர வேண்டும்.

மேலும் இந்த திருக்கதை எழுதும் போது அடியேனுக்கு என்னுடைய வினையின் பொருட்டு ஏதேனும் கால தோசங்கள், கிரக தோசங்கள், கர்மவினைகள் என எது இருந்தாலும் அவை இதனை பாதிக்காதவாறு ஈசருடைய மகனான வாலைக்குரு என்று என்றுச் சொல்லக்கூடிய கணபதி காக்க வேண்டும்.

இந்த ஆகமத்தை எழுதும் போது எந்த ஒரு பழி சொல்லும் (கொவை)அடியேனுக்கு வராதபடி இருக்க என்னுடைய மனதில் குடி இருக்க இறையவர் வர வேண்டும். இந்த அகிலத்திரட்டு அம்மானை படித்து உணர்ந்து வாழ்பவர்களுக்கு தர்மயுகம் என்று சொல்லக்கூடிய என்றும் நிலையான இறப்பு பிறப்பற்ற வாழ்வு கிடைக்கும். அப்படிபட்ட அந்த மக்களுக்காக அவர்கள் நலம் பெற்று நற்கதி அடைய வேண்டுமென இந்த அகிலத்திரட்டு அம்மானையை அய்யா அரிகோபால சீடர் மூலம் வகுத்து தருகிறார். இந்த அகிலத்திரட்டு அம்மானையில் கலியுகத்தில் இறைவன் அவதாரம் எடுத்ததையும் அவர் வைகுண்டம் எனும் நாமமதை கொண்டு கலியை தர்மத்தால் எரித்து இந்த உலகத்தை தர்மயுகமாக மாற்றி அதை ஆளுவார் என்றும் நிகழ்வுகளை கதையாகச் சொல்லி நமக்கு அருளுகிறார்.

## அடியெடுத்தருளல்

வகுத்த பிரம்மனுக்கும் மாதா பிதாவதுக்கும்
தொகுத்த குருவதுக்கும் தோத்திரந் தோத்திரமே
தோத்திர மென்று சுவாமி தனைத்தொழுது
ராத்திரி தூக்கம் நான்வைத் திருக்கையிலே
ஆண்டான ஆண்டு ஆயிரத்துப் பதினாறில்
கண்டானைக் கண்டேன் கார்த்திகை மாதமதில்
தெய்தியிருபத்தேழில் சிறந்தவெள்ளி நாளையிலே

சுகுதியுடன் நித்திரையில் சுபக்கியான லக்கமதில்
நாதனென் னருகில் நலமாக வந்திருந்து
சீதமுட னெழுப்பிச் செப்பினார் காரணத்தை
காப்பி லொருசீரு கனிவாய் மிகத்திறந்து
தாப்பிரிய மாகச் சாற்றினா ரெம்பெருமாள்
மகனேயிவ் வாய்மொழியை வகுக்குங் காண்டமதுக்கு
உகமோ ரறிய உரைநீ முதற்காப்பாய்
அதின்மேல் நடப்புன் உள்ளே யகமிருந்து
சரிசமனாய் நான்வகுப்பேன் தானெழுது காண்டமதை
நானுரைக்க நீயெழுதி நாடுபதி னாலறிய
யானுரைக்க நீயெழுதி அன்போர்கள் தங்கள்முன்னே

விளக்கம்:

மனிதராக பிறந்த நமக்கு மாதா, பிதா, குரு, தெய்வம் இந்த நான்கு பேரும் மிகவும் முக்கியமானவர்களாக இருக்கிறார்கள். இதில் தெய்வம் என்பது நம்மை நம் கர்மத்தின் பொருட்டு இவ்வுலகிற்கு அனுப்பி கர்மக்கடன் கழித்து மீண்டும் அவர் அடியை கண்டு கொள்ள ஒரு வாய்ப்பளித்து நம்மை அனுப்பி உள்ளார்.

மாதா, பிதா, என்று சொல்லக்கூடிய தாய் தகப்பன் பூவுலகில் நாம் பிறப்பதற்கு காரணமாக இருக்க கூடியவர்களாகவும், நம்மை வளர்த்துஆளாக்க கூடிய பணியையும் அவர்கள் செய்வனே செய்கிறார்கள். எனவே இப்பூவுலகில் நம் இருக்கும் வரை அவர்களை தொழுது பணிந்து நடப்பது நமது கடமை ஆகிறது. அடுத்ததாக குரு என்பவர் நம்மை நாம் யார் என உணர்த்துவதற்கு உதவிப் புரிகின்ற நம்வாழ்வின் ஒரு முக்கியமான ஒரு அங்கமாகிறார். அஞ்ஞானம் நம்மைச் சூழ்ந்து இருக்கும் போது அந்த அஞ்ஞானத்தை அகற்றி ஞானத்தை வழங்க கூடியவராக குரு இருக்கிறார்.

இவ்வாறு இருக்க கூடிய இவர்கள் அனைவருக்கும் நாம் நன்றி கடன் பட்டவர்களாகிறோம். எனவே இவர்களுக்கு ஒவ்வொரு நாளும் நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒரு இரவுப் பொழுது இவர்களை நினைத்து நன்றி தெரிவித்து, மேலும் மேலோனான அந்த இறைவனையும் தொழுது தூக்கத்தில் ஆழ்ந்தார் அரிகோபால சீடர்.

அகிலத்திரட்டு அம்மானை எனப்படும் நம்முடைய ஒப்பற்ற ஆகமமானது கலியுகத்தில் நாம் இறைவன் பற்றி அறிந்து கொள்ளவும், முன்யுகக் கணக்குகளையும் வரலாறுகளையும், இனி வரக்கூடிய உலகத்தின் தன்மை மற்றும் அதற்கு நாம் நடக்க வேண்டிய முறைகளையும் இறைவன் கருணை கொண்டு நமக்கு கொடுத்தருளியுள்ளார். இவ்வாறான இந்த அகிலத்திரட்டு அம்மானை நமக்கு அருளப்பட்ட ஆண்டு கொல்லம் ஆண்டு 1016 ஆகும். கொடுக்கப்பட்ட மாதம் கார்த்திகை மாதமாகவும், தியதியானது 27-ம் ஆகும்.

நம்முடைய இந்த அரும்பெரும் ஆகமம் தந்தருளப்பட்டதும், அது எவ்வாறு யாரால் தரப்பட்டது என்னும் வாசகங்களே மேலே குறிப்பிட்டுள்ள அகில வாசகங்கள் ஆகும். அய்யாவின் சீடர்களில் ஒருவரான அரிகோபால சீடர்

சிறப்பான வெள்ளிக்கிழமை அனைத்துக் கடமைகளையும் முடித்து விட்டு துயில் கொள்ளச் சென்றார். அன்றைய தினம் யாவருக்கும் கிடைக்க பெறாத பாக்கியமான எம்பெருமானைக் கனவில் காணும் பாக்கியத்தை அவர் பெற்றார்.

அவ்வாறு தூக்கத்தில் இருக்கும் போது நாதங்களின் மூலவனான அந்த நாராயணமூர்த்தி அரிகோபாலன் அருகில் வந்திருந்து அவரை எழுப்பி, இந்த அகிலத்திரட்டு அம்மானை எழுத வேண்டியக் காரணத்த எடுத்துரைக்கின்றார். அதோடு மட்டுமல்லாமல் அகிலத்திரட்டு அம்மானை எழுதுவதற்குத் தொடக்க காப்பான காப்பிற்கு ஒரு சீரினை(சொல்லினை) எடுத்துத் கொடுத்து மிகவும் விருப்பமாக இந்த ஆகமத்தை எழுதுவதற்கு அரிகோபால சீடரை பணித்தார்.

அய்யா அந்த காப்பில் ஒரு சீரை தம் வாயாலே சொல்லி, "மகனே அரிகோபாலா" நான் சொல்லித் தந்த இந்த வாக்கியத்தை நீ எழுதக்கூடிய இந்த ஆகமத்திற்கு காப்பாக உரை எழுது. அதன் பிறகு இந்த ஆகமத்தில் நடக்ககூடிய நிகழ்ச்சியை உன்னுடைய அக நிலையில் நான் இருந்து நான் எடுத்துரைப்பேன். அதை என் சொல் குறைவு படாமல் தரக்கூடியதாக இருக்கும் அதை காண்டமாக எழுது என அரிகோபாலனுக்கு அய்யா எடுத்துரைத்தார்.

நூற்பயன்

வாசிக்கக் கேட்டு மகிழ்ந்திருந்த அன்போர்க்குப்
பூசித்து நின்ற பூரணங்கள் கிட்டுமடா
பழித்தோர் நகைத்தோர் பதிலெதிரி யாய்ப்பறைந்தோர்
கழித்தோர் வறுமைகண்டு கடுநரகம் புக்கிடுவார்
மலடியு மிக்கதையை மாவிருப்பத் தோடிளகி
தலமளந்தோ னைநாடி தான்கேட்பா ளாமாகில்
என்னாணை பார்வதியாள் ஏகாபரத்தின் தன்னாணை
உன்னாணை மதலை உடனே கிடைக்குமடா
குட்டமது கொண்டோர் குணம்வைத்துக் கேட்பாரேல்
திட்டமது சொன்னோம் தீருந் திருவாணை

விளக்கம்:

அகிலத்திரட்டு அம்மானையானது நம்முடைய இந்த உலகமானப் பூவுலக மக்கள் கலியை கடக்க தரப்பட்ட ஆகமம் மட்டுமல்ல. நம்முடைய ஆகமங்கள் உலகங்கள் மொத்தம் எத்தனை என்பதை கீழுலகு ஏழு மற்றும் மேலுலகு ஏழு எனப் பதினான்காகப் பிரித்து கூறுகிறது. அவ்வாறுச் சொல்லப்பட்ட அந்த பதினான்கு உலகங்களுக்கும் பொதுவான ஒரு ஆகமாக இந்த அகிலத்திரட்டு அம்மானையை அய்யா நமக்கு தந்தருளியுள்ளார்.

இவ்வாறான இந்த ஆகமம் ஏதோ அரிகோபாலன் மூலமான இறைவன் அருள் கொண்டு மட்டும் கிடைக்கப்பெற்றது மட்டுமல்ல. அந்த இறைவனே தம் திருவாய் மலர்ந்து உரைக்கப்பெற்று நமக்கு கிடைக்கப் பெற்றது ஆகும். அதைத்தான் அய்யா இங்கே "நானுரைக்க நீ யெழுதி நாடு பதினாலறிய"என்று நானே உரைக்க ஒரு கருவியாக அதை நீ யெழுதி இந்தப் பதினான்கு உலகங்களும் அறிவதற்காக எழுது எனச் சொல்கிறார். அவ்வாறு நான் சொல்லி அதை நீ எழுதி, பின் "இதனை யாரெல்லாம் எடுத்து வாசிக்கின்றார்களோ,

யாரெல்லாம் வாசிப்பதை உள்ளம் மகிழ்ந்து கேட்கின்றார்களோ அவர்களுக்கு பூரணம் என்று சொல்லக்கூடிய முழுமை அவர்களுக்கு கிடைக்கும்".

நாம் இவ்வுலகில் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு காரணம் பிறப்பில் நமக்கு முழுமை கிடைக்காததே ஆகும். எப்போது நாம் முழுமையான அந்த பரிபூரண நிலையை கிடைக்கும் பாக்கியம் கிடைக்கின்றதோ, அப்போது நமக்கு பிறப்பற்ற நிலை அடைந்து நாம் முழுமை அடைகின்றோம். அவ்வாறான அந்த பரிபூரண நிலை நமக்கு இந்த அய்யா அருளித்தந்த அகிலத்திரட்டு அம்மானையை வாசிப்பதாலும் அதை உளம் மகிழ்ந்துகேட்பதாலும் கிடைக்கிறது.

"பழித்தோர் நகைத்தோர் பதிலெதிரி யாய்பறைந்தோர்
களித்தோர் வறுமைகண்டு கடுநரகம் புக்கிடுவார்
மலடியும் மிக்கதையை மா விருப்பத் தோடிளகி
தலமளந்தோ னைநாடி தான்கேட்பா ளாமாகில்
என்னானை பார்வதியாள் ஈஸ்வரியின் தன்னானை
உன்னானை மதலை உடனே கிடைக்குமடா"

அகிலத்திரட்டு அம்மானையானது நல்நினைவோடு அய்யாவை மனதிலிருத்தி வாசிக்கும் போதுக் கிடைத்ததற்கு அரிய பேறானது கிடைக்கும். ஆனால் இவ் ஆகமத்தினையும் அதில் கூறப்பட்டக் கருத்துக்களையும் தீய நோக்கோடுப் பழித்துப் பேசினாலோ அல்லது இவ் ஆகமத்தில் வரும் நிகழ்ச்சிகளைக் கேட்டு எண்ணி நகைத்தாலோ அவர்கள் வாழ்வில் மேன்மை அடைய முடியாது. அகிலத்திரட்டம்மானையானதுத் தெய்வ மொழி ஆகும். இதில் கூறப்பட்டக் கருத்துக்கள் அவரவர்க்கு இறைவன் கொடுக்கப்பட்ட ஞானத்தின் அடிப்படையில் புரிந்துக் கொள்ளக்கூடியது ஆகும். எனவே காரணம் போல் இவ்வாகமத்தில் சொல்லப்பட்டக் கருத்துக்களை, காரணம் அறியாமல் ஏதோ என்னவோ என்று எண்ணி நகையாடினால் அவர்களுக்கு நரகமே கிடைக்கும்.

மேலும் கூறப்பட்டக் கருத்துக்களுக்கு வேண்டுமென்றே பதிலெதிர் கருத்து கூறுவார்களும், தீய எண்ணத்தோடுச் சிரித்துப் பழிப்பவர்களுக்கும் கடுமையான நரகம் அவர்களுக்கு கிடைக்கும். ஆனால் மலடி என்று தூற்றப்பட்டு, குழந்தை செல்வம் இனி வாய்க்கப்பெறாது என இந்த உலகில் ஒதுக்கப்பட்டவர்கள் கூட இந்த ஆகமத்தையும் அதில் கூறப்பட்ட கருத்துக்களையும் மிகவும் விருப்பப்பட்டு இந்த உலகங்களை மூன்றடியால் அளந்த மாயவனை விருப்பப்பட்டு தேடி அவன் திருநடையில் அவர் நினைவால் கேட்பாளாகில் அய்யா தன் பேரில் ஆணையிட்டு, உடனே அவருக்கு குழந்தை செல்வம் கிடைக்கும் எனக் கூறுகிறார்.

தன்மீது ஆணையிட்டு கூறுவதோடு அல்லாமல், இந்த ஆகமத்தை வைகுண்டத்தில் நாராயணர் சொல்ல அதை கேட்டு கொண்டிருக்கின்ற அம்மை லட்சுமியின் பேரிலும் ஆணையிட்டுக் கூறுகிறார். மேலும் தன் தங்கையின் பேரில் பார்வதி, ஈஸ்வரி என அனைவர் பெயரிலும் ஆணையிட்டு இது திட்டமாக (நிச்சயமாக) நடக்கும் என உறுதியிட்டு உறுதிபடக் கூறுகிறார்.

"குட்டமது கொண்டோர் குணம் வைத்து கேட்பீரால்
திட்டமது சொன்னோம் தீருந் திருவாணை"

மேலும் இந்த ஆகமத்தினைப் படிப்பதால் வாழ்வில் என்னென்ன நன்மை நடக்கும் என பின்வருமாறு கூறுகிறார்.

குட்டம் என்றுச் சொல்லக்கூடிய குஷ்டநோய் மிகவும் கொடுமையான நோய் ஆகும். இந்தக் குஷ்டநோய் ஒருவருக்கு ஏற்பட்டால், அவர் குடும்பமே அவரை வெறுத்து ஒதுக்கக்கூடிய ஒரு கொடிய நோய் ஆகும். ஆனால் அப்படிப்பட்ட இந்த நோய் கொண்டவர்கள் கூட இந்த ஆகமத்தை மிகுந்த மனம் வைத்துக் கேட்கும் போது, உறுதியாக அந்த நோய் தீரும் என அய்யா அம்மைப் பேரில் ஆணையிட்டு கூறுகிறார். அவ்வளவு சிறப்பு பொருந்தியது அகிலத்திரட்டு ஆகமம் ஆகும்.

## Day4

தெச்சணா புதுமை

நாரா யணரும் நல்லதிருச் செந்தூரில்
பாரோர்கள் மெய்க்கப் பள்ளிகொண் டங்கிருந்து
ஆண்டா யிரத்து அவென்ற லக்கமதில்
நன்றான மாசி நாளான நாளையிலே
சான்றோர் வளரும் தாமரையூர் நற்பதியில்
மூன்றான சோதி உறைந்திருக்குந் தெச்சணத்தில்
வந்திருந்த நற்பதியின் வளமைகே ளம்மானை
மூவாதி மூவர் உறைந்திருக்குந் தெச்சணமே
தேவாதி தேவர் திருக்கூட்டந் தெச்சணமே
நாதாந்த வேதம் நாடுகின்ற தெச்சணமே
அகத்தீ சுவரரும் அமர்ந்திருக்குந் தெச்சணமே
மகத்தான மாமுனிவர் வாழுகின்ற தெச்சணமே
தாணுமால் வேதன் தாமதிக்குந் தெச்சணமே
ஆணுவஞ்சேர் காளி அமர்ந்திருக்குந் தெச்சணமே
தோசமிகு கர்மம் தொலைக்கின்ற தெச்சணமே
நீச வினைதீர நீராடுந் தெச்சணமே
மாது குமரி மகிழ்ந்திருக்குந் தெச்சணமே
பாறு படவு பரிந்துநிற்குந் தெச்சணமே
ஆனைப் படைகள் அலங்கரிக்குந் தெச்சணமே
சேனைப் படைத்தளங்கள் சேருகின்ற தெச்சணமே
ஆகமக் கூத்து ஆடுகின்ற தெச்சணமே
பார்வதியாள் வந்து பரிந்திருந்த தெச்சணமே
சீர்பதியை ஈசன் செய்திருந்த தெச்சணமே
மாயனாய்த் தோன்றி வந்திருந்த தெச்சணமே
ஆயனார் கூத்து ஆடுகின்ற தெச்சணமே
தெச்சணத்தின் புதுமை செப்பத் தொலையாது
அச்சமில்லாப் பூமி அடவுகே ளம்மானை

கச்சணி தனத்தா ளோடு கறைமிடத்தண்ண லீசர்
பச்சமால் முனிவர் தேவர் பதுமலர்க் கமலத் தேவி
நிச்சய மான கன்னி நிறைந்திடும் பூமி யான
தெச்சாண புதுமை சொல்லிச் சீமையி னியல்புஞ் சொல்வோம்

"நாராயணரும் நல்லத் திருச்செந்தூரில்
பாரோர்கள் மெய்க்கப் பள்ளி கொண்டு அங்கிருந்து
ஆண்டாயிரத்து 'அ' என்ற லக்கமதில்
நன்றான மாசி நாளான நாளையிலே
சான்றோர் வளரும் தாமரையூர் நல்பதியில்
மூன்றான சோதி உறைந்திருந்த தெச்சனத்தில்
வந்திருந்த நல்பதியின் வளமைகேள் அம்மானை"

கிருஷ்ண அவதாரத்தை நிறைவுச் செய்த நாராயணர் அடுத்த யுகமான கலியுகத்தில் தன்னுடைய அவதாரமாக வைகுண்ட அவதாரத்தை எடுக்க திருச்செந்தூர் கடலுள் சென்று, அங்கு மகரத்துள் சென்று வைகுண்ட அவதாரமாக திருச்செந்தூர் கடலில் விஞ்சைப் பெற்று வெளிவந்தார். பின்பு அவர் திருச்செந்தூரிலிருந்துப் புறப்பட்டுத் தவமிருக்கத் தெச்சணம் நோக்கி வந்தார். அவர் வந்த ஆண்டு ஆயிரத்து எட்டு (1008) ஆகும். இந்த ஆயிரத்து எட்டு என்பது கொல்லம் ஆண்டு ஆகும்.(இங்கே 'அ' என்பது 8 என்னும் எண்ணைக் குறிக்கும்). மேலும் அவதாரம் நிகழ்த்திய மாதம் “மாசி” மாதம் ஆகும். இவ்வாறாக மாசி மாதம் 1008 - ம் ஆண்டு அய்யா தெச்சணம் நோக்கித் தவம் இருப்பதற்காக வந்தார்.

இந்தத் தெச்சணத்தில் சான்றோர்கள் மிகுதியாக வாழ்ந்து வந்தார்கள். மேலும் மூன்றானச் சோதி என்று இறைச் சக்திகள் மற்றும் இறை அவதாரங்கள் அனைத்தும் நிறைந்து இருக்கக்கூடியச் சிறப்புத் தெச்சணத்திற்கு உண்டு. தாணு, மால், அயன் என்றுச் சொல்லக்கூடிய சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூவர்களும் ஒருங்கே இருக்க கூடியச் சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயமும் இந்தத் தெச்சணத்தில் உண்டு. அப்படிப்பட்டச் தெச்சணத்தில் அய்யா வைகுண்டர் வந்து நடத்திய வளமைகள் மேலும் சொல்லப்படு வருகின்றது.

"மூவாதி மூவர் உறைந்து இருக்கும் தெச்சணமே
தேவாதி தேவர் திருக்கூட்டந் தெச்சணமே
வேதப்புரோகி விளங்குகின்ற தெச்சணமே

நாதாந்த வேதம் நாடுகின்ற தெச்சணமே"

தெச்சணம் என்பது தென்பகுதி என்றும் பொருள் படும். இந்தத் தென்பகுதிலேயே இறை அவதாரங்கள் மிகுதியாக நிகழ்ந்திருக்கிறன. இங்கேயே மூவாதி மூவர் என்ற மும்மூர்த்திகள் உறைந்திருக்கின்றனர். தேவாதி தேவர் என்றத் தேவர்களை திருக்கூட்டமாக அருள்பாலித்து உறைந்திருக்கக் கூடிய இடம் இந்தத் தெச்சணம் ஆகும். இறைவனைப் பற்றி அறியக்கூடிய வேதங்களையும், ஆகமங்களையும் ஓதுகின்ற வேதபுரோகிதர்கள் எப்போதும் வேதங்களை ஓதுகின்ற இடமாக இந்தத் தெச்சணம் அமைந்துள்ளது. நாதாந்த வேதம் என்றுச் சொல்லக்கூடிய இந்த உலக இயல்பை விட்டு அதையும் தாண்டி இறைவனை அடையக்கூடிய நிலையைச் சொல்லக்கூடிய அந்த நாதாந்த

வேதத்தைப் பற்றி மக்கள் விரும்பி அறிந்து அதை நாடக்கூடியவர்களாகத் தெச்சணத்து மக்கள் இருந்தார்கள்.

"அகத்தீசுரரும் அமர்ந்திருக்கும் தெட்சணமே
மகத்தான மாமுனிவர் வாழுகின்ற தெட்சணமே
தாணுமால் வேதன் தாமதிக்கும் தெட்சணமே
காளி அமர்ந்திருக்கும் தெட்சணமே"

அகத்தீசுரர் என்ற அகத்திய மாமுனிவர் வந்து அமர்ந்திருக்கக் கூடிய இடம் நம்முடையத் தெட்சணாப் பூமி ஆகும் .இங்கே அகத்தீசுரர் அமர்ந்தக் காரணம் பின்வரும் சிவபுராணக் கதை விளக்குகிறது .சிவபெருமானுடைய திருமணம் கைலாயத்தில் நடந்தப் போது அனைத்துத் தேவர்கள் ரிஷிகள் முனிவர்களும் அங்குக் கூடியதால் வடதிசைத் தாழ்ந்துத் தென்திசை உயர்ந்தது இதனால் நிலைகுலைந்தத் தேவர்கள் உலகை சமநிலைப் படுத்த வேண்டும் என சிவபெருமானிடம் வேண்டினர். அவர் அகத்திய முனிவரை அழைத்து நீ தென்திசைக்குச் சென்று உலகைச் சமநிலைப்படுத்து என்றுக் கேட்டுக் கொண்டார். உடனே அகத்தியர் சிவபெருமானைப் பணிந்து வணங்கி நான் தென்திசை நோக்கிச் செல்கிறேன். ஆனால் தங்களுடையத் திருமணக் கோலத்தைப் பார்க்க இயலாநிலை எனக்கு ஏற்படுமே என தனது மனக்கவலையைச் சிவபெருமானிடம் பகிர்ந்தார்.

உடனே சிவபெருமானும் தென்திசையில் எந்த இடத்தில் இருந்து உலகைச் சமப்படுத்துகிறாயோ, அந்த இடத்தில் உனக்கு திருமணகோலத்தில் காட்சி அருளுவேன் என வாக்குக் கொடுத்தார். அகத்தீசுரரும் தெட்சணம் நோக்கிவந்தார். அப்போது உலகம் சமநிலைப்பட்டது. அங்கேயே சிவபெருமானும் அவருக்குத் திருமணக் காட்சியைக் கொடுத்தார்

இப்படியாக மகத்தான மாமுனிவர்கள் பலரும் வாழுகின்றப் புண்ணியப் பூமியாக தெட்சணம் உள்ளது. மேலும் தாணு என்று சொல்லக்கூடிய சிவபெருமானும், மால் என்று சொல்லக்கூடிய திருமாலும், வேதன் எனப்படுகின்ற பிரம்மாவும் ஆகிய மும்மூர்த்திகளும் அமர்ந்து அருளாசிப் புரிகின்ற இடமாக இந்தத் தெட்சணம் உள்ளது. மேலும் மாகாளி என்று சொல்லக்கூடியக் காளிதேவி இந்தத் தெட்சணத்தில் அமர்ந்து அருளாசி வளங்கக்கூடியச் சிறப்புப் பொருந்திய இடமாகத் தெட்சணாபூமி உள்ளது

" தோசமிகு கர்மம் தொலைக்குகின்ற தெட்சணமே
மாதுகுமரி மகிழ்ந்திருக்கும் தெட்சணமே
பாறு படவு பரிந்து நிற்குந்தெட்சணமே"

கர்மங்களை தொலைக்கும் இடமாகத் தெட்சணம் விளங்குகிறது. தோசங்கள் என்பவைக் கர்மங்கள் அடிப்படையில் வருகின்றன. இந்தத் தோசங்கள் நம்மை இறைவனை அறிய விடாமலோ அல்லது நாம் இவ்வுலகில் துன்பத்தில் சிக்குண்டு போகக் காரணமாகவோ அமைகின்றது. இப்படியான நம்முடைய வினைகள் (கர்மங்கள்) தீருவதற்கு இந்தத் தெட்சணா பூமிஉதவுகிறது. ஏனெனில் அனைத்து விதமான இறை ஆசிகளும் இந்தத் தெட்சணா பூமியில் எப்போதும் விளங்கி கொண்டிருப்பதால், நம் கர்மங்கள் எளிதில் கரைபட்டுப் போகின்றன.

மேலும் நீசவினை எனப்படுகின்றப் பாவத்தினால் ஏற்படும் வினைகள் தீருவதற்குமுதன்மைஇந்ததெட்சணாபூமியேஆகும். மாது குமரிஎனப்படுகின்றப் பகவதி தாய் மனமகிழ்ந்து இறைக்காட்சி கொடுத்துக் கொண்டிருப்பதும் தெட்சணாபூமியே ஆகும். மேலும் பாறுப் படவு எனப்படுகின்ற இயற்கை வளங்களும் உயிர்களும் சிறந்து இருக்ககூடிய இடமாக தெட்சணாபூமி உள்ளது.

"ஆனைப்படைகள் அலங்கரிக்கும் தெட்சணமே
சேனைப்படைத் தளங்கள் சேருகின்ற தெட்சணமே
ஆகமக் கூத்து ஆடுகின்ற தெட்சணமே
பார்வதியாள் வந்து பரிந்திருந்த தெட்சணமே
சீர்பதியை யீசன் செய்திருந்த தெட்சணமே"

மேலும் தெட்சணத்தில் யானைப்படைகள் சேனைப்படைகள் என்றுச் சொல்லக்கூடிய படைகள் படைவகுக்கின்ற அழகும் சிறப்பு பொருந்தி வீரத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்தது. இந்தத் தெட்சணத்திலேயே மூவேந்தர்கள் என்கின்ற சேர,சோழ,பாண்டியர்கள் வாழ்ந்து தங்கள் ஒப்பற்ற புகழை நிலை நிறுத்தி அரசு ஆண்டார்கள். அவர்களுடைய வீரம் இன்றளவும் போற்றக்கூடியதாகவே உள்ளது. மேலும் ஆகம கூத்து என்கின்ற இறைவனை பற்றி கதைகளாகவும், உரையாடல்களாகவும், நாடகங்கள் வாயிலாகவும் மக்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய நிகழ்வுகள் அதிகம் நடந்துக் கொண்டிருந்தது. இறைவனைப் பற்றிய பாடல்கள், என்றும் அழியாதவைகளாக இருக்கக் கூடியதும் இந்தத் தெட்சணத்திலேயே. இவ்வாறான ஆகமக்கூத்துகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. மேலும் சிவபெருமானும் பார்வதியும் இந்த தெட்சணத்திலே வந்திருந்து மகிழ்வோடுச் சேர்ந்து இருந்ததும் தெட்சணா பூமியிலேயே ஆகும்.

திருமாலினுடைய அவதாரங்கள் பெரிதும் இந்த தெட்சணத்திலேயே நிகழ்த்துள்ளது. அவர் மாயவனாக உருவெடுத்து வந்து தம் லீலைகளை வெளிப்படுத்தியது இந்தத் தெட்சணத்திலேயே ஆகும். மேலும் தம் அவதார இகனைகளை இப்பூவுலகினர் கண்டு நலம் பெற பல வேடங்களை இட்டதுவும் இந்த தெட்சணமே ஆகும். அவர் அவதாரம் முலம் நிகழ்த்திய அற்புதங்களை மக்கள் தங்கள் வாழ்வின் போது அதை மறவாமல் அவன் பெருமைகளைக் காலத்தோடுக் கூத்து நடத்தி எப்போதும் அவன் நினைவாக வாழ்ந்து வருவதும் இந்தத் தெட்சணத்திலேயே ஆகும்.

## சீமையின் இயல்பு

புன்னை மலர்க்காவில் பொறிவண் டிசைபாட
அன்ன மதுகுதித்து ஆராடுஞ் சோலைகளும்
கன்னல் கதலி கரும்பு பலாச்சுளையும்
எந்நேர மும்பெருகி இலங்கிநிற்குஞ் சோலைகளும்
எங்கெங்கும் நாதம் இடுகின்ற பேரொலியும்
பொங்கு கதிரோன் பூமேற் குடைநிழற்ற
நந்தா வனம்பூத்து நகரி மணம்வீச
செந்தா மரைபூத்துச் செலம்புமணம்வீச
அரகரா வென்று அபயமிடு மொலியும்
சிவசிவா வென்று துதிக்கின்ற பேரொலியும்

முடியு மடியுமில்லா முதலோனைப் போற்றொலியும்
மடியில் பணம்போட்டு மார்க்குத்தும் பேரொலியும்
முத்தாலே பாண்டி முதன்மடவா ராடொலியும்
மத்தாலே மோரு மடமடென்ற பேரொலியும்
சமுத்திரத்து முத்து தான்கரையில் சேருவதும்
குமுத்திரளாய்ப் பெண்கள் குரவை யிடுமொலியும்
சங்கீத மேளம் தானோது மாலயமும்
மங்கள கீதம் வகுக்கின்ற ஆலயமும்
காரண வேதக் கல்விமொழி ஆலயமும்
வாரணத்தின் மீதில் வரும்பவனி யாரபமும்
மாவேறி வீதி வரும்பவனி வீதிகளும்
கூரை யிலேமுத்து குலைசாய்க்கும் கன்னல்களும்
பாதையிலே பார்ப்பார்க்குப் பைம்பொன் னளிப்பாரும்
அன்னமிடுஞ் சாலைகளும் ஆலயங்கள் வைப்பாரும்
சொர்ண மளித்துச் சொகுசுபெற நிற்பாரும்
சிவனே சிவனேயென்று சிவகருத்தாய் நிற்பாரும்
தவமே பெரிதெனவே தவநிலைகள் செய்வாரும்
கோவிந்தா வென்று குருபூசை செய்வாரும்
நாவிந் தையாக நால்வேதம் பார்பாரும்
மாரி பொழியும் மாதமொரு மூன்றுதரம்
ஏரி பெருகி ஏரடிக்க மள்ளரெல்லாம்
நாத்து நடும்புரசி நளினமிகு சொல்லொலியும்
கூத்து ஒலியும் குருபூசை தன்னொலியும்
எப்பாரெல் லாம்புகழும் ஏகா பதியதுபோல்
தப்பாத தெச்சணத்தின் தன்மையீ தம்மானை

விருத்தம்

காமனை எரித்த ஈசன் கழலிணை மறவா வண்ணம்
பூமணக் குழலாள் கன்னி பொருந்திடும் நகரி யான
சீமையின் குணமுஞ் சொல்லிச் சிறந்திடும் பூமி தன்னில்
நேமவர் தர்ம ஞாய நிலைதனை நிகழ்த்து வாரே

விளக்கம்:

## தெட்சணா பூமி சீமையின் இயல்பு

பூத்து குலுங்கி மணம் வீசும் மலர்களும், காய்த்துக் கனிந்த கனிகளும் , தேன் சேர்க்கும் தேனீக்களின் இரைச்சலும், தெட்சணா பூமி சீமையின்இயல்பு ஆகும் . பலா, தென்னை, கமுகு இவைகளுடன் சோலையாய் நிழல் கொடுக்கும் மரங்கள், சுகம் தரும் இனிய தென்றல் காற்று வீசும் சுகம் இவைகளோடு தேவகானமாய் பறவை களின் குரலும், கைலாசம் போல் காட்சிக் கொடுப்பதும் தெட்சணத்தின் இயல்பு ஆகும்.

கோவில்களில் சிவசிவா, அரகரா என்கிற இறை நாம ஒலி திக்கெட்டும் புகழ் பரப்பும் மக்களின் வீர விளையாட்டுக்கள் இறைவனைப் போற்றிப் பாடும்

சங்கீத இசை. ஆழ்கடல் முத்துக்கள் உரசும் ஒலி போல் பெண்களின் ஆனந்தச் சிரிப்பு ஒலி, மோர் கடையும் மத்தின் ஓசை, கடல் அலையோடு விளையாடும் சிப்பிகள் உரசும் ஒலி ,அது மட்டுமல்ல, பெண்களின் ஆனந்த குரவை ஒலியும் , மங்களகரமாக இறைவனை துதித்து போற்றும் பஜனை பாடல்களின் இசையும், உகப்படிப்பின் இனிமையும், உச்சிப்பாட்டு ஓதுவதால் கிடைக்கின்றப் பேரருளும் , வேதங்கள் கற்கும் சிறப்பு சாலைகளும், மந்திரங்களை ஓதுவதற்காக அமைக்கப்பட்ட வேத சாஸ்திர வகுப்புகளுமாக எங்கும் நோக்கிலும் மனதை சாந்தமாக்கு கின்ற இயல்புடையது தெட்சணா பூமி.

மேலும் கோயில்களில் சுவாமி யானை மேல் அமர்ந்து ஊர்வலம் வருவதை காண வரும் மக்களின் ஆரவார பேரரவம். குதிரை வாகனத்தில் சுவாமி பவனி வரும் அழகும், அலங்காரமும் ,சுவாமியை வரவேற்கும் பொருட்டு சீர்வரிசைகளும், வாழை மரத்தோடு குலைகள் தொங்கும் அலங்காரத்துடன் பூஜை தட்டுகளுடன் காத்து நிற்கும் பெண்களின் பேரழகு, பார்ப்பவர்கள் கண்களைப் பிரமிக்கச் செய்யும். தர்மம் செய்பவர் சிலர்.

அன்னம் கொடுப்பார் சிலர். சிவமே பொருளென்று துதிப்பவர் சிலர், தியானத்தில் அமர்ந்து இருப்பார் ஒருபுறம். கோவிந்தா கோவிந்தா என்று கோஷமிடுவர் சிலர், சங்கின் நாதமும், சாஸ்திர வேத முழக்கமும் , எங்கும் கேட்பதுப் பார்த்தால் சொர்க்கத்தை தருகின்ற வைகுண்டம் கைலாயம் போல் காட்சி கொடுப்பது தெட்சணத்தின் இயல்பு ஆகும்.இவ்வாறு இத்தலத்தின் சிறப்பையும் அதன் இயல்பையும் மகிமை பெற்று விளங்கும் சிறப்புகளை சொல்லிவிடமுடியாது.

"அன்னமிடு சாலைகள் தோராலையங்கள் வைப்பாரும்
சொர்ண மளித்துச் சொகுசுபெற நிற்பாரும்
சிவனே சிவனேயெனச் சிவகருத்தாய் நிற்பாரும்
தவமே பெரிதெனவே தவநிலைகள் செய்வாரும்
நாவிந்தையாக நால்வேதம் பார்பாரும்"

மேலும் தெட்சணத்தின் பெருமையைப் பற்றி சொல்லும் போது மக்களினுடைய பசியினை போக்ககூடிய அன்னசாலைகளை ஆங்காங்கே வைத்து பசித்து வரும் மக்களுக்கு அவர்களினுடைய பசியை போக்கும் பொருட்டு வைத்தார்கள் இல்லாதவர்களுக்கு எதையும் கொடுத்து அதன் மூலம் வரும் புண்ணியத்தையே பிரதானமாக எண்ணி அதை கொஞ்சமும் தயக்கம் இல்லாமல் கொடுக்க கூடியவர்களாக இருந்தார்கள். மேலும் எப்போதும் இறை பக்தியில் இருந்து ஒரே நினைவில் அந்த ஆதிமூல சிவத்தை போற்றி சிவ சிவ என்று சொல்லி தங்கள் வாழ்நாளையே தவமாகமேற்கொண்டு எல்லாவற்றிலுமே தவம்தான் பெரிது என்று போற்றி சிவனை போற்றி இருக்க கூடியவர்களாக இருப்பவர்களும் அதே நேரத்தில் கோவிந்தா என்று அந்த திருமாலை போற்றி வேதங்களில் சொல்லப்பட்ட கருத்துக்களை ஆய்ந்து தெளிந்து அதன் உண்மைப் பொருளை எடுத்து சிவமும் நாராயணமும் வேறுபாடு அல்ல என தெளிந்து இறை பக்தியில் சிறந்து வாழ்ந்து வந்தார்கள்.

"மாரி பொழியும் மாதமொன்று மூன்றுதரம்
ஏரி பெருகி ஏரடிக்க மள்ளரெல்லாம்

நாத்து நடும்புரசி நளினமிகு சொல்லொலியும்
கூத்து வொலியும் குருபூசை தன்னொலியும்
எப்பாரெல்லாம் புகழும் ஏகாபதியதுபோல்
தப்பாத தெட்சணத்தின் தன்மை யீதம்மானை"

ஒரு நாடு சிறப்பாக செழிப்பாக இருக்க வேண்டுமெனில் அங்கே மழையானது குறைவில்லாமல் இருக்க வேண்டும் பஞ்ச பூதங்களில் ஒன்றான நீரானது மக்களின் அடிப்படைத் தேவையான உணவு உற்பத்திக்கு அடித்தனமாக விளங்குகிறது. அந்த நீரின் அதிபதியான வருணன் ஒரு நாட்டிற்கு அதன் அரசாட்சியைப் பொறுத்தும் அதில் வாழக்கூடிய மக்களின் வாழ்க்கை முறைக்காவும் மகிழ்ந்து மாதம் மூன்று முறை மழையை பொழிவிப்பான் இந்த மூன்று தரம் என்பது பழம் நூல்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கும்.

"வேதம் ஓதிய வேதியர்க்கு ஓர்மழை
நீதிமன்னர் நெறியினுக்கு ஓர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க்கு ஓர் மழை "

இப்படியாக ஒரு மாதத்திற்கு மூன்று மழை ராச்சியத்தில் பெய்யும் என சொல்வார்கள் ஒரு மாதத்தில் மூன்று மழை பெய்யும் போது அங்கு தண்ணீருக்கான எந்த விதமான பிரச்சனைகளும் இருக்காது ராட்சியமும் செழிப்பாக இருக்கும். இந்த ஒழுங்கு நிலைகள் தெட்சணத்தில் சிறப்பாக அமைந்திருந்த படியால் தெட்சணத்தில் மாதம் தவறாமல் மூன்று மழை பெய்து வந்தது. இப்படி மூன்று தரம் மழை பொழிவதால் அங்கிருக்ககூடிய ஏரிகள் நிரம்பி மக்கள் விவசாயம் சிறப்பாக செய்ய எத்தனித்தார்கள். குறிப்பாக விவசாய பெருங்குடிகள்(மள்ளர்கள்) மிகுந்த சந்தோசத்தோடு நாத்து நடுவதற்கு செல்வார்கள். இவ்வாறு நாற்று நடுவதில் ஈடுபடும் பெண்டீர்கள் தங்கள் களைப்பு தெரியாமலும், செய்யும் வேலையை ரசனையோடும் ஆனந்தமாகவும் பாடல்களை பாடிக்கொண்டு செய்வார்கள். அவர்களுடைய அந்த பாடல் ஒலி இனிமையாக கேட்டுக் கொண்டிருக்கும்.

இவ்வாறாக செழிப்பாக தெட்சணம் விளங்கியதாலும், அங்கிருந்த மக்கள் எப்போதும் சந்தோசத்தில் இருந்ததாலும் அங்கே ஆலய வழிபாடுகளும், இறைவனை போற்றக்கூடிய முறைமைகள் சிறப்பாக நடந்தது. மேலும் நாட்டில் எப்போதும் கூத்துகள் என்று சொல்ல கூடிய ஆடல் பாடல்கள் நடந்து கொண்டே இருந்தன. இதைக் கண்டு கொண்டு யிருந்த மற்ற தேசத்து மக்கள் எல்லாம் தெட்சணாபூமியின் சிறப்பை பார்த்து புகழ்ந்து கொண்டே இருந்தார்கள்.

"காமனை எரித்த ஈசன் கழலிணை மறவா வண்ணம்
பூமணக் குழலாள் கன்னி பொருந்திடும் நகரியான
சீமையின் குணமும் சொல்லிச் சிறந்திடும் பூமி தன்னில்
நேமவர் தர்ம ஞாய நிலைதனை நிகழ்த்து வாரே"

ஒரு சமயம் சிவபெருமானுடைய தவத்தினை கலைத்து அசுரர்களை அழிக்க உபாயம் பெற தேவர்கள் முனைந்தார்கள். தேவர்கள் சிவபெருமானின் தவத்தை எவ்வாறு கலைக்கலாம் என ஆலோசித்து, அவர்கள் மன்மதனுடைய உதவியை நாடினார்கள். மன்மதனும் மோக மலர்கணையை சிவ பெருமான் மீது

தொடுத்தான். இதனால் கோபம் கொண்டு சிவபெருமான் கண் திறந்து மன்மதனை நோக்க, மன்மதன் அங்கே எரிந்து போனான். இப்படி அந்த காமனை கண்ணால் எரித்த சிவபெருமானுடைய திருஅடியினை பின்பற்றி தெட்சணம் இருந்தது . மேலும் தெய்வ சக்திகள் நிறைந்து அருள் பாலிக்கும் இந்த தெட்சணத்தின் சிறப்பை சொல்லி இனிமேல் இந்த நாட்டிலுள்ள அன்பான மக்கள் (நேமவர்) அவர்கள் கடைபிடித்த தர்மங்கள் மற்றும் நாட்டை ஆளுகின்ற மன்னன் செய்த தர்ம ஞாயங்களை சொல்லி வருகின்றார்.

# Day5

தர்மநீதம்

ஆதிப் பொருளை அனுதினமுந் தானோதி
சோதி யுடநீதம் சொல்லுவே னம்மானை
தெய்வ மனுநீதம் தேசாதி ராசநீதம்
மெய்யருந்தும் நீதம் விளம்புவே னம்மானை
ஆயிரத்து எட்டு ஆனதிருப் பதிக்கும்
வாயிதமாய்ப் பூசை வகுப்பு முடங்காது
கோயில் கிணறு குளங்கரைக ளானதையும்
தேய்வு வராதே சேருமதில் கோட்டைகளும்
எளியோர் வலியோர் என்றெண்ணிமிகப் பாராமல்
களிகூர நன்றாய்க் கண்டவழக் கேயுரைப்பார்
அன்ன மடம் வைத் தகங் களிகூர
எந்நேரம் பிச்சை இடுவா ரெளியோர்க்கு
பந்தலிட்டுத் தண்ணீர் பக்தர்க் களிப்பாரும்
எந்த இரவும் இருந்துபிச்சை யீவாரும்
ஆறி லொருகடமை அசையாமல் தான்வேண்டி
தேறியே சோழன் சீமையர சாண்டிருந்தான்
சிவாயநம வென்ற சிவவேத மல்லாது
கவாயமாய்ச் சொல்லக் கருத்தறிய மாட்டார்கள்
ஆறி லொருகடமை அதுதரவே மாட்டோமென்று
மாறொருவர் சொன்னால் மன்னன்மறுத் தேகேளான்
பன்னிரண் டாண்டு பரிவா யிறையிறுத்தால்
பின்னிரண் டாண்டு பொறுத்திறை தாருமென்பான்
இவ்வகையாய் சோழன் இராச்சியத்தை யாண்டிருந்தான்
அவ்வகையாய் சோழன் ஆண்டிருக்கும் நாளையிலே
மெய்யறிவு கொண்ட மேலாம்பதத் தெளிவோன்
தெய்வத் திருநிலைமை செப்புவே னம்மானை

விருத்தம்

இவ்வகை யாக சோழன் இருந்து ராச்சியத் தையாள
கவ்வைக ளில்லா வண்ணம் கலியுகம் வாழும் நாளில்
செவ்வகைத் திருவே யான திருவுளக் கிருபை கூர்ந்து
தெய்வமெய் நீதம் வந்த செய்தியைச் செலுத்து வாரே.

விளக்கம்:

தெட்சணாபூமியை சோழ மன்னன் ஆண்டிருந்தான். அவ்வாறு அவன் ஆண்டு கொண்டிருக்கும் போது எந்த விதமான பூசை புனக்காரங்களும் முடங்காமல் ஆலயங்களுக்கு செய்து வந்தான்.

அப்படிப்பட்டஅந்தசோழனுடைய ஆட்சியில் தெய்வ நீதம், மனு நீதம்,ராச நீதம், போன்றவை எப்படி சிறந்திருந்தது என பின் வரும் வாசகத்தில் சொல்லப்படுகிறது. அவ்வாறு சொல்வதற்கு ஆதிப் பொருளான அந்த சிவபெருமானை தினமும் வணங்கி அவர் அருளால் நீதங்களின் நிலைமையை சொல்லுகின்றேன்.

இவ்வாறாக தெட்சணாபூமியின் சிறப்பை அய்யா சொல்லி வரும்போது இனி இந்த தேசத்தை ஆண்டிருந்த சோழ மன்னனின் சிறப்புகளையும், அந்த மன்னவன் ஆளப்பட்ட குடிகள் எவ்வாறு வாழ்ந்து வந்தார்கள் என்பதையும் சிறப்பாக சொல்லி வருகின்றார்.

முன்பு நம் நாட்டினுடைய தென்பகுதியினை சேர,சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். இவர்களுடைய ஆட்சியில்தான் இறைவனுக்கான ஆலயங்கள் அதிகமாக கட்டப்பட்டன. இறைவனுக்கான வழிபாடு என்பது எந்தவித தங்கு தடையுமின்றி சிறப்பாக செய்யப்பட்டது. பூசை ,புனக்காரம் முதலியவை குறைவுபடாமல் செய்யப்பட்டது. மன்னர்களின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்ட இடங்களில் வசிக்ககூடிய குடிகள் இறைவனை வணங்குவதற்க்காக ஏராளமான கோயில்கள் ஏற்ப்படுத்தப்பட்டது.

அவைகள் சாதாரனமாக இல்லாமல் கலை நுணுக்கங்களுடன் ஏற்படுத்தப்பட்டன. அப்படி ஏற்படுத்தப்பட்ட பல கோயில்கள் இன்றளவும் கம்பீரமாக நிற்பதை நாம் கண் கூடாக பார்க்கலாம். இப்படிப்பட்ட ஆலயங்கள் வெறும் இறைவழிபாட்டிற்கு மட்டுமல்லாமல் நம்முடைய கலாச்சாரத்தை பிரதி பலிக்ககூடியவையாகவும் விளங்குகின்றன. எல்லாவித கோவில்களிலும் நீர் நிலைகள் அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வந்தன.

இப்படி அமைக்கப்படுகின்ற ராச்சிய சிறப்புகளை பாதுகாக்கும் பொருட்டும், தம் எல்லையை பலப்படுத்தும் பொருட்டும் பெரியபெரிய மதிற்கோட்டைகள் அன்றைய மன்னர்களால் உருவாக்கப்பட்டு அவை கம்பீரமாக இன்றளவும் காட்சிக்கு நிற்கின்றது இப்படி தன்னுடைய ராச்சியத்தை மன்னவர்கள் பாதுகாத்து வந்தார்கள்.

இப்படி சிறப்பாக ஆட்சிபுரிந்து வந்த சோழ மன்னனுடைய ராச்சியத்தில் இருந்த மக்கள் உண்மைத் தன்மையுடனும், சத்தியத்தின் வழி நடப்பவர்களுமாக இருந்தார்கள். நேர்மையை கடைப்பிடித்து வாழ்பவர்களாலேயே உண்மைதன்மையை நிலைநாட்ட முடியும். அதற்கு உதாரணமாக தெட்சணாபுரி மக்கள் வாழ்ந்து வந்தார்கள். ஒரு குற்றம் நடந்தது அதற்கு உதாரணமாக தெட்சணாபுரி மக்கள் வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு குற்றம் நடந்ததுஎன்றால் அதில் குற்றம் செய்தவரும் பாதிப்படைந்தவர்களும் நீதி விசாரணைக்கு சென்றால், வந்தவர்களில்

தவறிழைத்தவர்கள் வேண்டப்பட்டவராகவோ (அல்லது செல்வத்தில் பெரியவராகவோ மதிப்பு மிக்கவராகவோ இருந்தாலும், அதை அத்தனையும் பார்க்காமல் எந்தபக்கம் நியாயம் இருக்கிறது என்பதைப் பார்த்து தீர்ப்பு வழங்குபவர் தீர்ப்பினை வழங்க வேண்டும்.

அது போலவே, குற்றத்தை பார்த்தவரும் தனக்கு வேண்டப்பட்ட நபராகவே குற்றம் செய்தவர் இருந்தாலும் நியாயம் எதுவோ அதன் சார்பாக நின்று பேசவேண்டும். இன்றைய காலகட்டத்தில் நியாயத்தையும் , நேர்மையும் புறம் தள்ளி தமக்கு ஏற்றவர்க்கு ஒருசார்பு நியாயம் கூறுவதையே நாம் பல இடங்களில் பார்க்கின்றோம். ஆனால் தெட்சணத்தில் வாழ்ந்த மக்கள் கலிவயப்படாமல் இருந்த காரணத்தில் அவர் கண்ட வழக்கை உரைப்பவர்கள இருந்தார்கள். அதாவது அவர்கள் எதை பார்த்தார்களோ அதையே சொல்பவர்களாக இருந்தார்கள். அதில் எந்தவிதமான திருத்தலும் பிறழ்ச்சியும் இல்லாமல் உள்ளதை உள்ளபடி நியாத்தை நியாயபடியும் சொல்பவர்களாகவும் இருந்தார்கள்.

தெட்சணத்தில் வாழ்ந்து வந்த மக்கள் அறத்தினை பேணி காப்பவர்களாக இருந்தார்கள். தாம் செய்யக்கூடிய செயல்கள் அறத்திற்கு உட்பட்டதா என ஆய்ந்து அதனை செய்தார்கள். அறங்களில் மிகவும் உன்னதமான சிறப்புவாய்ந்த அறமாக கருதப்படுவது அன்னம் கொடுப்பது ஆகும். பசித்து வருபவர்களுக்கு அவர்கள் பசியை போக்குதல் ஆகச்சிறந்த அறம் ஆகும். அவ்வறத்தினை தெட்சணத்தில் வாழ்ந்து வந்த மக்கள் சிறப்பாக செய்து வந்தார்கள், ஆங்காங்கே அன்னமடங்கள் வைத்து பசியோடு வருபவர்களுக்கு அவர்கள் எங்கிருந்து வந்தாலும் , அவர்களை ஆதரித்து அவர்களுடைய பசியை போக்கி, அவர்களுக்கு வேண்டிய உதவியை செய்பவர்களாக இருந்தார்கள்.

தொலைதூரத்திலிருந்து வருபவர்கள் அவர்களினுடைய பயணத்தின் போது எந்த நேரத்தில் அவர்கள் சென்றடைய கூடிய சேருமிடத்தை சென்றடைவார்கள் என தெரியாது . ஒருவேளை இரவு நேரமாக இருந்தால் அவர்களுக்கு பசியாற வழியில்லாமல் சென்றுவிடும். இதனைக் கருத்தில் கொண்ட தெட்சணாபுரி மக்கள், யார் எந்த நேரத்தில் வந்தாலும் அவர்கள் பசியை போக்கும் வண்ணம் அன்னமடங்கள் வைத்து வந்தவர்கள் பசியை போக்கினார்கள்.

மேலும் பந்தல்கள் அமைத்து அதிலே தாகத்தை தீர்க்க தண்ணீர் வைத்து, நாடி வருபவர்களின் தாகத்தை தீர்ப்பவர்களாக இருந்தார்கள்கோடைகாலத்தில் பயணம் வருபவர்கள் மிகுந்த களைப்பாக இருப்பார்கள். அவர்களுக்கு தாங்கள் கொடுக்க கூடிய தண்ணீர் மிகவும் உதவிகரமாக இருப்பதோடு, பந்தலிலே அமர்ந்து இளைப்பாறி செல்வதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.32 அறங்களுள் தண்ணீர் கொடுத்து உதவுவதும் ஒரு அறமாகும். ஆகவே தெட்சணத்தில் வாழ்ந்த வந்த மக்கள் அறத்தினை மிகவும் ஒழுக்கமாக கடைபிடிப்பவர்களாக இருந்தாகள்.

ஒரு அரசு இயங்க வேண்டுமெனில் வருவாய் என்பது மிக முக்கியம். மன்னர்கள் தமது அரசாங்க வருவாய்யை பெரிதும் நம்பி இருந்தது குடிகளின் நில வரியே ஆகும். சோழ மன்னன் தன் நாட்டு குடிகளிடம் வரியைப் பெற்று

அதன்மூலம் சிறப்பாக ஆட்சி செய்து வந்தான்.அரசு வரியினை குடிகளிடம் வசூலிக்கும் போது அவற்றை பறித்து எடுக்காமல் , எப்படி ஒரு மரம் அதன் கனிகளை தானாக கொடுக்கின்றதோ அது போல வலிக்காமல் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படியாக சோழ மன்னனும் தன் குடிமக்களிடம் வரியினை, குடிமக்கள் சிரமமில்லாமல் கொடுக்கும் பொருட்டு நியாயமான வரியினையை விதித்தான். அதாவது நிலத்தில் விளையும் விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு விளைச்சல் வரியாக பெற்று தன்னுடைய தேசத்தை ஆண்டு வந்தான்.

மக்கள் அனைவரும் எப்போதும் இறை சிந்தனை மிக்கவர்களாகவே இருந்தார்கள். மன்னனும் பல ஆலயங்களை கட்டி இறைவழிபாட்டினை ஊக்குவித்ததால் மக்களும் இறைவனை பற்றி அறிந்து கொண்டார்கள். எப்போதும் எந்த சூழ்நிலையிலும் இறைவன் துணை உண்டு என இறைவனை பற்றிப் பிடித்து சிவ நாமத்தை சொல்பவர்களாகவே இருந்தார்கள். இவர்கள் இறை சிந்தனை செய்வதற்கு மட்டுமே அறிவார் அல்லாது அதை மறுத்து சொல்வதற்க்கு சிந்தனையில் கூட எண்ணமாட்டார்கள்.

அய்யா மேலும் வாசகத்தில் சோழமன்னன் எவ்வளவு சிறப்பாக ஆட்சி புரிந்தான் என்பதையும், அவன் தன் நாட்டு மக்களிடம் எவ்வாறு வரி வசூலித்தான் என்பதையும் அழகாக சொல்லி வருகின்றார்.

முன்னமே பார்த்தபடி சோழ மன்னன் நிலத்தில் விளையும் விளைச்சலில் ஆறுபங்கில் ஒரு பங்கு விளைச்சலை வரியாக பெற்றுக் கொண்டான் என பார்த்தோம். ஆனால் இப்படி வசூலிக்க கூடிய வரியில் கூட அவன் கண்டிப்புடனோ, கட்டாயமாகவோ அந்த வரியை வசூலிக்கவில்லை. ஏதோ
ஒரு சூழ்நிலையின் பொருட்டு தன் மக்கள் அந்த வரியை செலுத்த முடியாமல் போனால் கூட மன்னன் “நீங்கள் வரியை செலுத்திதான் ஆகவேண்டும் என்று கட்டளையிடுவதில்லை. அவர்களிடம் அம்முறை அந்த வரியை கேட்காமலே இருந்து விடுவான், ஏனென்றால் அதுதான் தர்மம்.

அரசு மக்களை செழிப்போடு வைத்திருந்தால், குடிகளும் மனமுவந்து நாட்டுக்கு கொடுக்க வேண்டிய தீர்வையை செலுத்திவிடுவார்கள். ஆனால் நாம் இன்றைய சூழலில் அப்படியான தர்மத்தினை அரசிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. அதுபோலவே நாமும் நம் கடமை அறிந்து அந்த வரியை செலுத்துவதில்லை. கலிமாயை நம்மை தர்மத்தினை கடைபிடிக்க விடுவதில்லை. ஆனால் இதிலெல்லாம் மேலாக ஒருபடி மேல் சென்று நாம் இறைவனுக்கு திருவிழா எடுப்பதற்கும் வரி வசூல் செய்யும் நிலையும் அதை கட்டாயமாக வசூலிக்கும் நிலைமையும் நம்மை சுற்றி நடந்து கொண்டு தான் இருக்கின்றது. இப்படி வசூலிக்கும் போது ஏழை எளியவர்களையும் விட்டு வைப்பதில்லை. அவர்களும் மானத்திற்காகவும், ஊரினை பகைக்க கூடாது என்பதற்காகவும், தங்கள் உடமைகளை அடமானம் வைத்து வரி செலுத்துவதை நம் கண் முன்னால் பார்க்கவே செய்கின்றோம்.

ஆனால் சோழமன்னன் தர்மத்தை அறிந்திருந்த காரணத்தால், இல்லை என்று சொல்பவர்களிடம் தனக்கு கட்டவேண்டிய வரியையே கேட்காமல் விட்டுவிடுவான். மேலும் அவன் தன்னுடைய தேசத்தில் ஒரு முறைமையை

கையாண்டிருந்ததான். அதாவது தன் அரசுக்கு வரி செலுத்தகூடிய மக்கள் தொடர்ச்சியாக தவறாமல் 12 ஆண்டுகள் வரியை செலுத்தி இருந்தால், அடுத்து வரக்கூடிய 2 ஆண்டுகள் அவர்கள் தாங்கள் கட்ட வேண்டிய வரியை செலுத்த தேவை இல்லை என்னும் முறைமையை கடைபிடித்து வந்தான். இதனால் மக்கள் அனைவரும் மிகவும் மகிழ்வோடு சோழனின் அரசாட்சியில் வாழ்ந்து வந்தார்கள். இவ்வகையாய்ச் சோழன் ராஜ்ஜியத்தை ஆண்டிருந்தான் அவ்வகையாய்ச் சோழன் ஆண்டிருக்கும் நாளையிலே

"மெய்யறிவு கொண்ட மேலான் பதத்தெளிவோன்
தெய்வத் திருநிலைமை செப்புவே னம்மாமை”

இப்படியாக அய்யா இந்த அகிலத்திரட்டு அம்மானையில், தெட்சணாபூமியினுடைய சிறப்பை சொல்லி, பின் அதில் வாழ்ந்திருந்த மக்களுடைய சிறப்பான மனு நீதத்தை சொல்லி, பின்பு அந்த தேசத்தை ஆண்டிருந்த ராஜன் எவ்வாறு ஆட்சி புரிந்தான் என்ற ராஜ நீதத்தையும் கூறி,
இனி இந்த தேசத்தில் எவ்வாறு தெய்வத்தினுடைய அனுக்கிரகம் இருந்தது என்பதை அய்யா சொல்லி வருகின்றார்.

இந்த சோழமன்னன் இத்தனை சிறப்புகளாக தர்மநிலை தவறாது ஆட்சிபுரிந்த யுகம் நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்க கூடிய கலியுகமே ஆகும். யுகம் கலியுகமாக இருந்தாலும், ஆட்சி என்பது தர்மநிலை தவறாது நடந்து வந்தது. காரணம் என்னவென்றால் அந்த ராச்சியத்தை கலிமாயை பற்றாமல் இருந்தது. ஆகவே கலியனுக்கு இந்த தேசம் அகப்படாமல், அவன் அரசாட்சி அங்கு நடைபெறாமல், தெய்வ அருளோடு சோழமன்னன் நியாய நெறிப்படி ஆட்சி புரிந்து வந்தான. இப்படி சோழமன்னன் புரிகின்ற, ஆட்சியில் தெய்வநீதம் எவ்வாறு செயல்பட்டது என்பது மேலும் அய்யா நமக்கு சொல்லி வருகின்றார்.

## Day 6

### தெய்வ நீதம்

வாரம தில்லாமல் மன்னன் அதிசோழன்
நீதமாய்ப் பூமி நிறுத்தியர சாளுகையில்
கண்டு வேதாவும் கமலத் திருமகளும்
நன்று தெய்வாரும் நாரா யணருமெச்சி
அன்றந்த மாமுனிவர் அல்லோருந் தான்கூடி
சென்று சிவனார் திருப்பாதந் தெண்டனிட்டுச்
சாகா திருக்கும் சமூலத் திருப்பொருளே
ஏகா பரனே எங்கும் நிறைந்தோனே
மூலப் பொருளே முதற்பொருளே காரணரே
சாலப் பொருளே தவத்தோ ரரும்பொருளே
நாரணரும் வேதா நாடிப் பொரும்போரில்
காரணரே நீரும் கனல்கம்ப மானோரே
ஆலமு தருந்தி அரவை மிகவுரித்துக்

கோலத் திருக்கழுத்தில் கோர்வையா யிட்டோனே
ஆனைதனை யுரித்து அங்கமெல் லாம்புனைந்து
மானேந்திய கரனே மழுவேந்திய சிவனே
கோனேந்திர கிரியில் குடியிருக் குங்கோவே
தானே யிருக்கும் தவமே தவப்பொருளே
ஆதியாய் நின்ற அதியத் திருமுதலே
சோதியே சோழன் சொல்நெறியைக் கேளுமையா
வாடிவந்த பச்சினுக்கு வாளா லவனுடம்பைத்
தேடிவந்த வேடனுக்குத் துடையரிந் தீந்தவன்காண்
ஆறி லொருகடமை அவன்வேண்டிட் டானெனவே
மாறி யவன்புவியோர் மனதிற்கெள வைகளில்லை
கோவில் சிவாலயங்கள் குளங்கூபம் வாவிகளும்
சேவித் தனுதினமும் செய்வானே தானதர்மம்
ஆதலால் சோழன் அரசாளுஞ் சீமையிலே
நீதமாய்த் தெய்வம் நிலைநிறுத்த வேணுமையா
என்று மிகத்தேவர் இறைஞ்சித் தொழுதிடவே
கண்டிருந்த ஈசர் கரியமா லோடுரைப்பார்
நல்லதுகாண் மாயவனே நாட்டை மிகக்காக்க
வல்லவனே பூமா தேவி தனைவருத்தும்
வருணன் தனையழைநீ மாதமும் மாரிபெய்ய
கருணைக் குடைவிரிக்க கங்குல் தனையழையும்
வாசி யதுபூவாய் வழங்க வரவழையும்
தோசி மறலியையும் சொல்லி விலக்கிடுநீ
குருபூசை செய்யும் கூட்டமதிற் சிவமாய்
திருவீற் றிருக்கச் செய்திடுநீ கோலமது
நித்திரா தேவி நித்தமந்தப் பூமியிலே
மத்திபமாய்க் காக்க வையென்றா ரீசுரரும்
நினைத்தோர்க் குறுதி நினைவிலறி வுதோன்ற
எனைத்தோத் திரங்கள் இகழாமல் வையுமென்றார்
பன்றியோ டேகடுவாய் பண்புற் றிருந்திடவும்
அன்றிலோ டேகுயிலும் அன்புற் றிருந்திடவும்
கீரியும் பாம்பும் கிளைபோல் குழைந்திடவும்
வாரி குளம்போல் வரம்பிலே நின்றிடவும்
இட்ட விரைகள் ஈரெட்டுக் கண்டிடவும்
பட்டியும் முயலும் பண்புற் றிருந்திடவும்
பசுவும் புலியுமொரு பக்கம்நீ ருண்டிடவும்
கசுவுங் கரைபுரளக் கரும்புமுத் தீன்றிடவும்
சாத்திர வேதம் சமயம் வழுகாமல்
சூத்திர மாகத் துல்வப் படுத்திடவும்
மனுவோர் தழைத்து மக்களொரு கோடிபெற்று
இனிதாக நாளும் இறவா திருந்திடவும்
சந்திர சூரியர்கள் தட்டுமிக மாறாமல்
இந்திரரும் தேவர் இறஞ்சி தொழுதிடவும்
தான தவங்கள் தப்பிமிகப் போகாமல்
வானவர்கள் தேவர் வளமாக நின்றிடவும்

ஈன மில்லாமல் இதுதெய்வ நீதமெல்லாம்
மானம் நிறுத்தி வையென்றா ரீசுரரும்

விருத்தம்

இப்படித் தெய்வ நீதம் ஈசுர ரிதுவே கூற
சொற்படி மறவா வண்ணம் திருமரு கோனுஞ் செய்தார்
அப்படித் தவறா நீதம் அம்புவி தனிலே வாழ
மற்பணி குழலார் தங்கள் மனுநெறி வகுத்தார் தாமே

விளக்கம்:

இப்படியாக சோழமன்னன் எந்தவிதமான குற்றம் குறைகள் இல்லாமல் தர்மப்படியும், நியாய நீதிப்படியும் தன் அரசாட்சியை செலுத்தி வருவதை மேல் உலகத்தில் உள்ள தெய்வ சக்திகளும், தேவர்களும் பார்க்கின்றார்கள். அவர்கள் சோழ மன்னன் செலுத்துகின்ற அரசாட்சியை பார்த்து மன மகிழ்வு அடைகின்றார்கள். எப்போது தெய்வங்கள் மன மகிழ்வோடு இருக்கின்றார்களோ, அந்த தேசம் செழிப்போடு இருக்கும். நடக்க வேண்டிய அத்தனையும் முறைமையாக நடக்கும்.

பூமியில் நடக்ககூடிய நல்லதும் கெட்டதும் மேல் உலகத்தை நிச்சயம் பாதிக்கும். பூமியில் நல்லபடியாக, அறத்தோடு, நேர்மையோடு வாழ்ந்தால், மேலுலகத்தோரெல்லாம் பூவுலகிற்கு வேண்டிய அத்தனை சிறப்புகளையும் செய்வார்கள். அப்படிந்தான் இந்த சோழ மன்னன் அரசாட்சியை கண்டு பிரம்ம தேவரும், லெட்சுமி தேவியும் மற்றும் தேவர்களும் கூடி நாராயணரிடத்தில் சென்று தெண்டனிட, நாராயணரும் சோழமன்னனுடைய நீதி நெறி வழுவா அரசாட்சியை கண்டு மெச்சுகின்றார்.

இப்படி தேவசங்கங்கள் எல்லாம் ஒன்று கூடி, சோழனுடைய தேசத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என கருதிக்கொண்டு நாராயணருடன் சேர்ந்து சிவபெருமானைக் காணச் செல்கின்றார்கள். அப்படி சிவபெருமானைக் கண்டு அவரைப் போற்றிதுதிக்கின்றார்கள். சிவபெருமானை அவர்கள் “சாகாதிருக்கும் சமூலத் திருப்பொருளே” என்று கூறுகின்றார்கள். அதாவது சிவபெருமான் இறப்பு பிறப்பு இல்லாதவர். இந்த உலகம் படைப்பில் மும்மூர்த்திகள் முதலில் தோன்றிவர்கள் எனில், அதில் முதல் மூர்த்தியாக தோன்றியவர் சிவபெருமான் ஆவார். அவர் எப்போதும் நிலையாக இருக்க கூடியவர் ஆவார்.

உலகில் பிறப்பு என்பது இல்லாமல் என்றும் ஒரே தன்மையில் அசையாமல் இருப்பவர் ஆவார். ஆனால் அவரே அனைத்துமாவாக இருப்பவர். நாம் உலகில் காணக்கூடிய அனைத்தும் சிவமயமானதே. அவர் ஏகமயமாக ஒரே பொருளாக இருந்தாலும் எங்கும் நிறைந்து யாராலும் அளவிடமுடியாமல் நிறைந்து இருப்பவர் ஆவார்.

அடி முடி தேடிய வரலாறு:

ஏகம் ஒரு பரமாக இருந்து அதிலிருந்து தோன்றிய முதல் மூர்த்தி

சிவபெருமான் ஆவார். அவரே மும்மூர்த்திகளுள் முதல் மூர்த்தி ஆவார். அவரே உலகிலுள்ள அனைத்திற்கும் மூலப்பொருளாகவும். முதற்பொருளாகவும் இருப்பதோடு அல்லாமல், இறைவனை அடைவதற்கு தவம் செய்யவர்களுக்கு மிகவும் முதன்மையான தவப்பொருளாகவும் இருக்கின்றார்.

ஒரு முறை படைக்கும் கடவுளான பிரம்மாவிற்கும், காக்கும் கடவுளான நாராயணருக்கும் தங்களில் யார் பெரியவர் என்னும் விவாதம் ஏற்பட்டது. இவர்களுடைய விவாதம் முடிவுக்கு வராததால் உலக தொழில்களான படைப்பு, அழித்தல், காத்தல் ஆகிய தொழில்கள் பாதிக்கப்பட்டன. இதனைக் கண்ட தேவர்கள் சிவபெருமானிடம் முறையமிடவே, சிவபெருமான் நாராயணர் மற்றும் பிரம்ம தேவர் முன்பாக ஒரு ஜோதியாக நெருப்பு பிளம்பாக மேலும் கீழுமாக வளர்ந்து நின்றார்.

இப்படி, மேலும் கீழுமாக கனல் கம்பமாக வளர்ந்து நின்ற தன்மையை கண்ட நாராயணரும், பிரம்மாவும் "யார் முதலில் இந்த ஜோதியின் முடியையோ, அல்லது அடியையோ காணுகின்றார்களோ, அவரே பெரியவர் எனும் முடிவுக்கு வருகின்றார்கள். அதன்படி பிரம்ம தேவர் ஜோதி சொரூபமாக நின்ற சிவபெருமானின் முடியைக் காண மேல் நோக்கியும், நாராயணர் சிவ பெருமானின் பாதஅடியைக்காண பாதாளம் நோக்கியும் சென்றார்கள். இவர்கள் இருவரும் எத்தனை தூரம் பயணித்து சென்றாலும் அவர்கள் இருவருக்குமே சிவபெருமானினுடைய மேல்பகுதியான முடியையோ அல்லது கீழ்பகுதியான திருவடியையோ காண இயலவில்லை. ஆகவே இருவருமே தாம் இருவரைவிட சிவமே பெரியவர் என ஏற்று கொண்டார்கள்.

முன்பு தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்தை பெறுவதற்காகப் பாற்கடலை கடைய முற்பட்டார்கள். அப்போது அவர்கள் மந்திரமலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பினை கயிறாகவும் கொண்டு ஒருபுறம் தேவர்களும் மறுபுறம் அசுரர்களும் நின்று பாற்கடலை கடைந்தார்கள். அப்போது பாற்கடலிலிருந்து ஆலகால விஷம் என்றுச் சொல்லக்கூடியக் கொடிய விஷம் வெளிப்பட்டது. இதனைக் கண்டு அதிர்ச்சியுற்ற தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைவதை நிறுத்திச் செய்வதறியாது திகைத்தார்கள். தேவர்களுக்காக இரக்கம் கொண்ட சிவபெருமான் அந்த ஆலகால விஷத்தை தாமே உட்கொள்ள முடிவுசெய்தார். அதன்படி அந்த ஆலகால விஷத்தை அப்படியே வாயில் எடுத்து விழுங்கினார்.

இதனைக் கண்ட அம்மை உமையவள் உலகத்தைப் படைத்து அதில் உயிருக்கு உயிராக இருக்க கூடிய சிவபெருமான் ஆலகால விஷத்தை உட்கொண்டால் உலக உயிர்கள் பாதிப்படையும் என்று எண்ணி அவர் தொண்டையான கண்டத்தில் கை வைத்து விஷம் கீழிறங்காதபடி வைத்து கொண்டாள். ஆலகால விஷத்தின் வீரியத்தின் காரணமாகச் சிவபெருமானினுடைய அந்த தொண்டையானது நீல நிறமாக மாறியது . இதனால் அவருக்கு திருநீலகண்டர் என்றும் பெயர் உண்டு. மேலும் அந்த வாசுகி பாம்பையே சிவபெருமான் தன் கழுத்தில் மாலையாக அணிந்தாக வரலாறும் உண்டு. இப்படி ஆலகால விஷத்தை அருந்திப் பாம்பினை கழுத்தில் மாலையாக அணிந்து இருக்கும் சிவனே என்று கூறுகிறார். மேலும்

“ஆனைதனை யுரித்து அங்கமெல்லாம் புனைந்து
மானேந்திய கரனே மழுவேந்திய சிவனே”
என்று கூறுகிறார்.

அதாவது முன்பு தாருகாவனம் என்றுச் சொல்லக் கூடிய வனத்திலே ரிஷிகளும், ரிஷி பத்தினிகளும் கற்பு நெறி தவறாமல் வேள்வி வளர்த்து யாகம் செய்து, அந்த யாகத்தின் மூலம் தமக்கு வேண்டிய அத்தனையும் பெற்றுக் கொண்டார்கள். வேதத்தை நன்கு அறிந்திருந்த காரணத்தால் அந்த வேதங்கள் மூலமாக அதை ஒதி வேள்வி வளர்த்து முறைப்படி செய்ததால் அவர்களுக்கு வேண்டிய அனைத்தும் கிடைத்தன.

தங்களுக்கு வேண்டிய அத்தனையும் தாங்கள் செய்யும் யாகங்கள் மூலமாக கிடைத்ததால் இதை அத்தனையும் அருளக்கூடிய எல்லாவற்றிற்கும் மேலான அந்த இறைவனை மறந்தார்கள் தங்களால் எதுவும் முடியும் என்ற ஆணவம் அவர்கள் கொண்டார்கள். இதனைக் கண்ட சிவபெருமானும், நாராயண மூர்த்தியும் முனிவர்களுடைய ஆணவத்தை அடக்க திருவுளம் கொண்டார்கள். ரிஷிகளும் ரிஷி பத்தினிகளும் கற்பு தவறாமல் இருந்த காரணத்தால் இவர்களுடையக் கற்பினை வலுவிழக்க செய்ய வேண்டுமென திருமால் ஒரு அழகிய மோகினி வடிவம் கொண்டும், சிவபெருமான் எவரையும் உடனே வசீகரிக்க செய்யும் மிகுந்த அழகோடு, பிச்சை கோலமாக பிச்சாடன மூர்த்தியாகத் தாருகாவனத்தை அடைந்தார்கள்

தாருகாவனத்தில் முனிகள் இருந்த பக்கமாக மோகினி வடிவம் கொண்ட திருமால் செல்லவே அந்த அழகில் மயங்கி தங்கள் கற்பு நெறி தவறி ரிஷிகள் அனைவரும் திருமால் பின்புச் சென்றார்கள். அதே நேரத்தில் அழகே வடிவான பிச்சாடனமூர்த்தி ரிஷிபத்தினிகள் இருக்கும் பக்கம் செல்லவே ரிஷிபத்தினிகளும் தங்கள் கற்பு தவறிப் பிச்சாடன மூர்த்தியாக வந்திருக்க கூடிய சிவபெருமான் பின்னால் சென்றார்கள். இப்படி சிவபெருமானும் நாராயணரும் ஒரு இடத்தில் சந்தித்து கொள்ள அவர்கள் பின்பு வந்த ரிஷிகளும் ரிஷிபத்தினிகளும் ஒருவருக்குகொருவர் பார்த்து தங்கள் இயல்பு நிலைக்கு திரும்பினார்கள்.

ரிஷிகளும் ரிஷிபத்தினிகளும் தங்கள் கற்பு நிலை தவறிவிட்டதே என வருத்தம் கொண்டார்கள். இதற்கெல்லாம் காரணம் ஆணாகவும் பெண்ணாகவும் வந்த சிவபெருமானும், நாராயணருமே காரணம் என ரிஷிகள் கோபம் கொண்டார்கள். அவர்கள் சிவபெருமானை அழிப்பதற்க்காக யாகத்தை வளர்த்தார்கள் . அதிலிருந்து புலி வெளிப்பட்டது. அதை சிவபெருமானை தாக்க அனுப்பினார்கள். சிவபெருமான் அந்த புலியை கொன்று அதன் தோலை ஆடையாக இடுப்பிலே அணிந்துக் கொண்டார். அதன்பிறகு மூர்க்கமான யானை வேள்வியிலிருந்து வர அதை சிவபெருமானை கொல்ல அனுப்பினார்கள்.

சிவபெருமான் அந்த யானையின் வயிற்றின் உள்சென்றுக் கனலை எழுப்பினார். வெப்பம் தாங்காமல் யானை அலறியது. சிவபெருமான் யானையின் வயிற்றினை கிழித்து வெளியே வந்து அதன் தோலை உரித்து போர்வையாக அணிந்து கொண்டார். அதன் பிறகு வேள்விக் குண்டத்திலிருந்து மான் வெளிப்பட அதை சிவபெருமானை தாக்க பணிந்தார்கள். சிவபெருமான்

தன் இடது புரத்தில் அதனை ஏந்தி கொண்டார் அதன்பின் வேள்வியிலிருந்து மழு என்று சொல்ல கூடிய ஆயுதம் வெளிப்பட அதை சிவபெருமானை தாக்க எத்தனித்தார்கள். சிவபெருமான் அந்த மழு என்னும் ஆயுதத்தைத் தன்னுடையக் கரத்தில் ஏந்தி கொண்டார்.

கோனேந்திருகிரி என்று சொல்லுகின்ற கைலை மலையில் வீற்றிருக்க கூடிய சிவபெருமான் அனைத்து உயிர்களுக்கும் அரசனாக வீற்றிருக்கின்றார். தாம் இருக்ககூடிய இடத்திலிருந்தே அனைத்தையும் நடத்த கூடியவர் சிவபெருமான். அவர் எப்போதும் நிலையாக மாறாமல் இருக்க கூடியவர்.

உலக உயிர்கள் அத்தனைக்கும் படியளக்ககூடியவரும் அவரே. தாம் படைத்த உயிர்களுக்கு வேண்டியதை கொடுக்க கூடியவரும் அவரே. யார் அவரை நினைத்து தவம் இருந்தாலும் அந்த தவத்திற்கு இரங்கி அவர்களுக்கு வேண்டிய வரங்களை கொடுக்க கூடிய வள்ளலும் அவரே. தவமும் அவரே அந்த தவத்திற்க்கான பொருளாக விளங்கக்கூடிய மூலமும் அவரே. ஆதி என்று சொல்லக்கூடிய முன் உதித்த பொருளும் அவரே. ஜோதியாக நின்று இலங்க கூடிய சிவபெருமானே பூவுலகில் தென்பகுதியான தெட்சணாபூமியை ஆண்டு கொண்டிருக்க கூடிய சோழமன்னனின் ஆட்சி முறையையும் அவன் எவ்வாறு குடிமக்களை நடத்துகிறான் என்பதையும் கேளுங்கள் என்று தேவர்கள் எல்லோரும் சிவபெருமானிடம் கூறினார்கள்.

சோழன் ஆண்டிருந்த தேசத்தை செல்வ செழிப்போடு வைத்திருத்ததோடு அல்லாது நீதி நேர்மையோடு ஆண்டு வந்தான். இப்படி தர்ம நியாயத்தோடு ஆண்டு வந்த சோழமன்னனை சோதிப்பதற்காக தரும தேவன் எண்ணினார். ஆகவே தரும தேவன் சோழமன்னான சிபிசக்கரவர்த்தியை சோதிப்பதற்காக ஒரு புறாவும் அதை துரத்தகூடிய ஒரு வேடனுமாக வடிவெடுத்து அப்படியே ஒரு திருவிளையாடலை நடத்த வேண்டும் என எண்ணினார்.

ஒரு சமயம் சிபி சக்கரவர்த்தி தோட்டத்தில் இளைப்பாறி கொண்டிருந்த சமயத்தில் வேடனால் துரத்தப்பட்ட புறாவானது அரசனுடைய மடியில் வந்து வேகமாக அமர்ந்தது. அதைப் பார்த்த மாத்திரமே அது மிகவும் படபடப்புடன் தன் உயிரினைக் காப்பாற்றிக் கொள்ள வந்து அமர்ந்தது போலவே அரசனுக்கு தோன்றியது. அவன் எண்ணியது போலவே வேடன் ஒருவன் அரசன் இருக்க கூடிய அந்த இடத்தை வந்தடைந்தான். புறாவினைக் கண்ட வேடுவன் மிகுந்த மகிழ்ச்சியோடு அரசனிடம் அந்த புறாவினை தன்னிடம் கொடுக்குமாறு வேண்டினான்.

மன்னவன் புறாவினை நன்கு நோக்கினான். அது அரசனின் மடியிலேயே ஒதுங்கி கொண்டது. மன்னன் தன்னை நாடி, தன்னை அடைக்கலமாக வந்த எந்த உயிருக்கும் தான் பாதுகாவலாக இருக்க வேண்டும் என்ற ராசநீதியினை நினைவில் கொண்டு அந்த வேடுவனை பார்த்து "வேடுவனே இந்த ராச்சியத்தை ஆளுகின்ற ராஜாவான நான் என்னுடைய ராச்சியத்தில் அடைக்கலமாக வந்தவரைக் காப்பது என் தர்மம். இப்புறா மானிட தன்மையில் இல்லாவிட்டாலும், உயிர் அடிப்படையில் இதைக் காக்கும் பொறுப்பு எனக்கு உள்ளது. ஆகவே உனக்கு வேண்டிய வேறு ஏதாவது கேள் தருகிறேன்" எனக் கூறினான்.

உடனே வேடுவனாக இருந்த தரும தேவன் "இல்லை இல்லை" அரசனான நீர் இரண்டு பக்கமும் உள்ள நியாய தர்மங்களையும் பார்க்க வேண்டும். என்னுடைய தொழில் வேட்டையாடும் தொழில். இன்று எனக்காக இந்த உணவினை இறைவன் எனக்கு தந்திருக்கின்றான். ஆகவே இறைவன் கொடுத்த உணவை நான் உண்பதே சரியாகும். எனக்கு வேறெதுவும் வேண்டாம் என மறுத்து கூறினான். உடனே சிபி சக்ரவர்த்தி, நான் என் நிலையிலிருந்து மாறுவதில்லை. உன்னுடையப் பசியைப் போக்க வேண்டுமெனில் நானே இந்த புறாவின் எடைக்கு என்ன மாமிசம் வருகிறதோ அதை உனக்கு நிகராக தருகிறேன் என கூற வேடனாக வந்த தரும தேவனும் சம்மதித்தார்.

உடனே அங்கே தராசு தட்டு கொண்டுவரப்பட்டு மன்னன் புறாவினை ஒரு தட்டில் வைத்தும், தன்னுடையத் தொடையிலிருந்து மாமிசத்தை அரிந்து அதை மறுதட்டிலும் வைத்தான். இப்போது அதன் துல்லியத்தைப் பார்க்க வேண்டும் என தராசு தட்டினைப் பார்க்கும் போது புறாவின் தட்டு உயராமல் அப்படியே இருந்தது. இதை கண்ட மன்னன் ஆச்சரியபட்டாலும், தான் சோதனைக்கு உட்படுகிறோம் என எண்ணி, மேலும் மேலும் தன் தொடையிலிருந்து மாமிசத்தை அரிந்து எடுத்து வைத்தான். ஆயினும் அவன் மாமிசத் தட்டுத் தாழாமல் இருக்கவே, இறுதியில் தானே அந்த தட்டில் ஏறி அமர்ந்து தன் முழு சரணாகதியையும் வைத்தான். இதைக்கண்டு மகிழ்ந்தஅந்த தரும தேவர் அரசன் முன் தோன்றி அவனை வாழ்த்திவிட்டுச் சென்றார்.

"ஆறி லொருகடமை அவன் வேண்டிற் றானெனவே
மாறி யவன்புவியோ மனதிற்கென வைகளில்லை
கோவில் சிவாலயங்கள் குளங்கூபம் வாவிகளும்
சேவித் தனுதினமுஞ் செய்வானே தானதர்மம்".

இப்படியாக சிறப்பாக ஆட்சி புரிந்து வந்த சோழ மன்னனின் ஆட்சியில் மக்கள் அனைவரும் மகிழ்வோடு வாழ்ந்து வந்தார்கள். அவரவர் கடமையை சிறப்பாக செய்தார்கள். மக்கள் சம்பாதிக்கும் பணத்தில் ஆறில் ஒரு பங்கை வரியாகச் செலுத்தினார்கள். மக்களிடம் வரியைப் பெற்று தேச மக்களுக்காக செலவு செய்து வந்தான். தர்மங்கள் சிறப்பாக நடந்தது. இறைவனை தொழுது ஆட்சி புரிந்ததால் ஆட்சி சிறப்பாக இருந்தது. இறைவனுக்கான ஆலயங்களையும், புனித நீராடும் தலங்களையும் சிறப்போடு பேணி பாதுகாத்து தன்னுடைய கடமையை சிறப்பாகச் செய்தான் சோழ மன்னன்.

இப்படி எல்லோரும் போற்றும் வகையில் நீதி நெறி தவறாது அறத்தினை கடைபிடித்து ஆட்சி புரிந்த அந்த சோழ மன்னன் தேசத்தில் எல்லாவித சிறப்புகளையும் நிலை நிறுத்த வேண்டும் என தேவர்கள் ஆசை கொண்டார்கள். ஒரு தேசத்தில் எந்த வித தோஷங்களும் அணுகாமல் இருக்க வேண்டுமெனில், அத்தேசத்தில் தெய்வத்தின் கருணை இருக்க வேண்டும். அந்த தெய்வ அருளை பூரணமாக விளங்கச் செய்ய வேண்டுமென தேவர்கள் சிவபெருமானிடம் திருமாலோடு கூடி வந்து வேண்டுதலை வைத்தார்கள் .

இப்படி ஒரு நல்லது பூவுலகில் நடக்கும் போது அது தேவலோகத்து தேவர்களை மகிழ்ச்சி அடைய செய்து, அவர்கள் தாமாகவே அந்த நன்மைக்கான பலனை கொடுக்க வேண்டும் என எண்ணுவதை நாம் இதன்

மூலம் அறிய முடிகிறது. ஆகவே நாம்  இறைவன் வகுத்த சட்டப்படி உலகத்தில் சத்தியத்தோடு வாழ்ந்தால், அந்த நன்மை நம்மை சார்ந்தவர்களுக்கு தெரிகின்றதோ இல்லையோ மேல் உலகத்தாருக்கு அது தெரியும். அதன் மூலம் அவர்கள் அந்த நன்மைக்குரிய பலனை நிச்சயம் தருவார்கள். இப்படி இந்த தேகர்களெல்லோரும் கூடி சிவபெருமானிடம் தெய்வ நீதத்தை சோழன் அரசர்களும் சீமையில் நிலை நிறுத்த வேண்டும் என்று விண்ணப்பம் வைத்த உடனே, சிவபெருமான் இதனைப் பார்த்து மகிழ்ந்து திருமாலோடு ஆலோசித்து கூறலுற்றார்.

இப்படி சிவபெருமான் திருமாலோடு ஆலோசித்து சோழன் அரசாளும் சீமையினை நாம் சிறப்பு செய்ய வேண்டும். ஆகவே ஒவ்வொரு சக்திகளையும் வரவழைத்து அவர்களை எப்படி , எப்படி இந்த ராச்சியத்திற்கு சிறப்பு செய்ய வேண்டும் என உபதேசிக்க வேண்டும் என்று கூறுகின்றார். முதலில் பூமா தேவியினை அழைத்து இந்த தேசத்தை காக்க வேண்டும் என்று கூற நாராயண மூர்த்தி சிவப்பெருமானிடம்  கூறுகின்றார். அதாவது  நாம் வாழக்கூடிய பூவுலகினை தாயாக இருந்து நம்மை முதற்கொண்டு, படைக்கப்பட்ட அத்தனை ஜீவராசிகளையும் தாங்கி கொண்டிருப்பது பூமா தேவியாகும் .

நமக்கு வேண்டிய பொசிப்பினை தருவதும் அன்னையாகிய பூமா தேவியே. பூமி சுழன்று கொண்டு இருந்தாலும், நம்மை அவள் மடியிலே ஒரு குழந்தையை போல துன்பமில்லாமல் காத்து வருபவள். பூமி குலுங்கினால்,இந்த உலகம் இருப்பதில்லை. உலக ஜீவராசிகள் அழிந்து விடும். ஆகவே இப்படி எந்த துன்பமும் சோழ மன்னன் ராச்சியத்தில் வரக்கூடாமல் பூமா தேவி காத்து அருள வேண்டும் எனக் கூறினார்.

அடுத்ததாக வருண பகவானை அழைத்து,  வருண பகவான் எப்படி தன் கடமையை சோழ மன்னன் தேசத்தில் செய்ய வேண்டும் எனக் கூறுகின்றார். அதாவது நீர் என்பது உலக மக்களுக்கு மிகவும் இன்றிமையாதது ஆகும். நீர் இல்லா விட்டால் இந்த உலகம் வறண்டு விடும். அந்த நீரே பருவம் தப்பி மழையாக பொழிந்தால், இட்டிருக்க கூடிய பயிர்கள் நாசமாவதோடு, அரசும் வளமின்மையாகி விடும். அதுவே மிகவும் அதிகமாக பெய்தால் பிரளயம் ஏற்பட்டு அணைகள் உடைபட்டு உலக உயிர்கள் துன்பப்படும்.

ஆனால் மாதம் மும்மாரி பெய்தால் சோழ மன்னன்  ராச்சியத்தில் எந்த விதமான பஞ்சமும் இருக்காது , தேசமும் செழிக்கும். ஆகவே  வருண பகவானை அழைத்து ஒரு மாதத்தில் மூன்று முறை மழை பொழிய சொல் என்று சிவபெருமான் திருமாலிடம் கூறுகின்றார்.

அடுத்ததாக சூரிய பகவானை அழைத்து,  இந்த சோழ மன்னன் ராச்சியத்தில் எவ்வாறு தன் கடமையை செய்ய வேண்டும் என சொல்லுகின்றார். அதாவது சூரியன் தன் வெப்பத்தை அளவிற்கு அதிகமாக வெளிப்படுத்தினால், வெப்பத்தால் அத்தனையும் கரிந்து விடும். ஆகவே வெப்பமானது மிதமாக இருக்க வேண்டும். அது உலக மக்களுக்கு இதமாக இருக்க வேண்டும். ஆகவே சூரியன் தன் கதிர் வீச்சை கருணைக்குடை விரித்து அதனுள் உலக மக்கள் இருந்து பாதுகாப்பு வளையமாக இருக்கும் படி தன் வெப்பத்தை கொடுக்க வேண்டும் என சூரிய பகவானிடம் சொல்லுகின்றார்.

.

அடுத்ததாக வாயு பகவானை அழைத்து காற்று எவ்வாறு வீச வேண்டும் என்று திருமாலிடம் சிவபெருமான் சொல்லுகின்றார் . காற்று மிதமான வீசினால் தென்றலாகவும் அதே காற்று அதிக அழுத்தத்தில் வீசினால் புயல் என்றும் கூறுகின்றோம். ஆனால் வீசக்கூடிய காற்று ஒன்று தான். அது வீசும் இயல்பை பொறுத்து உயிர்களுக்கு நன்மையையும் , தீமையையும் கொடுக்கும்.

ஆகவே நாட்டில் நடக்கும் இயல்புக்கு தக்கவாறு அதன் தன்மை இருக்கும். இங்கே சோழ மன்னன் ஆட்சி சிறப்பாக இருந்த காரணத்தால், வீசக்கூடிய காற்றினை பூப்போல வீசச் சொல்லுகின்றார். அதாவது பூத்து சொரிந்திருக்கூடிய பூந்தோட்டத்தில் செல்லும் போது, அந்த பூப்பட்டு நம் மேனி எப்படி இதமான தன்மையை அனுபவிக்குமோ, அது போல சோழமன்னன் இராச்சியத்தில் வீசக்கூடிய காற்றும் அமைய வேண்டும் என்று வாயு பகவானை அழைத்து சொல்லச் சொல்லுகின்றார்.

அடுத்ததாக தோசி மறலி (எமன், தூதன், காலன்)யை அந்த தேசத்திலிருந்து விலக்கி வைக்க சிவபெருமான் திருமாலிடம் சொல்லுகின்றார். அதாவது இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும் மரணம் என்ற ஒன்று நிச்சயம் உண்டும். அது எப்படி இயற்கையாக ஒரு பிறப்பு நடக்கின்றதோ, அது போல அந்த மரணமும் இயற்கையாகவே நடக்க வேண்டும். ஆனால் சில நேரங்களில் இந்த இயற்கை விதிப்படி இல்லாமல் துர் மரணங்கள் நாட்டில் நடைபெறுவது உண்டு.

இம்மரணங்கள் நாட்டில் நாம் நடக்கும் முறையைப் பொறுத்தே அதிகரிக்கின்றது. அத்தோடு, இறைவனுக்கு பயந்து அவர் நியதிபடி வாழ்ந்தால் இவ்வித மரணங்கள் ஏற்படுவதில்லை. ஆனால் நாட்டில் தர்மம் குன்றி அதர்மங்கள் அதிகரித்து இருந்தால் இவ்விதமான தோசி மறலி என்று சொல்லக்கூடிய துர் மரணங்கள் அதிகம் ஏற்படும். இது தனிப்பட்ட ஒருவரை மட்டும் சார்ந்தது அல்ல. நாட்டை ஆளக்கூடிய நீதி நெறிப்படியும் அமைகின்றது. சோழ மன்னன் சிறப்பான ஆட்சி முறையை நடத்தி வந்த காரணத்தால் அவனுடைய ராட்சியத்தில் இவ்விதமான தோசி மறலி ஏற்படா வண்ணம் அதை விலக்கி வைக்க சிவபெருமான் சொல்லுகின்றார்.

அது போல பூஜை முறைகள் செய்யும் போது அந்த பூஜைகளை சிவபெருமானே அங்கே குருவாக இருந்து நடத்தவும் அதை ஏற்கவும் செய்யும்படி அந்த அமைப்பை தெட்சணா பூமியில் ஏற்படுத்த வேண்டும் என சிவபெருமான் நாராயணரிடம் கூறுகின்றார்

நித்திராதேவி என்பது உயிர்களுக்கு தூக்கத்தை கொடுக்க கூடியது ஆகும். ஒரு மனிதனுக்கு தூக்கம் என்பது அவசியம் எனும் போதும், அது அளவிற்கு அதிகமாக இருந்தால் சோம்பலாகவும், மந்தமாகவும் இருக்கும். இதுவே ஒரு ராச்சியத்திற்கு பீடித்தால் அந்த நாடு வளர்ச்சி அடையாது. ஆகவே தான்சோழமன்னனுடைய நாட்டில் நித்திரை என்பது அளவாக இருக்கும்படி ஈசுரர் கட்டளை இடுகின்றார்.

"அதுபோலவே இறைவனை பற்றி அறிய வேண்டுமானால், இறைவனால் நமக்கு தரப்பட்டுள்ள புராண இதிகாசங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடியும். ஆனால் இறைவனை உணர்ந்து அவர் காட்டிதந்த வாழ்வியல்படி வாழ்ந்து அவனை அடைய வேண்டுமானால் அது அவர் நினைத்தால் மட்டுமே முடியும். நாம் என்னதான் வழிபட்டாலும், வழிபாடுகளை செய்தாலும், அவர் மனது

வைத்தால் மட்டுமே அவர் காட்டிய சரியான வழியில் பயணித்து அவர் திருவடிகளை அடைய முடியும்.

இப்படி சோழனுடைய ராச்சியம் இறைவனுக்கு மகிழ்ச்சியை தரும்படி நீதி நெறியோடு ஆளப்பட்டு வந்ததால், யார் இறைவனை நினைத்து அவர் வழிப்படி நடக்க வேண்டும் என்று நினைக்கின்றார்களோ, அவர்களுக்கு அந்த நினைவு எப்போதும் உறுதியாக இருக்கும்படி செய்து மேலும் மேலும் இறைவனை அறிந்து கொள்ள ஞானத்தை கொடுத்து அவர்கள் எப்போதும் பாதை மாறாதபடி இருந்து அவரை அடைவதற்கு அவரையே வணங்கி கொண்டிருக்ககூடிய அறிவை கொடுக்க சிவபெருமான் நாராயணரிடம் கூறுகின்றார்.

இந்த உலகில் படைக்கப்பட்ட உயிரினங்களில் பல்வேறு வகையான பேத வகைப்பாடு உண்டு. அவை 84 லட்ச பேத வகைகள் என்று சொல்லப்படுவதுண்டு. உலகின் நியதிக்கு ஏற்ப இவை மண்ணில் வாழ்ந்து வந்தாலும், அடிப்படை குணங்களில் இவற்றில் சாதுவான உயிரின வகையும் உண்டு; அதுபோலவே மூர்க்கமான குணத்தினை உடைய உயிரினங்களும் உண்டு. உயிரினங்களின் இன அடிப்படையில் ஒரு வகையான மிருக இன வகை மற்றொரு வகையான மிருக இனவகையோடு நட்பு பாராட்டுவதில்லை. அவை ஒன்றையொன்று எதிரியாக பார்க்கும் நிலையே உண்டு.

ஆனால் சோழனுடைய ராச்சியம் தர்ம சிறப்போடு ஆளப்பட்டு வந்தமையால், இந்த மிருக இனத்தில் இருக்ககூடிய பகைமை மாறுபாடுகள்கூட இல்லாமல் அவைகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து அன்புற்று இருக்க இறைவன் நினைக்கின்றார். அதன்படி இந்த உலகில் பிறவி இன அடிப்படையில் எதிரிகளாக உள்ள பன்றியும், கடுவாய் எனப்படுகின்ற புலியும் அவைகள் பகைமை மறந்து ஒன்றாக இருக்க இறைவன் அருள் புரிகின்றார்.

அதுபோல மிருக இனங்களை போலவே பறவை இனங்களிலும் பெரிது, சிறிது என்ற மாறுபாடு உண்டு. ஆனால் சோழன் ராச்சியத்தில் அன்றில் பறவை என்று சொல்லக்கூடிய சிறிய பறவை இனங்களும் அதுபோல பெரிய பறவையாகஇருக்ககூடிய குயில்களும் தங்களுக்குள் விரோதம் பாராட்டாமல் அன்பாக இருக்க இறைவன் அருள் புரிகின்றார்.

மேலும் இந்த உலகு நிலப்பரப்பில் மூன்று பங்கு தண்ணீரால் சூழப்பட்டு கடலாக காட்சி அளிக்ககூடியது.கடலில் ஆர்ப்பரிக்ககூடிய அலைகள் தங்கள் இயல்பைவிட ஆக்ரோசமானால் இந்த உலகம் அழிந்துவிடும். நாமும் பல நேரங்களில் கடல் சீற்றத்தால் அழிவுகளை சந்தித்தே வருகின்றோம். ஆனால் சோழன் ஆட்சியில் இறைவன் கருணையால் அவ்வாறான அழிவுகள் ஏற்படாத வண்ணம் அலைகள் ஆர்பரிக்காமல், எப்படி ஒரு குளம் காட்சிதருமோ அதுபோலவே கடல் இருக்க அருள்புரிய ஈசுரனார் நாராயணரிடம் கூறுகின்றார்.

இறைவன் அருள் இருந்தால் இயற்கையே வேண்டிய அத்தனையும் வாரி வழங்கும். மக்களுக்கு பஞ்சம் என்பது இல்லாமல் செழிப்போடு இருக்க செய்வது இயற்கையால் விளையும் உணவாகும். சோழனுடைய ஆட்சி சிறப்பாக நடப்பதால், அவனுடைய ஆட்சி சிறப்பை இறைவன் கண்டு மகிழ்ந்ததால் அவன்

தேசத்தில் பயிரிடப்பட்ட உணவு தானியங்கள் மிகுந்த விளைச்சலை கொடுத்தன. ஒருமுறை இடக்கூடிய பயிரானது ஒரு முறை விளைச்சலில் பதினாறு மடங்கு விளைச்சலை பெருக்கி அந்த ஒருமுறை இடுபயிரிலேயே கிடைக்ககூடிய அளவு தானியங்கள் விளைந்தன.

அதுபோலவே இந்த உலகிலே காணப்படுகின்ற உயிரினங்களிலே பலவகையான இனங்கள் உண்டு. அப்படி இருக்ககூடிய உயிரின வகைகள் தங்களுக்குள் பகைமையாகவே இருக்கும். சிலவகை இனங்கள் பிறவகை உயிர்களை உணவாக கொள்ளும். சில இனங்கள் தங்கள் இனங்களையே உணவாக கொள்வதும் உண்டு. அப்படி எப்போதும் பகைமை பாராட்டக்கூடிய இன உயிர்கள் கூட சோழ தேசத்தில் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. உதாரணமாக முயலினை கண்டால் நாயானது அதனை துரத்தி அடிக்ககூடிய நிலையினை உடையது.

ஆனால் சோழதேசத்தில் அவைகள் ஒன்றுக்கொன்று நட்பாக பகைமை பாராட்டாமல் இருந்தன. அதுபோல புலியானது பசுவினை தன் உணவாக கொள்ளக்கூடிய விலங்கு. ஆனால் சோழதேசத்தில் அவைகள் தங்களுக்குள் பகைமை பாராட்டாமல், ஒரே இடத்தில் சென்று நீரருந்தக் கூடியவையாக இருந்தன. இதுமட்டுமல்லாமல் சோழனுடைய தேசம் செல்வ செழிப்பில் மேலோங்கி இருந்தது. பணம் காசு எல்லோரிடத்திலும் நிரம்பி இருந்தன.

சாஸ்திரங்கள் ஆறும் வேதங்கள் நான்கும் இறைவனால் நமக்குஅருளப்பெற்று கிடைத்திருக்கின்றன. இந்த வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் இறைவனை பற்றி சொல்லி அவரை அறிந்து கொள்ளவும் எல்லா உயிர்களும் இறைவனை அடைவதற்கான வழியை சொல்லி இருக்கின்றன. அப்படி எந்த நோக்கத்திற்கு இந்த வேதங்கள் கொடுக்கப்பட்டதுவோ, அந்த நோக்கங்கள் நிறைவேறக்கூடிய அளவில் வேதசாஸ்திரங்கள் விளங்க வேண்டும். சில வேளைகளில் தீய எண்ணம் கொண்டவர்கள் இந்த சாஸ்திர வேதங்களை கற்று அதை தவறான நோக்கத்திற்கு செயல்படுத்துவது உண்டு. ஆனால் சோழ தேசத்தில் இறைவன் அருள் நிறைந்து இருப்பதால் சாஸ்திர வேதங்கள் முறையாக கற்று மக்கள் இறைவனை அறிந்து கொள்ள உதவியாக இருந்தன.

அதுபோலவே தேசத்தில் பிறவி செய்யப்பட்ட மனுக்கள் தழைத்து வாழ்ந்து அவர்கள் மூலமாக உருவான வம்சங்களான மக்களெல்லாம் எந்த விதமான குறைவும் இல்லாமல், தாங்கள் உலகில் எந்த நோக்கத்திற்காக பிறவி செய்யப்பட்டோமோ, அந்த பிறவி நோக்கத்தினை எந்தவித குறைவும் இல்லாமல், பல சிறப்புகளை பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்து பின் அந்த பிறவி நோக்கத்தினை நிறைவு செய்து மீண்டும் பிறவாத நிலையை பெற்று இறைவனின் பாதத்தை அடையக்கூடிய அளவில் சோழ தேசத்தில் வாழ்ந்த மக்கள் இருந்தார்கள்.

இவ்வாறாக வருணபகவானிடம் குறைவில்லா மழை வளம் கொடுக்கவும், எமதர்மனிடம் உயிர்ப்பலி எடுக்க வேண்டாம் என்றும், செல்வம் தருகின்ற லட்சுமி தேவியை அங்கே நித்திய வாசம் செய்யவும் அருள் கொடுத்தார்.

தெட்சணா பூமியில் வாழும் உயிரினங்களாகிய பாம்பும் கீரியும், நாயும் முயலும், நட்போடு உறவாடவும், பசுவும் புலியும் பகையில்லாமல் ஒரே சுனையில் நின்று நீர் அருந்தவும், பறவையாகிய குயிலும் அன்றிலும் அன்போடு இரைத் தேடவும், கடலானதுக் கனத்த கோபம் கொண்டு எழுந்து வராமலும், விளை நிலங்களில் பயிர்கள் தழைத்து வளர்ந்து பலன் வாரி இறைக்கவும் ,

மக்கள் சோம்பல் இல்லாமல் நிம்மதியான தூக்கம் கொள்ளவும் அங்கே நித்திரா தேவியிடம் அருள் பாலிக்க கூறியும்,மக்கள் ஆறு சாஸ்திரங்கள் , நான்கு வேதங்களைக் கற்றுணர்ந்து, ஒழுக்க நெறி தவறாமலும், எல்லோரும் செல்வ செழிப்போடும் வாழ அருள் புரிந்தார்.

சூரியனால் வெப்பம் மிதமாக வீசியும் , சந்திரனால் குளிர் இதமாகவும், வாயு பகவான் தென்றல் வீசிடவும் , மக்கள் இறைவழியில் மனதைச் செலுத்தி ஒழுக்கமாய் , மானத்தோடு வாழும் படியான, உயர்ந்த நிலையை அடையவும் அருள் புரிந்தார் இறைவன். இவ்வாறு மக்கள் ஒழுக்க நெறியோடும், மண்ணை ஆளுகின்ற மன்னன் மக்கள் நலனே தன் நலம் என்று பிறர்துன்பத்தை போக்க பாடுபட்ட காரணத்தினாலும், இப்படி மனுநீதமும் , இராசநீதமும் தவறாமல் இருக்கின்ற இடத்தில் இயற்கையும் தன் வரம்பை விட்டு தவறாமலும் இறைச் சக்தி மேலோங்கி இருந்தது என்பதை மக்கள் உணரும் வண்ணம் அய்யா தெட்சணா பூமியின் சிறப்பை இங்கு எடுத்துரைக்கிறார்.

இப்படியாக, தெய்வ நீதம் சிறந்து விளங்கிய இடத்தில் மக்களும் நீதி தவறாது நல்வாழ்வு வாழ்ந்தனர். அறநெறி தழைத்ததுச் சோழநாட்டில் மதிப்பும் , மரியாதையும் , மனிதநேயமும் ஓங்கியது இறையருளால்.

## Day 7

### பெண்கள் நிலைமை

தெய்வத்திரு நிலைமை செப்பியபின் தேசமதில்
நெய்நிதியப் பெண்கள் நிலைமைகே ளம்மானை
கணவன் மொழியக் கலவுமொழி பேசாத
துணைவி நிலைமை சொல்லுவே னம்மானை
கற்கதவு போலே கற்பு மனக்கதவு
தொற்கதவு ஞானத் திறவுகோ லம்மானை
அன்பாகப் பெற்ற அன்னை பிதாவதுக்கும்
முன்பான சோதி முறைபோ லுறவாடிப்
போற்றியே நித்தம் பூசித்தனு தினமும்
சாற்றிய சொல்லைத் தவறா மலேமொழிவாள்
அரசன் துயில ஆராட்டி ஓராட்டிக்
கரமா னதுதடவிக் கால்தடவி நின்றிடுவாள்
துயின்ற தறிந்து துஞ்சுவாள் மங்கையரும்
மயன்ற ஒருசாமம் மங்கை யெழுந்திருந்து
முகத்து நீரிட்டு நான்முகத்தோ னையுந்தொழுது
அகத்துத் தெருமுற்றம் அலங்கார மாய்ப்பெருக்கிப்

பகுத்தாக நித்தம் பாரிப்பார் பெண்ணார்கள்
தவத்துக் கரிய தையல்நல்லார் தங்களுட
மனுநீதஞ் சொல்லி வகுக்க முடியாது
கனியான பெண்கள் கற்புநிலை மாறாமல்
இனிதாக நாளும் இருக்குமந்த நாளையிலே
வனியான சாதி வளமைகே ளம்மானை

விளக்கம்:

வானவர்களும் தானவர்களும் மகிழ்ந்து புகழ்ந்திட மக்கள் மனமகிழ்ந்து தானதர்மம் செய்திட, இயற்கையான தன்மையை விட்டு மாறாமல் தவறுகளை மறந்து பெரியவர்களையும் மதித்து வாழ்ந்தார்கள். மரியாதையோடும், மானத்தோடும், நற்குணங்களோடு பெண்கள் மனு நீதத்தோடும் வாழ்ந்தார்கள். நெய்போல் உருகிய மனம் கொண்டு, பூமணம் செறிந்து, தாராளக் குணத்தோடு, கணவன் பேச்சுக்கு மறுபேச்சு பேசாமல்,கல்லானாலும் கணவன் ,புல்லானாலும் புருஷன் என்பதற்கிணங்க கணவனை தெய்வமாக கருதி , கடவுளுக்கு அவர்களுக்கு பணிவிடை செய்வது போல் கணவனுக்கு பணிவிடைச் செய்தும், பெற்றோர்களிடம் அன்பு செலுத்தியும், பணிந்து நடந்தார்கள்.

விருந்தினர்களை அன்போடு வரவேற்று முகம் சுளிக்காமல் விருந்து செய்து உபசரித்தார்கள். கணவன் தூங்கும்போது அன்பு மொழி பேசி கணவன் தூங்கிய பின் தான் மனைவி தூங்குவாள். காலையில் எழுந்து நித்திய கடன்களை முடித்து, நீராடி கணவனையும், படைத்த இறைவனையும் வணங்கி, வீடு, வாசல் சுத்தம் செய்து, கோலம் போட்டுக் கொண்டாடி மகிழ்வாள். பக்குவமாக வேலைகள் செய்து ஒற்றுமையோடு தியாக வாழ்க்கை நடத்தி ஒருவருக்கொருவர் அன்போடு இணைபிரியாமல் ஒழுங்குமுறைகளோடு இருந்தார்கள். கடமை கண்ணியம் கட்டுப்பாடு, கற்புநெறி என்ற நிலை தவறாமல் மனநிறைவோடு நிம்மதியான வாழ்வு வாழ்ந்து மகிழ்ந்தார்கள்.

## Day 8

சாதி வளமை

சான்றோர் முதலாய்ச் சக்கிலி யன்வரையும்
உண்டான சாதி ஒக்கவொரு இனம்போல்
தங்கள்தங்கள் நிலைமை தப்பிமிகப் போகாமல்
திங்கள் மும்மாரி சிறந்தோங்கி யேவாழ்ந்தார்
செல்வம் பெருக சிவநிலைமை மாறாமல்
அலுவல் தினஞ்செய்து அன்புற் றிருந்தனராம்
தான்பெரி தென்று தப்புமிகச் செய்யாமல்
வான்பெரி தென்று மகிழ்ந்திருந்தா ரம்மானை
ஒருவர்க் கொருவர் ஊழியங்கள் செய்யாமல்
கருதல் சிவன்பேரில் கருத்தா யிருந்தனராம்
செய்யும் வழக்குச் சிவன்பேரி லல்லாது

வையம்வழக்கு வாரா தேயிருந்தார்
அடிபணிய வென்று அலைச்சல்மிகச் செய்யாமல்
குடிபொருந்தி வாழ்ந்து குடியிருந்தா ரம்மானை
சேயினுட ஆட்டுச் செவிகேட் டிருப்பதல்லால்
பேயினுட ஆட்டோர் பூதரறியா திருந்தார்
இந்தப் படிமனுவோர் எல்லா மிருந்துவொரு
விந்துக் கொடிபோல் வீற்றிருந்தா ரம்மானை

விருத்தம்

இப்படித் தெய்வ இராச்சிய நீதமும்
மற்படித் தேச மனுவுட நீதமும்
நற்புடன் தேசம் நாடி வாழ்வதைக்
கற்பு ரீசர் கண்டு மகிழ்ந்தனர்

விளக்கம்:

சான்றோர் முதல் அனைத்து ஜாதி வரையிலும் உள்ள பதினெட்டு ஜாதி மக்களும் வேறுபாடு இல்லாமல் ஓரினமாய் இருந்தார்கள். மாதம் மும்மாரி மழைப்பெய்து வளமான வாழ்வு பெற்று தவறாமல் சிவத்தொண்டு செய்து பதினாறு செல்வங்களோடு பெருவாழ்வு பெற்று சிறந்தார்கள்.

உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எண்ணங்களை களைந்து பெரியவர், சிறியவர் என்ற கர்வம் போக்கி, இறைவனே பெரியவன் என்று மகிழ்ந்தார்கள் இப்படி மக்கள் ஏற்றத்தாழ்வு பாராமல் நடந்ததால் அடிமைத்தனம் நீங்கி இறைவனுக்கு பயந்து உண்மையாய் வாழ்ந்ததால் பக்தி நெறியும், நற்புகழும் செறிந்தது. பேய் பிசாசுகள் தொல்லை இல்லை, பிள்ளைகள் சண்டை, தெருச்சண்டை, என்ற எந்த குழப்பங்களும் இல்லாமல் அன்பு பொருந்தி வாழ்ந்தார்கள்.

மேலும் சோழ மன்னனின் ஆட்சியில் நீதியும், நேர்மை காணப்பட்டது. மதிப்பும், மரியாதையும், நாட்டுப் பற்றும், நற்பண்புகளையும் ,நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்த மக்களைக் கண்டு இறைவன் மனம் மகிழ்ந்து அருள் பாலித்தார்.

# Day 9

கயிலை வளமை

முத்தான சீமை மூன்று நீதத்தோடு
பத்தாசை யாகப் பண்பாய்த் தழைத்திடவே
நாலான வேதம் நல்ல கலியுகமாய்
மேலாம் பரமாய் விளங்கி யிருந்திடவே
தேவ ருறையும் திருக்கயிலை தன்வளமை
பாவலர்கள் முன்னே பாடினா ரம்மானை
ஈச ருறையும் இரத்தின கிரிதனிலே

வாசவனுந் தேவர் மறையோரும் வீற்றிருக்க
பொன்னம் பலநாதர் பொருந்திருக்கும் மண்டபமும்
கின்னரர்கள் வேதம் கிளர்த்துகின்ற மண்டபமும்
வேதப் புரோகி விளங்குகின்ற மண்டபமும்
சீத உமையாள் சிறந்திலங்கும் மண்டபமும்
நீதத் திருமால் நிறைந்திலங்கும் மண்டபமும்
சீதை மகிழ்ந்து சிறந்திருக்கும் மண்டபமும்
ஆதவனுஞ் சந்திரனும் அவதரிக்கும் மண்டபமும்
வேதாவும் ருத்திரனும் வீற்றிருக்கும் மண்டபமும்
ஆரு மறிந்து அளவிடக் கூடாத
பாரு படைத்த பரமே சுரனாரை
விசுவாச மேலோர் விமல னடிவணங்கி
வசுவாசு தேவன் வந்து மிகவணங்கி
மறைவேத சாஸ்திரங்கள் மலரோ னடிவணங்கி
இறவாத தேவர் இறைஞ்சி மிகவணங்கி
எமதர்ம ராசன் எப்போதும் வந்துநிற்க
பூமகளும் வேதப் புரோகிவந்து தெண்டனிட
காமதேவன் முதலாய்க் கணக்கர் மிகுமுனிவர்
நாமநெடி யோன்பதத்தை நாள்தோறும் போற்றிநிற்க
தலைவ னிருக்கும் தங்கத் திருக்கயிலை
நிலைமை யெடுத்துரைக்க நிலையாது அம்மானை

விருத்தம்

"ஆறு செஞ்சடை சூடிய அய்யனார்அமர்ந்து வாழுங் கயிலை வளமதைக்
கூறக் கூறக் குறைவில்லை காணுமே கொன்றை சூடும் அண்டர் திருப்பதம்
வாறு வாறு வகுக்க முடிந்திடா மகிழுங் குண்ட வளஞ்சொல்லி யப்புறம்
வேறு வேறு விளம்பவே கேளுங்கோ மெய்யுள் ளோராகிய வேத அன்பரே"

விளக்கம்:

கயிலை வளமை

முத்தான தூய்மை போன்ற தெட்சணா பூமியில் தர்மநீதம், தெய்வ நீதம், மனுநீதம் ஆகிய மூன்று நீதங்களோடும், இறை ஆசியோடும், மக்கள் பண்புள்ளவர்களாய் திகழ்ந்தார்கள். நான்கு வேதங்களையும் தெரிந்துக்கொண்டு தேவாதி தேவர்கள் மற்றும் மூவாதி மூவர்களும் ஒன்றாக இருகின்றப்போது, கைலையில் நவரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட அறச் சிம்மாசனத்தில் அய்யா அமர்ந்து இருந்தார். கயிலையிலுள்ள அற்புதமான மலையில் பரமசிவன் தவநிலையில் அமர்ந்திருந்தார்.

இந்திரன்,தேவாதி தேவர்கள், பிரம்மா அனைவரும் ஒருங்கே அமர்ந்த நிலையில் இருந்தார்கள். அங்கே தங்க ஒளி வீசி ஜொலிக்கின்ற பொன்னாலாகிய பொன் மணி மண்டபம் வேதமந்திர மோதுகின்ற வேதியர் மண்டபம், சிவசக்தி பார்வதி சிறப்போடு அமர்ந்திருக்க சிங்கார மண்டபம், காக்கும் கடவுள் கருணையோடு நிறைந்திருக்கும் திருமால் மண்டபம்,

திருமகள் லட்சுமி தேவியினுடைய தனபதி மண்டபமும் , கையில் அமைந்திருப்பதுக் கண்கொள்ளாக் காட்சியாகும்.

மேலும் சூரியர்,சந்திரர் உதித்தெழுந்து தங்கியிருக்கும் ஒளி பொருந்திய மண்டபம், படைக்கும் பிரம்மாவும்,படியளக்கும் பரமன் அக்கினியாக ஒளி வீசுகின்ற மண்டபம்,யாருடைய அறிவாலும் அளவிட்டுச் சொல்ல முடியாத மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது. இந்த நிலையான பரப்பிரம்மமான பரமசிவனை வேத சாத்திரங்களாகிய ரிக், யஜுர், சாம, அதர்வணம் ஆகிய நான்மறை வேத சிருஷ்டர்களும் திருவடி போற்றி நின்றார்கள். மற்றும் கலைமகள் சரஸ்வதி தேவி, பூத கணங்கள் காமதேவன் ஆகிய மன்மதன் ,கால தேவனாகிய எமன் அவர் அருகில் இருந்து காலக்கணக்கை தவறாமலும், பிழையில்லாமலும் கணக்கிட்டுச் சொல்லும் கணக்கர் ஆகிய சித்திரபுத்திரர் மற்றும்நாராயணநாமம்ஓதும்நாரதர்அனைவரும்விசுவாசத்தோடும்,பக்தியோடும் நெற்றிக் கண்ணையுடைய முக்கண் மூர்த்தியை வணங்கி நின்றார்கள்.

மேலும் எவ்வளவோ அதிசயம் கொண்ட வெள்ளி கைலாய மலையின் சிறப்பை கூற கூற முடியாத அளவிற்கு அதன் சிறப்பு உயர்ந்ததாக இருந்தது. மேலும் பிரிந்து விரிந்த சுருள் போன்ற செஞ்சடைக்குள் கங்கையைத் தரித்து , மேல் பிறையைச் சூடிய விரிசடை கடவுள் அல்லவா? எம்பிரானாகிய சிவபெருமான். அவருடைய கைலாச இருப்பிடத்தை வர்ணித்து பேச யாராலும் முடியாது.அத்தகைய சிறப்பு வாய்ந்தது கயிலை.

கொன்றைமலர் சூடி கொள்ளும் சிவபெருமான் தில்லையில் திரு நடனம் ஆடிய சிறப்பையும், ஆதியும் அந்தமும் இல்லா சிவப்பொருளின் மெய் ஞானத்தைப் பற்றி விவரிக்க முடியாத வண்ணம் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது கயிலையின் வளம் .

## Day 10

அகில வளமை

கயிலை வளமை கட்டுரைக்கக் கூடாது
அகில வளமை அருளக்கே ளம்மானை
தேவாதி தேவர் திருக்கூட்ட மாயிருக்க
மூவாதி மூவர் மிக்கவொரு மிக்கவொரு
சிங்கா சனத்தில் சிறந்திருக்கும் வேளையிலே
மங்காத தேவி மாதுதிரு லட்சுமியாள்
ஈரே ழுலகும் இரட்சித்த வுத்தமியாள்
பாரேழும் படைத்த பரமதிரு லட்சுமியாள்
நன்றா யெழுந்திருந்து நாரா யணர்பதத்தைத்
தெண்டனிட்டு லட்சுமியும் செப்புவா ளம்மானை
தேவரீ ரென்னைத் திருக்கலியா ணமுகித்துக்
கோவரி குண்டக் குடியிருப்பி லேயிருத்திப்
போவது என்ன புதுமை எனக்கறிய

தேவரீர் நீர்தான் செப்பிடீர் என்றுரைத்தாள்
பின்னுமந்த லட்சுமியாள் பெருமாள் தனைத்தொழுது
என்றும் இருக்க இறவா திருப்போனே
ஆதியால் சூட்சம் அளவெடுக்கக் கூடாத
நாதியாய் நின்ற நாரா யணப்பொருளே
தேவாதிக் கெல்லாம் திருமுதலாய் நின்றோனே
மூவாதிக் கெல்லாம் முதன்மையாய் நின்றோனே
உமக்கு எதிரி உலகமதி லுண்டோகாண்
தமக்கு எதிரிவந்த தன்மை மிகவுரையும்
உகத்துக் குகம்பிறந்து உலகிடத்தி லேயிருக்க
அகத்துவந்த ஞாயம் அருளு மென்றாள் அம்மானை
என்று திருவும் இதுவுரைக்க மாயவரும்
நன்று நன்றென்று நாரா யணருரைப்பார்

அகில வளமை

விளக்கம்:

அகில உலக மக்களின் உயிர்கள் இருக்கின்ற வைகுண்டத்தில் நடந்ததை பற்றி உரைக்கிறார். முப்பத்து முக்கோடி தேவர்களும் இருக்கும் போது சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூவரும் வந்து வைகுண்டத்தில் அமர்ந்திருக்கிற வேளை,உலகத்திற்கெல்லாம் செல்வம் கொடுக்கும் உத்தமியான லட்சுமி வந்து பவ்வியமாக நாராயணர் பாத திருவடிகளை பணிவோடு வணங்கி, ஆரா அமுதம் அளிக்கின்ற தேவாதி தேவா, அம்மையும் அப்பனும் ஆகிய அரும்பொருளே, ஆணும், பெண்ணுமாய் அன்புருவாய் ஆனவா! எனக்கு சர்வமும் நீதான். வாமன ரூபனே! வானவர் தேவனே! எல்லையில்லா வல்லமை உடைய நாராயண மூர்த்தியே! அகிலத்தின் திருவுருவே! சங்கு, சக்கரம், பத்மம், கதை தாங்கிய கருடாரூபனே ! உம்மை வணங்குகின்றேன், என்று தொழுது கூறுகிறார் எப்படியென்றால்

என் அன்பு தெய்வமே என்னை தேவலோகத்தில் வைத்து கல்யாணம் முடித்து வைகுண்டத்திற்கு அழைத்து வந்து, அன்போடு இருக்கும் போது என்னை தனியே விட்டுவிட்டு எங்கு சென்றீர்? என்ற காரணத்தைக் கேட்டாள் லெட்சுமி தேவியாள். அழிவே இல்லாத அச்சுதரே, ஆதி பரம்பொருளாகிய சிவ பெருமானால் கூட உங்களுடைய மாய சக்தியை அளவிட முடியாத படி எங்கும் நிறைந்த நாராயண பரம் பொருளே! தேவாதி தேவரெல்லாம் தெய்வமாகி ஆற்றல் பெற்றவரே! மும்மூர்த்திகள் முதன்மையானவரே! உமக்கு போட்டியாக (எதிரியாக) ஒருவர் பிறந்திருக்கின்றாரா? நான் அறிய எனக்குச் சொல்ல வேண்டும் என்றார்.

யுகத்துக்கு யுகமாய் மனிதனாய் பிறந்து பூலோகத்திலேயே இருந்து கொண்டு இருக்க என்ன காரணம்? பூலோக மக்கள் மனதில் இடம் பிடிக்கின்றன காரணமா? உண்மை உரைக்க வேண்டும் என்று வேண்டினாள். .இவ்வாறு செல்வத் திருமகள் லட்சுமி தேவி நாராயணரிடம் கேட்க பெருமாளும் நீ கேட்பது நல்லது நான் உனக்கு பதில் உரைக்கிறேன் என்று லட்சுமி தாயாருக்கு நாராயணர் யுக வரலாறுகளைப் பற்றி உரைக்கத் தொடங்கினார்.

# Day 11

நீடியயுகம்

சக்தி சிவமும் தானுதித்த காலமதில்
எத்திசையும் நாமள் இருபேர் பிறப்பதிலும்
ருத்திரர் மயே சுரருதித்த நாளதிலும்
பத்தியுள்ள தேவர் பரநாதர் நாளதிலும்
வானோர்கள் தெய்வார் மறைவேத சாஸ்திரமும்
ஈனமாய்ச் சண்டன் இவன்பிறந்த நாளதிலும்
ஆதித்தன் வாயு அண்டபிண்டம் தோன்றியபின்
ஈதுதித்த காலம் இராச்சியமொன் றுண்டுகண்டாய்
அவ்வுகத்தைக் கண்டு ஆதிபிரமா மகிழ்ந்து
இவ்வுகத்து நாமம் என்னவிடு வோமென்று
மாலும் பிரமாவும் மாயா திருப்போனும்
ஆலோசித் தவர்கள் ஆகமத்தைத் தான்பார்த்து
நீடிய யுகமெனவே நியமித் துறுதிகொண்டு
தேடிய முப்பொருளும் செப்பினர்கா ணம்மானை
அவ்வுகத்தை ஈசர் ஆர்ப்பரித்த காலமதில்
இவ்வுகத்துக் காரை இருத்துவோ மென்றுசொல்லி
எல்லோருங் கூடி இதமித்தா ரம்மானை
அல்லோருங் கூடி ஆலோசிக்கு மளவில்
தில்லையா ரீசன் திருவேள்வி தான்வளர்க்க
நல்லையா வேள்வி நன்றாய் வளர்த்திடவே
பிறந்தான் குறோணி பெரிய மலைபோலே
அறந்தா னறியா அநியாயக் கேடனுமாய்
பிண்டம் நிறையும் பொல்லாதான் தன்னுடம்பு
அண்டம் அமைய அவன்பிறந்தா னம்மானை
முகங்கண் களெல்லாம் முதுகுப்பு றமேலாட
நகக்கரங்கள் கோடி கால்க ளொருகோடி
தவங்க ளறியாச் சண்டித் தடிமோடன்
பவமே நாள்தோறும் பண்ணு மியல்புடையோன்
குறோணி யவனுயரம் கோடிநாலு முழமாய்
கயிலை கிடுகிடெங்கும் கால்மாறி வைக்கையிலே
அகிலங் கிடுகிடெங்கும் அவனெழுந்தா லம்மானை
இப்படியே குறோணி என்றவொரு அசுரன்
முப்படியே நீயே யுகத்தி லிருந்தான்காண்
இருந்து சிலநாள் இவன்தூங்கித் தான்விழித்து
அருந்தும் பசியால் அவனெழுந்து பார்ப்பளவில்
பாருகங் காணான் பலபேருடல் காணான்
வாருதி நீரை வாரி விழுங்கினன்காண்
கடல்நீ ரத்தனையும் கடவாய் நனையாமல்
குடலெல்லா மெத்தக் கொதிக்கு தெனவெகுண்டு
அகிலம் விழுங்க ஆர்ப்பரித்து நிற்பளவில்
கயிலை தனைக்கண்டு கண்கள்மிகக் கொண்டாடி

ஆவி யெடுத்து அவன்விழுங்கு மப்போது
தாவிக் குவித்துத் தப்பினார் மாயவரும்
மாயவரு மோடி மண்ணுலோகம் புகுந்து
தூயவரு மங்கே சிவனை மிகநினைத்துத்
தவசு இருந்தார்காண் தாமோ தரனாரும்
தவசு தனிலீசன் சன்னாசி போலேவந்து
ஆருநீ யிந்த ஆழ வனந்தனிலே
ஏதுநீ தவசு எனைநினைந்த வாறேது
என்று சன்னாசி இதுவுரைக்க மாயவரும்
பண்டுபட்ட பாட்டைப் பகர்ந்தா ரவரோடே
கயிலை யெமலோகம் கறைக்கண்டர் சக்திவரை
அகில மதைக்குறோணி அசுரனென்ற மாபாவி
விழுங்கினான் நானும் உபாயமாய்த் தப்பிவந்தேன்
பளிங்கு மலைநாதன் பாரத்தே வாதிமுதல்
பண்டுபோல் நாளும் பதியி லிருந்திடவே
என்றுங் கயிலை இலங்கி இருந்திடவும்
முண்டு செய்தபாவி முகமு மவனுடம்பும்
துண்டா றதாகத் தொல்புவியி லிட்டிடவும்
கண்டங்கண்ட மாய்ப்போடக் கடிய வரமெனக்கு
தண்டமிழீர் நீரும் தரவே தவசிருந்தேன்
என்று திருமால் எடுத்துரைக்க வே யீசர்
மன்று தனையளந்த மாலோ டுரைக்கலுற்றார்
கேளாய்நீ விட்டிணுவே கேடன் குறோணிதனைத்
தூளாக்கி யாறு துண்ட மதுவாக்கி
விட்டெறிந்தா லவனுதிரம் மேலும் வருயுகத்தில்
கெட்டுக் கிளையாய்க் கொடிய சூரக்குலமாய்ப்
பிறக்கு மவனுதிரம் பொல்லாதான் தன்னுடம்பு
துண்ட மொன்றுதானும் தொல்புவியி லேகடிய
குண்டோம சாலியனாய்க் குவலயத்தி லேபிறப்பான்
அப்படியே குறோணி அவனுதிர மானதுவும்
இப்படியே ஆறு யுகத்துக் கவனுடம்பு
வந்து பிறப்பான்காண் மாற்றானா யுன்றனக்கு
உகத்துக் குகமே உத்தமனாய் நீபிறந்து
அகத்துக் கவன்பிறப்பு ஆறு யுகமதிலும்
உண்டு மவன்சீவன் உயிரழிவு வந்தவந்நாள்
பண்டு நடுக்கேட்டுப் பாவி யவனுயிரைக்
கொன்றுபோட் டேநரகக் குழிதூர்க்க நாள்வருங்காண்
என்று விடைகொடுத்தார் ஈசுரர்கா ணம்மானை
அன்று விடைவேண்டி அதிகத் திருமாலும்
குன்றுபோல் வந்த கொடிய படுபாவி
குறோணி தனைச்செயிக்கக் கோபம்வெகுண் டெழுந்து
சுறோணித வேதன் துடியாய் நடந்தனராம்
நாகத்தணை கிடந்த நாரா யணமூர்த்தி
வேகத்தால் குறோணிதனை வெட்டிப் பிளக்கலுற்றார்
வெட்டினா ராறு மிகுதுண்ட மம்மானை
கெட்டி தானென்று கிருபைகூர்ந்தே தேவர்

துண்டம தாறும் தொல்புவியி லேபோட்டுப்
பிண்டமதைச் சுமந்து போட்டனர்கா ணம்மானை
அந்தக் குறோணி அவனுதிர மானதையும்
கொந்து கொந்தாகக் குளம்போலே குண்டுவெட்டி
உதிரமதை விட்டு உயர்ந்தபீடம் போட்டுச்
சதுர யுகமெனவே தான்வகுத்தா ரோர்பீடத்தை

நீடிய யுகம்

சக்தி உமை பார்வதியும், சிவனும் தோன்றிய ஆதிகாலம் முதல் எத்திசையும் அருளோடு புகழ் பெறக் கூடிய அளவில் இரண்டாவதாக நாராயணர் ஆகிய நானும் இலட்சுமியாகிய நீயுமாக நாம் இரண்டு பேரும் தோன்றினோம். அதன் பிறகு ருத்திரர், மகேஸ்வரர் போன்றவர்களும் வல்லமையான சக்தியோடு தோன்றினார்கள். அதன்பிறகு பக்தியுள்ள தேவாதி தேவர்களும் முனிவர்களும் தோன்றினார்கள். உயிர்களின் எண்ணிக்கை அதிகமானது அதன்பிறகு மேலோகத்தில் உள்ளவர்களும் மறை வேதங்களும் சாத்திர நூல்களும் தோன்றின.

அப்போது எல்லாம் நன்மை அளிக்கும் விதத்திலேயே இருந்தது. அந்த நேரத்தில் தீமைகள் இருந்தால் எப்படி இருக்கும் என்று எண்ணிய மாத்திரத்தில், அருவருப்பை ஊட்டும் வகையில் உடலமைப்பைக் கொண்ட சண்டாளப்பாவி ஆகிய அரக்கர் குலம் உதித்த நாளில், நவகிரகங்களும், காற்று,நீர், நெருப்பு, ஆகாயம், பூலோகம் உருவானது. அதோடு உயிர்களும் படைக்கப்பட்டது.அனைவரும் கர்வத்தோடு வாழத்தொடங்கினர்.

தேவர்களுக்கும் கர்வம் தோன்றியது. கர்வம் தோன்றிய காலத்தில் அசுர உலகம் என்று தனி இடமும் இருந்ததால் அனைவரும் அசுர குணம் பெற்று கர்வதோடு வாழ்ந்தார்கள். அசுரர்களுடைய பிறப்பை கண்ட பிரம்மா மனம் இந்த குலத்திற்கு பெயரிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். பிரம்மாவின் யோசனையை அறிந்த திருமாலும் சிவபெருமானும் யோசனை செய்து மூவருமாக பெயரிட ஒருமனதாக முடிவு செய்து அசுரன் அவதரித்ததால் இந்த யுகம் நீடிய யுகம் என்று உறுதி செய்து பெயரிட்டார்கள். நீடிய யுகம் தோன்றியது.

இந்த நீடிய யுகத்தை ஈஸ்வர பெருமானே ஆண்டு அன்பே சிவமாக இருந்த காலத்தில் அனைவரும் சக்தி பெற்று, புத்திகெட்டு ஆணவத்தால் அறிவிழந்து செயல்படத் தொடங்கினார்கள். ஆகையால் இந்த இடத்திற்கு தலைமையாக அமைக்க ஒருவரை பிறவி செய்ய மறுபடியும் எல்லோரும் கூடி ஆலோசனை செய்தார்கள். பாருலகம் படைத்த தில்லை அம்பல நடராஜாராகிய ஈஸ்வரர், யாகம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். அக்னி ஜுவாலை மேலே எழும்பி யாகம் நன்றாகச் செயல்பட்டது. யாகம் முடிவாகும் போது யாகத்திலிருந்து குரோதம்+அணி என்ற குறோணி தீமையையே உடலாகக் கொண்ட, மலை போன்ற உருவம் தோன்றியது.

இவ்வாறாக நீடிய யுகத்தில் ,அறம் என்றால் என்னவென்று அறியாத நீச பாவி தோன்றினான். பொய், புரட்டு, வஞ்சகம், சூது , வாது,காமம், குரோதம்,

பேராசை இவைகளின் மொத்த உருவமாய் அறிவே இல்லாத கசடனாய் அனைவரும் நடுங்கும்படியான அசுரனாகக் காணப்பட்டான். அவனுக்கு கூர்மையான நகங்களை கொண்ட கை, கால்கள் ஒரு கோடி. அவனுடையக் கண்கள் முதுகுப் பக்கமும் திரும்பி பார்க்கும் படியாய் (அதாவது எதையும் நேராக சிந்திக்கும் வல்லமையில்லாத எதிர்மறை எண்ணம் உடையதாக) அமைந்திருந்தது. தவங்கள் அறியா தடிமாடன். நேர்மை அறியா முழு மூடன்.

பாவி குறோணியின் உயரமோ நான்கு கோடி.அளக்க முடியாத உயரம் உடையவன் (அதாவது கலிமாய எண்ணம் உடையவர்களின் மனதிற்குள் என்ன இருக்கிறது என்பதை யாராலும் அளவிடாத வண்ணம் இருக்கும்) அவன் நடந்தால் பூமி நடுங்கும்(இறைபயம் இல்லாத நீசதன்மை உடையவர்கள் எப்போது என்ன தீமை செய்யப் போகிறார்கள் என்று இறை பயம் கொண்டு வாழ்பவர்கள் நடுங்கும் வண்ணம் .அசைந்தால் கைலாய மலை கிடு,கிடு என்று ஆடும். துஷ்ட அமைப்போடு இருந்தவன் தான் குறோணி என்ற கொடியவன்.

அடங்காத பசி உடையவன் (உலகியல் இன்பங்கள் அத்தனையும் பெற்றாலும் மனநிறைவு அடையாதவன்).தூங்கி விழித்த உடன் நிமிர்ந்து மேலே பார்த்தால், மேலோகத்தை காணாது.சூரியனையும், தேவாதி தேவர்களையும் சேர்த்து விழுங்கி விடுவான். கடல் நீரை அப்படியே உறிஞ்சி விடுவான். அப்படியும் அவன் பசி அடங்காது. பசியால் அகில உலகமும் அதிரும்படி முழங்கி கூச்சலிடுவான். கைலாய மலையை கண்டு ஆனந்தம் கொண்டு பாவி குறோணி ஆவி அனைத்தும் விழுங்க நினைத்தான்.அப்போது அங்கே இருந்த நாராயணர் தப்பி ஓடி மாயமாய் மறைந்து, தவப் பொருளான சிவபெருமானை மனமுருக வேண்டினார்.

தியான நிலையில் இருந்த மாயவன் தன்னை நினைத்து தவநிலையில் மாயோன் இருக்கிறார் என்று எண்ணி துறவியாக திருமால் அருகில் வந்தார். வந்து சிவனாரும் அருகில் நின்று யார் நீ? இந்த வனத்திலே கடும் தவம் புரிகின்றாயே ஏன்? என்றார்.மாய பெருமாள் இதனை அறிந்து கொண்டு சிவபரம் பொருளே! நீர் குறோணியைப் பிறவிச் செய்து விட்டதால் அவன் கைலாயம், எமலோகம், சக்தி மண்டலம் வரை உள்ள அனைத்தையும் விழுங்கி விட்டான். அவன் பசி அடங்கவில்லை, என்னை பிடித்து விழுங்க ஓடிவந்தான். என்னுடைய மாயா சக்தியினால் தப்பி வந்து விட்டேன் என்றார். கைலாய மலையை காணவில்லை. கண்ணாடி போல் ஒளி வீசிக் கொண்டிருந்த கைலாயமலை மறுபடியும் புகழோடு விளங்கவேண்டும் முரட்டுத்தனமான மூடன் குறோணியைச் அழிக்க வேண்டும் என்று ஈஸ்வரரைக் கேட்டு வேண்டினார்.

சிவபெருமான் மாயன் உரைத்ததைக் கேட்டுக் கோபம் கொண்டார். சிவபெருமான் திருமாலிடம் குறோணியை கொல்ல வேண்டு மென்றால் அவன் உடலை ஆறு துண்டமாக (ஆறு அகப்பகைகளாக காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம், மோகம்) வெட்டிச் சாய்க்க வேண்டும். வெட்டிய துண்டுகளை பூமிக்கு அடியில் புதைக்கவேண்டும். அப்படியே ஆறு துண்டுகளாக வெட்டி சாய்த்து வீசி எறிந்ததும் அதில் சிந்துகின்ற உதிரம் இனி வரும் அனைத்து யுகத்திலும் உயிரோடு தோன்றும் கெட்ட குணம்.

ஆகவே ஆறு பிரிவாகப் தனித்தனியே மிகப்பெரிய அரக்க குலமாக அவனியில் பிறக்கும் .இந்த செயலை திருமாலாகிய நீரே செய்ய வேண்டும் என்றார் ஈஸ்வரர். இதைக் கேட்ட மாய பெருமாள் குறோணியை அழிக்குமாறு இறைவனை வேண்டி தன் மாயசக்தியால் (ஞானம் என்கிற வாளால்) ஆறு துண்ட மாக வெட்டி அழிக்கின்ற வலிமையான சக்தியை எனக்கு வரமாக தர வேண்டும். அதற்காகவே என் மனதை ஒருநிலைப்படுத்தி உண்மை வேண்டி தவம் இருந்தேன் என்றார். திருமால் தன் விருப்பத்தை ஈஸ்வரனிடம் கூறியதும், உலகளந்த மாயவரைப் பார்த்து ஆனந்தமாய் அவரை பார்த்து சிவன் மனம் உருகி மறுபடியும் உரைக்கல்லுற்றார்.

விஷ்ணுவே! இவ்வாறு தீய குணம் கொண்ட துரோகியாக குறோணியை வெட்டி சாய்க்கும் போது வெளிப்படும் உதிரமானது தீங்கு செய்யக்கூடியது. ஒவ்வொரு துண்டும் தீங்குச் செய்யக்கூடிய அரக்கர் குலமாக செயல்படும். அவனுடைய உதிரமானது உருண்டு திரண்ட மலைகல் போன்று உருளும் முண்ட வடிவத்தில், யாக சக்தியைக் கவசமாகப்பெற்று பூமியில் பிறப்பான். அவ்வளவுக் கொடுமையானது குறோணியினுடைய உதிரம். ஆகையால் ஆறு யுகங்கள் தொடர்ந்து அவனுடைய உடம்பானது பிறவி எடுத்து பூமியில் பிறப்பான். உயிர்களையும் உலகையும் அழிக்கும் ஆற்றல் பெற்று உமக்கு எதிரியாய் நடப்பான்.

இந்த ஆறு யுகங்கத்திலும் நேர்மையான, நீதி, தர்மம் காக்க நீர் அவதாரம் மேற்க்கொள்ள வேண்டும். அவனுடைய தீயசக்தியை ஆறு யுகங் களிலும் அழிக்க போரிட்டு, அதில் வெற்றி பெறுவீர் என்று சிவன் வரம் கொடுத்தார். அவனை அழிக்கும் நாள் விரைவில் வரும். அப்போது அவன் செய்யும் பாவங்களை அழித்து பூலோகத்தில் செயல்படாதப் படி நரகக் குழியில் தள்ளி எரிக்கும் நாள் சீக்கிரம் வரும் என்றார். இது கேட்டுத் திருமால் எத்தனை யுகமானாலும் இக் கொடிய அரக்கர்களை அழிக்க எனக்கு துணையாய் இருக்க வேண்டும் என்றார். திருமால்! அப்படியே நான் துணையாக இருப்பேன் என்று வாக்களித்தார்.

சிவபெருமானிடம் வரம் பெற்ற திருமால் அதிக சக்தியோடு உருண்டு திரண்ட மலை போன்ற அப்பாவியைக் காணத் துடித்தார். துஷ்டர்களை அழித்து வெற்றி பெற வீறுகொண்டு எழுந்தார். ஐந்து தலை நாகத்தின் பள்ளிகொண்டப் பெருமாள், மகா விஷ்ணு ஆகிய பச்சைமால் வீரத்தோடு தந்திரமாய் செயல்பட சிவபெருமானது தண்டாயுதத்தோடு எழுந்தார்.

நாராயணர் வீரத்தோடு சிவஞானம் பெற்று குறோணியை தொடர்ந்து ஆறுத்துண்டுகளாக வெட்டி அழித்தார். தேவர்கள் எல்லோரும் மாயன் செயலை கண்டு மகிழ்ந்து, ஆறுத் துண்டங்களையும் பூலோகத்தில் கொண்டு வந்துப் போட்டார்கள். பூமி நிரம்பிவிட்டது. குறோணியை வெட்டும் போது அதில் சிந்திய உதிரம் அனைத்தையும், அகலமான பெரிய பாதாளக் குழித்தோண்டி அக்குழியில் நிரப்பினார்கள்.

# Day 12

சதுரயுகம் –

குண்டோமசாலி பாடு

அவ்வுகத் திலேயுதிரம் அசுரக் குலமாகி
முவ்வுகத்துப் பாவி முடிந்தவொரு துண்டமதைக்
குண்டோம சாலி எனவே கொடியவனாய்ப்
பண்டோர் குறோணி பாதகனாறு துண்டமதில்
வந்துபிறந் தான்சதுர வையகத்தி லம்மானை
முந்து பிறந்த முழுமோச மானதிலும்
மந்து முகமாய் மாபாவி தன்னுயரம்
நானூறா யிரமுழங்கள் நாடுமவன் கரங்கள்
முந்நூறு கால்கை வேழ்கள் துதிபோலே
உடைதோ ளுடம்பு உருவறியா மாபாவி
படைத்தோன் தனையறியான் பாரியென்று மறியான்
அட்டைபோ லேசுருண்டு அம்மிபோ லேகிடப்பான்
மட்டைபோ லேதிரிவான் வயிறு மிகப்பசித்தால்
அன்னுகத் திலுள்ள அசுரக் குலங்களையும்
தன்வயிற்றுக் கிட்டுத் தடிபோ லுருண்டிடுவான்
இப்படியே நாளும் இவன்குலங்க ளானதெல்லாம்
அப்படியே தின்று அவன்பசிக ளாற்றாமல்
அய்யையோ வென்று அலறினன்கா ணம்மானை
மெய்யை யனான விறுமா அதுகேட்டுச்
சிவனைத் தொழுது செப்புவா ரம்மானை
தவமே தவப்பொருளே தாண்டவசங் காரவனே
எவனோ ஒருத்தன் இட்டசத்த மானதிலே
தவலோக மெல்லாம் தானலைவ தேதெனவே
மாய னதுகேட்க வகுப்பா ரங்கீசுரரும்
ஆயனே நீயும் அறியலையோ ஞாயமது
குண்டோ மசாலி கொடியமா பாவியனாய்ப்
பண்டோர் குறோணி பாதகன்தன் துண்டமதாய்ப்
பிறந்தா னவனும் பேருதிரந் தன்கிளையாய்
இறந்தா ரவர்கள் இரையா யவன்தனக்கு
ஆன பசிகள் ஆற்றாம லேயவனும்
வானமது அலைய வாய்விட்டான் கண்டாயே
என்று சிவனார் ஈதுரைக்க மாயவரும்
அன்று மகாமாலும் அக்குண்டோ மசாலினுக்கு
இரையாகத் தேவர்களை ஏற்றநாங் கிலாக்கி
வரையா னதைத்தூண்டில் மறையைக் கயிறாக்கி
வாயுவைத் தோணி வருணன் தனைமிதப்பாய்த்
தேய மதைச்சூழத் திரைகடலைத் தான்வருத்தி
ஓடையாய்ச் சதுர யுகம்வழியே தானேவி
தேடரிய மாயன் திருவோணி தானேறி

மூவாதி மூவர் ஓணிதனைத் தள்ளிவரக்
காவாலி மாயன் கன்னியிலே தூண்டலிடச்
சதுர யுகமாளும் சண்டித்தடி மூடன்
எதிரே வருமாற்றில் இரையைமிகக் கண்டாவி
நாடிப் பசிதீர நல்லஇரை யாகுமென்று
ஓடிவந்து பாவி விழுங்கினான் தூண்டல்தனை
தூண்டில் விழுங்க சுரண்டி மிகக்கொளுவி
மாண்டனன் காண்பாவி வலிய மலைபோலே
பாவி மடிய பரமே சுரனாரும்
தாவிச் சலத்தால் சதுர யுகமழித்தார்

குறோணியின் உதிரத்தைப் பாதாளக் குழித்தோண்டி அக்குழியில் நிரப்பி உயரமான மேடை போல் பீடம் அமைத்தார்கள். அது மிகப் பெரிய சதுர வடிவில் அமையப்பெற்றதால் அதுவே சதுர யுகம் ஆனது. அவ்வாறு அமையப்பெற்ற சதுரயுகத்தின் பீடத்தில் உள்ள ரத்தம் அரக்கர் குலமாகி மறுபடியும் பூமியில் உயிரோடு எழும்பியது. முன்யுகமாகிய நீடிய யுகத்தில் பாவியாக இருந்த குறோணியின் ஒரு சதைத்துண்டு ஆனது அசுர உருவம் பெற்று அவனியில் எழுந்தது. மலைபோன்ற உடலும், குரோத குணம் படைத்த மிகப்பெரிய அரக்கனாய் அவனிருந்தான். ஆறுத்துண்டுகளில் ஒரு துண்டு உயிர் பெற்றது. ஒரு துண்டில்(ஆறில் ஒரு பகுதி) வந்து பிறந்த ஒரு அசுரனின் பெயர் தான் குண்டோம சாலியன்.

குறோணியின் உடல் அமைப்பை போல் மோசமான அமைப்பு தான் குண்டோமசாலியும் பெற்றிருந்தான். குண்டோம் சாலியும் எப்பொழுதும் தூங்கும் முகமானவன் தான்.இவனுடைய உயரமும் 400 ஆயிரம் முழ அளவுக் கொண்டது. கைகள் முன்னூறு, கால்களும் முன்னூறு. ஒரு யானையின் துதிக்கை பலம் கொண்டது. அவன் அணியும் ஆடைகள், அவனது வலிமை, அவன் உடல் உருவ அமைப்பு, இவைகளைப்பற்றி புரியாத உணர்ச்சிகள் இல்லா முழு மூடன். தன்னை படைத்த இறைவனையும் மற்ற உயிரினங்களையும் அறியாத புல்லினன் ஆகிய முட்டாள். அட்டை போல் சுருண்டு அம்மிக்கல் போல் நீண்டு உணர்வற்ற ‘சடம்’ போல் கிடப்பான் . மலைப் பாம்பாக இருந்தாலும் தன் உடலை நீட்டி சுருக்கி அசையும். ஆனால் படுபாவி பாறைபோல் கிடப்பான். பாம்பை போல் ஊர்ந்து திரியும் இயல்பு உடையவன்.

பசி வந்தால் சுற்றி அலைந்து,சதுர யுகத்திலுள்ள அரக்கர் குலத்தையே அழித்து தனக்கு இரையாக்கி விடுவான். அத்தனை பேர்களையும் உண்ட பின் உருண்டத் தடிப் போல் அப்படியே கிடப்பான். நிற்கமுடியாமல் உருளுவான். பசி அடங்காது தீயைப் போன்ற வயிறு உடையவன்.எரியும் தீயில் எவ்வளவு விறகுக்கட்டைகளைப் போட்டாலும் எரியும். அக்கினிக்கு பசி அடங்குவதில்லை. உயிர் உள்ளது ,உயிர் அற்றது, அத்தனையும் எரித்து சாம்பலாக்கிவிடும். இரக்கம் கொள்ளாது, அது போன்ற குணம் படைத்தவன் தான் குண்டோமசாலியன்.

இப்படி தீமைகள் செய்கின்றவனின் ஆயுளை முடிக்க மாயப்பெருமான் எண்ணம் கொண்டார். கடவுள் மனம் வாக்குக்கு எல்லாம் எட்டாதவர் என்று வேதங்கள் கூறுகின்றன. ஒருவன் எதை தியானிக்கிறானோ அதன் இயல்பு

அவன் உள்ளத்தில் வருகிறது.அதுபோலவே தீமைகளை அழிக்கும் உண்மையான வீர உணர்வோடு செயல்பட கலியுகத்தை காக்க வந்த நாயகன் நாராயணமூர்த்தி இது அறிந்து, சிவபெருமானிடம் செய்தி சொல்ல வருகிறார். தியானத்தில் அமர்ந்திருந்த சிவனிடம் வந்து மாயோன், தவப் பொருளே! தாண்டவமாடி தீமைகளை அழிப்பவரே! ஏதோ ஒரு கூக்குரலால் உலகமே அசைகிறது. தவலோகத்தில் தவம் செய்கின்ற முனிவர்களெல்லாம் தவம் கலைந்த நிலையில் அதிர்ச்சியால் நடுங்குகிறார்கள் ஏன் என்று கேட்டார்

மாய பெருமாள் கேட்க பதிலுரைத்தார் சிவன். மாயவரே! என்ன காரணம் என்று அறியாமலா கேட்கிறீர், முன்னாள் குறோணியினுடைய ஒரு துண்டில் பிறந்த குணசாலியான கொடியவன் அத்தனை உயிர்களையும் சாகடித்தான். அவன் பசி அடங்காமல் மேல் மேல்லோகம் அசையும் படிக்கூக்குரல் இடுகிறான் என்று சிவபெருமானிடம் விவரமாக எடுத்துரைத்தார். உடனே மகாவிஷ்ணு வாகிய பெருமாள், குண்டோமசாலியனைக் கொன்றழிக்கத் திட்டமிட்டார்.

வரம் கொடுப்பது சிவனானாலும், அசுரர்களை அழித்து, மாயயை மாற்ற மாண்புடன் வந்தவராச்சே, மாயப் பெருமான். ஒரு சமயம் அசுரர்களும் தேவர்களும் பாற்கடலைக்கடைய, மலையை மத்தாக்கி, வாசுகி என்ற பாம்பை கயிறாக்கி, அமிர்தம் கடைந்தபோது, வாசுகி என்ற பாம்பு வலி தாங்காமல் அமுதம் கவிழும் நிலையானது. அதைக்கண்ட அச்சுதராகிய மாயவர் ஆமை உருக்கொண்டு தாங்கி காப்பாற்றியவர் அல்லவா!

மாயோன், குண்டோம சாலிக்கு இரையாக தேவர்களை மாற்றுகிறார், மலையைத் தூண்டிலாக்கி , வேதங்களைக் கயிறு போல் திரித்து, புதுமையானச் செயலைச் செய்து, வாயுபகவானை தோணியாக மாற்றியும், வருணபபகவானை அழைத்து, கடல் நிரம்பி வழிய மழையை உண்டுபண்ணி, நாடு நகர் எல்லாம் கடல்சூழ்ந்து வரத்தந்திரம் செய்தார். ஆழ்கடல் பொங்கி வர, அதில் ஆனந்தமாய் தோணியாகிய கப்பல் அசைந்து வர சதுர யுகத்தைக் கடந்து மாயோன் அரக்க ஜடமாகிய குண்டோ மசாலியை கண்டு பிடிக்க ஓடமாகிய தோணியில் ஏறி பயணமானார். மேலோகம், பூலோகம், பாதாள லோகமாகிய மூன்று லோகத்தாரும் தோணியை தள்ளி வர, மாயவனார், சிவனை மனதில் தியானித்து புதுமையான முறையில் செய்த தூண்டிலை மாயமாக தூக்கி எறிந்தார்.

சதுர யுகத்தை ஆக்கிரமித்த அரக்க மூடன் தனக்கு இரைக் கிடைத்து விட்டது என்று ஆவிப் பிடித்து அப்படியே விழுங்கிவிட்டான். பசி தீர நல்ல உணவுக் கிடைத்தது என்று ஆவேசமாக ஓடிவந்து தூண்டிலோடு சேர்த்து விழுங்கினான். அவன் விதியும் முடிந்தது. தூண்டிலோடுச் சேர்த்து விழுங்கியதால் வளைந்தக் கொக்கியானத் தூண்டில் பாவி குண்டோம சாலியின் தொண்டையில் மாட்டிக்கொண்டது. அழுத்தமாய் கொழுவிக் கொண்டது. மீள முடியாமல் பாவி இறந்து, பெரிய மலைப் போல் கிடந்தான்.

குண்டோம சாலி மாயவரால் மாண்ட செய்தி கேட்ட பரம சிவனார் மனம் மகிழ்ந்து சதுர யுகத்தை முடித்து வைக்க வேண்டும் என்று, கருங்கடலைக் கொந்தளிக்க செய்து கடல் நீரால் உலகம் முழுவதையும் தூய்மைச் செய்து சதுர யுகத்தை முடித்தார் சிவபரம்பொருள்.

Day 13

தேவர்கள் வேண்டுகோள்

சதுர யுகமழிய தானவர்க ளெல்லோரும்
மதுர மொழியீசன் மலரடியைத் தான்பூண்டு
தேவர் மறையோர் தெய்வேந் திரன்முதலாய்
மூவர்களும் வந்து முதலோ னடிபணிந்து
பரமனே நீரும் படைத்தயுகம் ரண்டதிலும்
வரமே துங்கேட்டு வாழ்ந்தவரைக் கண்டிலமே
அந்த சந்தமில்லை ஆணுவங்கள் தானுமில்லை
இந்த வகைச்சாதி இல்லாம லீசுரரே
பிறந்தா லவனும் பெரியோ னடிவணங்கி
வரந்தா ருமென்று வாளா யுதத்தோடே
வலுவும் பலமும் வாய்த்தசூ ரப்படையும்
கொலுவும் பெரிய குவிந்தமதில் கோட்டைகளும்
கெட்டுக் கிளைபாணி கிரண மதுவுடனே
நாட்டுப் பயிரால் நாளும் பசிதீர்ந்து
இருந்து பொறுக்க இராச்சியமொன் றுண்டாக்கும்
வருந்தி மகாதேவர் மலரோ னடிவணங்க
ஆதி சிவனும் அதிகசந் தோசமதாய்
வேதியரைத் தான்வருத்தி விளம்புவா ரீசுரரும்
நெடிய யுகம் தில்லைமலாலன் மல்லோசி வாகனன் பாடு
மாலும் பிரம்மாவும் வாய்த்தபர மேசுரரும்
நாலு மறையோரும் நடுவர்மிகக் கூடி
முன்னேயுள்ள துண்டம் ஒன்றைரண் டாக்கிவைத்துப்
பின்னே படைப்புப் பிரம்மா வுருப்படைக்க
சிவாயப் பொருள்தான் சீவ நிலைகொடுக்க
உபாயப் பொருள்தான் உல்லாச மேகொடுக்க
முண்ட மிருபேரும் உருவா யுருவெடுத்துத்
தெண்டமது கொண்டார் சிவனை மிகப்போற்றி
அப்போது மாயன் ஆதி யடிவணங்கி
இப்போது ஈசுரரே இவர்களிரு பேர்க்கும்
என்னபேர் தானும் இடுவோ மெனவுரைக்க
வன்னப் பரமேசு வரனார் வகுக்கலுற்றார்
திறந்தான் பெருகும் திருமாலே நீர்கேளும்
பிறந்த அசுரருக்குப் பேரிட வேணுமென்றால்
மாயனே நானுமொரு உபாயம் வகுப்பேன்காள்
ஆயனே நீயும் அதுகேட்க வேணுமென்றார்
அண்டபிண்டங் காணாத ஆதிகயி லாசமதில்
தெண்டனிட்டு நிஷ்டை செய்கிறான் சுருதிமுனி
இந்த முனியடுக்கல் இவர்கள்ரண்டு பேரைவிட்டு
அந்த முனிதவத்தை அழிக்கவே சொல்லிடுவோம்
என்று சிவமுரைக்க எல்லோருஞ் சம்மதித்து
அன்று பிறந்த அசுரர்களைத் தானேவி

போறாரே சூரர் பொருப்பொரு நூறானதுபோல்
வாறாரே சூரர் வாய்களிரு காதவழி
சூரருட கைகள் தொண்ணூற்றீ ரஞ்சதுவும்
மூரர்கால் நூறு உயர்ந்தசிர சன்பதுவும்
கண்களொருநூறு வெண்டரள மிருகலமே
துங்கணங் களாகச் சூர ரடந்தேறி
கண்கவிழ்ந்து யோகம் கருத்துருத்தாய் நிற்குகின்ற
வண்கவிழ்ந்த மாமுனியை வாரி யெடுத்தவர்கள்
அலைமே லெறிய ஆர்ப்பரிக்கு மவ்வளவில்
கலைமேல் பரந்த கடிய முனிபகர்வான்
ஏனடா என்னை இருந்த தவசழித்து
வீணடா செய்தாய் விழலா யறமோடா
என்னை யெடுத்து இக்கடல்மேல் போட்டாலும்
உன்னை யறுக்க ஓரம்பா யுருவெடுத்துப்
பங்கயக் கண்மாயன் பக்கமதில் நான்சேர்ந்து
உங்க ளிருபேரை ஊடுருவ நானறுத்து
இந்தக் கடலில் எடுத்துங்களை யெறிந்து
உங்களுட ஊரை ஒக்கக்கரிக் காடாக்கி
நானும் வைகுண்டம் நற்பேறு பெற்றிருப்பேன்
வானுதிரு வாணையென்று மாமுனியுஞ் சாபமிட்டான்
உடனே முனியை உயர்த்தியெடுத் தேசூரர்
கடல்மே லெறிந்தார் கர்ம விதிப்படியால்
அந்த முனியும் அரனா ரருளாலே
மந்திரபுரக் கணையாய் வாரியலைக் குள்ளிருந்தான்
சுருதி முனிதனையும் தோயமதில் விட்டெறிந்து
உறுதிக் குடிசூரர் ஓடிவந் தேகயிலை
மோச முடன்வந்த முழுநீசப் பாவியர்கள்
ஈசன் தனைத்தொழுது இறைஞ்சிநின்றா ரம்மானை

விருத்தம்

சுருதி முனியுட நிஷ்டை தொலைத்தவர்
கருதிய சூரர் கயிலை மேவியே
பருதி சூடும் பரமனைப் போற்றியே
வருதி கேட்டு வருந்தினர் சூரரே

## தேவர்கள் வேண்டுக்கோள்

விளக்கம்:

பரம்பொருளாகிய சிவன் வெற்றியுடன் சதுர யுகத்தை முடித்தார். தேவலோகத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஈசனின் திருவடி வணங்கி நிற்க, தேவர்கள் வேத சாஸ்திரங்கள், இந்திரன் முதல் எல்லோரும் வணங்கி மகிழ்ந்தார்கள். மூன்று லோகத்தையும் சேர்ந்தவர்களும் முழுமுதற் கடவுளாகிய சிவனை வணங்கி பரம்பொருளே !

நீர் படைத்த நீடிய யுகம் , சதுர யுகம் ஆகிய இரண்டிலும், தோன்றிய அசுரன் இருவரும் தோற்று மண்டழிந்தார்கள். உமது வரமும், அருளும் பெற்ற பின்னரும் , அவர்கள் வாழ்ந்து மகிழ்ந்த பாடில்லை . அவர்கள் சுகமாய் வாழ்ந்துநிலைப் பெறவில்லை.

மேலும் தேவாதி தேவன் சிவபெருமானிடம் இனியாவது அரக்கர்கள் இல்லாமல் நல்லவர்களை படைக்க வேண்டும் ஈஸ்வரரே. அப்படி பிறப்பு எடுப்பவன் தான் உமது பாதங்களைத் தொழுதுத் தவநிலையில் இருந்து வரமாக அம்பு, வாள் போன்ற ஆயுதங்களை வேண்டியும். வலிய சக்தி,நீண்ட ஆயுள், வீரமிக்கப்படைகளோடு. கொலுவிருக்கக் கூடங்களும் ஆட்சிச் செய்ய அரசப் பதவியும் கொடுத்து, அரண்மனையோடு கோட்டைக் கொத்தளங்கள், கிரக விதிப்படி தாலிக்கட்டி வாழ அவனுக்கேற்ற பெண்ணையும் கொடுத்து, ஆனந்தமாய் பொறுமையோடும், பெருமையோடும் பூமியில் வாழவும், விளைப்பொருள்களை உற்பத்திச் செய்துப் பசி போக்கி, ஆனந்தமாய் வாழ ஒரு புதுமையான உலகை உண்டாக்க வேண்டும் என்று வேண்டினார்கள்.

## Day 14

### நெடிய யுகம்

சுருதி முனிதவத்தைத் தொலைத்தே யவன்தனையும்
பொருதி கடல்மீதில் போட்டெறிந்து வந்தவர்கள்
ஈசன் தனைத்தொழுது இறைஞ்சிவரங் கேட்டனராம்
வாசமுள்ள ஈசன் மாதுமையைத் தானோக்கித்
தூயவளே மாயவளே சூர ரிருவருக்கும்
நேயமுள்ள தோர்வரங்கள் நீகொடுக்க வேணுமென்றார்
வரங்கொடுக்க வென்று மறையோ னதிசயித்துச்
சிரசன் பதுடைய சீர்சூரனை நோக்கி
ஏதுவர முங்களுக்கு இப்போது வேணுமென்றார்
தீது குடிகொண்ட சிரசன்ப தோனுரைப்பான்
மாதவரே தேவர்களே மறையவரே மூவர்களே
ஆதவரே யெங்களுக்கு அதிகவரம் வேணுமென்றான்
அம்புவியி லுள்ள அஸ்திரங்கள் வாளாலும்
தம்பிரா னானாலும் தாண்டமுடி யாதவரம்
வானமிது பூமி மலைகளிது மூன்றிலுள்ள
தானவராய் வாழுகின்ற தங்களா லெங்களையும்
கொல்லத் தொலையாத கொடிய வரமதுவும்
மல்லுக் குபாயமதும் வலுவும் பலமதுவும்
ஏவலாய் வானோர் எமைத்தொழுது நின்றிடவும்
தவறாம லிந்தவரம் தரவேணு மென்றுரைத்தான்
உடனே சிவனாரும் உற்ற அசுரருக்கு
அடமா யவன்கேட்ட அவ்வரங்கள் தாங்கொடுத்து
நீச னிருக்க நெடிய யுகம்வகுத்துப்
பாசனுக்குப் பேரு பகர்ந்தே விடைகொடுத்தார்

விடைவேண்டிப் பாவி விமலன் தனைத்தொழுது
மடைப்பாவி யான மல்லோசி வாகனனும்
தில்லைமல் லாலனுமாய்ச் சேர்ந்தங் கிருபேரும்
வல்ல சிவன்வகுத்த வையகத்தில் வந்தனராம்
வந்தார் சிவன்வகுத்த வையகத்தி லம்மானை
அந்த அசுரர் அவரிருக்கு மந்நாளில்
உதிர மதுசூரர் ஒக்க உதித்தெழுந்து
செதிர்சூரப் படையாய்ச் சேர்த்தங் கிருந்தனராம்
இப்படியே சூரர் இவர்சேர்க்கை தன்னுடனே
அப்படியே அந்தயுகம் ஆண்டிருந்தா ரம்மானை
ஆண்டிருந்த சூரர் அவரிருக்க மேடைகளும்
தாண்டிநின்ற வானத் தடாக உயரமதே
சூரப் படைகள் தொழுது அடிபணிந்து
பாதக ருக்குநித்தம் பணிந்தேவல் செய்திடுவார்
ஊழியங்கள் செய்து உற்றயிறை யிறுத்துப்
பாளையங் களாகப் பணிந்திருந்தா ரம்மானை
சூரர் கொடுமுடியைச் சூட்டி யரசாண்டு
பாரமுள்ள கோட்டைப் பண்ணினா ரம்மானை
இப்படியே சூரர் இவர்வாழு மந்நாளில்
முப்படியே சூரர் ஊழி விதிப்படியால்
இறப்ப தறியாமல் எரியைமிகக் கண்டாவி
உறப்பொசிக்கச் சென்ற விட்டி லிறந்தாற்போல்
தம்பி தமையன் சந்ததிகள் மந்திரிமார்
மும்பிலுள்ள சூரர் முடுக்கமதைக் கண்டாவி
நம்பிபத மறந்து நாம்தாம் பெரிதெனவே
கெம்பினார் சூரர் கெட்டனர்கா ணம்மானை
சூர ரவர்செய்த துட்டம் பொறுக்காமல்
வீர முள்ளதேவர் விரைந்தே முறையமிட
தேவர் முறையம் சிவனார் மிகக்கேட்டுக்
காவலாய் நித்தம் கைக்குள் ளிருக்குகின்ற
பெண்ணமுதைப் பார்த்துப் புகல்வாரங் கீசுரரும்
கண்ணே மணியே கருத்தினுள் ளானவளே
பூலோகந் தன்னிலுள்ள புருடரா யுதத்தாலும்
மேலோகம் வாழும் விமலரா யுதத்தாலும்
மலைமேலே வாழும் மாமுனிவர் தம்மாலும்
அலையா வரங்கள் அச்சூரர்க் கேகொடுத்தோம்
தரியா முடுக்கம் தான்பொறுக்காத் தேவரெல்லாம்
அரியோ யெனமுறையம் அநேகம் பொறுக்கரிதே
என்றீசர் சொல்ல இயல்கன்னி யேதுரைப்பாள்
நன்னின்ற ஈசுரரே நான் உரைக்க நீர் கேளும்
மலைலோகம் மேலோகம் வையமதி லாகாட்டால்
அலைமேல் துயிலுமொரு ஆண்டியுண்டு கண்டீரே
முன்னேயச் சூரருக்கு முற்சாப மிட்டதொரு
வன்னச் சுருதிமுனி மந்திரபுரக் கணையாய்
வளர்த்தங் கிருப்பான்காண் மாயருட பக்கலிலே
கிளர்ந்த மொழிகேட்டுக் கிருபைகூர்ந் தேயீசர்

மாலை வரவழைத்து வளப்பமெல் லாமுரைக்கச்
சாலப் பொருளும் சம்மதித்தாங் காரமுடன்
அலையில் வளர்ந்த அதிகக் கணையெடுத்துச்
சிலையேற்றி யம்பைச் சிரித்து மிகத்தொடுக்க
அம்புப் பகையாலும் அதிகமால் பகையாலும்
பம்பழித்துச் சூரனூர் பற்பம்போல் தானாக்கிச்
சூர ரிருவருட சிரசை மிகஅறுத்து
வாரிதனில் விட்டெறிந்து வாளி சுனையாடி
மலரோ னடிபணிந்து வைகுண்டங் கேட்டிடவே
பலமான குண்டப் பதவி மிகக்கொடுத்தார்

நெடிய யுகம்

தில்லை மல்லாலன் , மல்லோசி வாகனன் பாடு

விளக்கம்:

தேவர்கள் முறையிட்டதைக் கேட்ட ஆதிசிவன் சம்மதம் தெரிவித்தார். படி அளக்கும் பரமனும், பாதுகாக்கும் விஷ்ணுவும், உயிர்களை பிறவிச் செய்யும் பிரம்மா ஆகிய மும்மூர்த்திகளும் சேர்ந்து முடிவு செய்ய, நான்மறை வேதங்களையும் வானவர்களையும் வர வழைத்து ஆலோசனைச் செய்து நெடிய யுக அசுரர்களைப் பிறவிச் செய்ய முடிவெடுத்தார்கள். குறோணியின் ஒரு துண்டமதில் குண்டோமசாலி தோன்றி அழிந்த கதையை மேலே படித்தோம். மீதமுள்ள ஐந்து துண்டமதில் ஒரு துண்டை எடுத்து அதை இருகூறாக்கி வருகின்ற இதற்கு நல்ல உடலாகப் பிறவிச் செய்ய பிரம்மா எண்ணம் கொண்டார். பிரம்மா உடலைப் பிறவிச் செய்தார். சிவன் உயிர் கொடுத்தார்.

மாயவன் இன்பம் கண்டார். ஒரு துண்டம் உயிர்பெற்று இருவேறு உடலமைப்போடு உரு பெற்று எழுந்து சிவனை பணிவோடு தொழுது நின்றார்கள். மும்மூர்த்திகளும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்கள் இருவரையும் பார்த்த மாய பெருமாள் மனம் மகிழ்ந்து ஆதி சிவனை வணங்கி சிவபெருமானே, இந்த இரண்டு பேர்களுக்கும் நாம் பெயரிடவேண்டும் என்ன பெயர் வைக்கலாம் என்று யோசனை கேட்டார். தங்க நிறமான பரமேஸ்வரர், கருநீல நிறம்கொண்ட திருமாலிடம் தன் கருத்தை உரைக்கிறார். திறமை பெற்ற திருமாலே! நாம் பிறவி செய்திருக்கின்ற அசுரர்களுக்கு பெயர் சூட்ட வேண்டும் என்றால் ஆதி கைலாய மலையில் ஒரு முனிவன் பிடிவாதமாய் என்னை நினைத்து தவம் செய்து வருகிறான். அவன் பெயர் சுருதி முனி என்பதாகும்.

அந்த சுருதி முனிவன் கைலாய மலையை பர்வதத்தில் கடும் தவம் செய்கிறான். இந்த புதிதாக தோன்றிய இருவரையும் அங்கு அனுப்பி அந்த சுருதி முனிவரின் தவத்தைக் கலைத்து விடச்சொல்வோம் என்றார் சிவன். சிவனின் ஆலோசனையை கேட்டு எல்லோரும் சம்மதம் தெரிவித்தார்கள். இந்த விபரத்தை இரண்டு அசுரர்கள் இடமும் சொன்னவுடன் இருவரும் புறப்பட்டனர். அங்கு இருவரும் சென்றது அசுரவேகம்.

மிக உயரம் கொண்டவர்களாக இருவரும் முனிவர் இருக்குமிடம் சென்றார்கள்.சுருதி முனிவர், தலைகவிழ்ந்த வண்ணமாக யோக நிலையில், மனதை ஒருநிலைப் படுத்தி உறுதியான “அந்தர் முக” நாட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். இவ்வாறு கடும் தவம் செய்து கொண்டிருந்த சுருதி முனிவரை தவம் என்றால் என்ன என்றே அறியாத படி முரட்டு குணம்கொண்ட, சூரர்கள் இருவரும் தர்மம், அதர்மம், பாவ புண்ணியம், அனைத்தையும் அறியாத மூடர்கள் சுருதி முனிவரை தூக்கி கடலில் வீசி எறியச் சென்றபோது தவம் கலைந்த நிலையில் வேகமாக குரலில் சப்தமிட்டார்

அசுரனுக்கு அபயக்குரல் கேட்குமா? மனம் தான் இரங்குமா? இருவரும் ஆனந்த ஆர்ப்பரிப்புடன் ஏளனமாய் சிரித்தார்கள். கோபம் கொண்ட சுருதி முனிவன் , என் தவத்தைக் கலைத்தது நியாயமா? தர்மமாகுமா? சூரியகலை, சந்திரகலை செய்து பரவச நிலையில் இருந்த என்னைத் தூக்கிக் கடலுக்குள் எங்கே கொண்டுப் போட்டாலும் உங்களை அழிக்காமல் விடமாட்டேன் என்றார். உங்களை அழிக்க ஒரு மந்திர புரக் கணையாக உருவம் எடுத்து உங்கள் இருவரையும் கொல்வேன், இது சத்தியம் என்றார்.

உங்களை அழிக்கத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கும் மாய பெருமாள் பக்கம் சேர்ந்து , உங்கள் இருவருக்குள்ளும் அம்பாய் ஊடுருவிச் சென்று உங்களை நான் வதைப்பேன் என்றார். என்னை தூக்கி சமுத்திரத்தில் போட எண்ணிய உங்களை, நான் கொன்று சமுத்திரத்தில் வீசி எறிவேன் என்றுச் சுருதி முனிச் சாபமிட்டார்

நான் தவம் செய்து முக்தி நிலை பெற்று வைகுண்டம் சென்று பெருமாளோடு நற்கதி அடைந்திருப்பேன். உங்களுடைய நாட்டை முழுவதுமாக எரித்துச் சாம்பல் ஆக்குவேன். இது பரமசிவன் மேல் ஆணை என்றார் சுருதி முனி. முனிவன் சாபம் இட்டதையும் அவர் கோபம் கொண்டதையும் கருத்தில் கொள்ளாத , சூரர்கள் இருவரும் சேர்ந்து சுருதி முனியைக் கடலில் தூக்கி எறிந்தார்கள். சுருதி முனி வருக்கும் முன் ஜென்ம கர்ம வினை பயனால் இப்படி நடந்தது. கடலில் எறியப்பட்ட சுருதி முனிவருடைய உடலானது, உலகைக் காத்து இரட்சிக்கும் சிவப்பெருமானின் கருணையினால், கடல் அலையில் உள்சென்று மந்திரபுரக் கணையாக மாறி அங்கே இருந்தார்.

சூரர்கள் இருவரும் ஆனந்தம் கொண்டு, கடலுக்குள் முனிவரை தூக்கி எறிந்து விட்டு வீரத்தோடு வாக்கைக் காப்பாற்றி விட்டக் கர்வத்தில் கைலாயத்திற்கு ஓடி வந்தனர். மனதில் வஞ்சகத்தோடு சிவபெருமான் முன்னிலையில் பணிவோடு வணங்கி நின்றார்கள். சிவபெருமானே! நாங்கள் சுருதி முனிவருடையத் தவத்தை அழித்து, அவன் உடலையும் கடலுக்குள் போட்டு விட்டோம் என்றனர்.

கடவுளை நேசிப்பவன் போன்று அவன் பாசாங்குப் பண்ணுகிறான். பொய்வேஷம் போடுகிறான். உண்மையில் உலகப் பொருள்களிடத்து தான், அவன் பற்றுதல் வைத்திருக்கிறான். ஒருவன் துன்மார்க்கத்தில் பிரவேசிக்கும் போது அவனுடைய வீழ்ச்சி தனக்குப் புலப்படுவ தில்லை. கெடுவான் கேடு நினைப்பான் என்பதைப்போல சுயநலவாதியானச் சூரர்கள் இருவரும் ஆணவத்தோடு ஒளிமயமாக விளங்குகின்ற பரமசிவனைப் போற்றித் துதித்துப் பலவிதமான வரங்களைத் தந்தருள வேண்டும் என்றுக் கேட்டனர்.

சிவபெருமான் என்னச் செய்யலாம் என்று அம்மை பார்வதி தேவியிடம் இவர்கள் கேட்கும் வரங்களை நீயே கொடுத்து அருள் புரிவாய் என்றார். பார்வதியும் வரம் கொடுக்க எண்ணியதைக் கண்ட கைலாயநாதன் ஆச்சரியத்தோடு ஐம்பதுத் தலைகளைச் சுமந்து நின்ற அசுரர்களை பார்த்து என்ன வரங்கள் வேண்டும் என்றுக் கேட்டார்.

கெட்ட குடியில் பிறந்து ஐம்பதுத் தலைகளைக் கொண்ட இரக்கமற்றவன் கேட்கிறான் சிவபெருமானே! தேவாதி தேவர்களுக்கெல்லாம் முதல்வனே! மறை ஞான சக்தியே! முப்பொருளே! சிவ சூரியசக்தி ஆனவரே! நீங்கள் எங்களுக்கு மிகப்பெரிய வரம் தரவேண்டும். பூலோகத்தில் உள்ள எந்த சக்திகளாலும் எந்த ஆயுதங்களாலும் எங்களுக்கு அழிவு வரக்கூடாது.கடவுளே ஆனாலும் எங்களை ஜெயிக்க முடியாத சக்தியான வரம் வேண்டும். மூன்று லோகத்திலும் உள்ளவர்களாலும் அழிக்க முடியாத படியும் எல்லோருக்கும் தலைவராய் வாழவும், சண்டைக்கு வருபவர்களை எதிர்த்துப் போராடும் சக்தியையும் தந்து, உமக்கு பணிச் செய்யும் தேவர்கள் இனி எனக்குப் பணிச் செய்து எங்களை வணங்கிடவும் வேண்டும் என்றார்கள்.

கடவுளை நேசிப்பவன் போன்று அவன் பாசாங்கு பண்ணுகிறான். பொய் வேஷம் போடுகிறான். உண்மையில் உலகப் பொருள்களிடத்து தான், அவன் பற்றுதல் வைத்திருக்கிறான். ஒருவன் துன்மார்க்கத்தில் பிரவேசிக்கும் போது அவனுடைய வீழ்ச்சி தனக்கு புலப்படுவதில்லை. கெடுவான் கேடு நினைப்பான் என்பதைப் போல சுயநலவாதியான சூரர்கள் இருவரும் ஆணவத்தோடு ஒளிமயமாக விளங்குகின்ற பரமசிவனை போற்றித் துதித்து பலவிதமான வரங்களை தந்தருள வேண்டும் என்றுக் கேட்டனர்.

சிவபெருமான் என்ன செய்யலாம் என்று அம்மை பார்வதியிடம் தேவி இவர்கள் கேட்கும் வரங்களை நீயே கொடுத்து அருள் புரிவாய் என்றார். பார்வதியும் வரம் கொடுக்க எண்ணியதைக் கண்ட கைலாயநாதன் ஆச்சரியத்தோடு ஐம்பது தலைகளைச் சுமந்து நின்ற அசுரர்களை பார்த்து என்ன வரங்கள் வேண்டும் என்று கேட்டார். கெட்ட குடியில் பிறந்து ஐம்பது தலைகளைக் கொண்ட இரக்கமற்றவன் கேட்கிறான் சிவபெருமானே! தேவாதி தேவர்களுக்கெல்லாம் முதல்வனே! மறை ஞான சக்தியே! முப்பொருளே! சிவ சூரியசக்தி ஆனவரே! நீங்கள் எங்களுக்கு மிகப்பெரிய வரம் தரவேண்டும்

பூலோகத்தில் உள்ள எந்த சக்திகளாலும் எந்த ஆயுதங்களாலும் எங்களுக்கு அழிவு வரக்கூடாது.கடவுளே ஆனாலும் எங்களை ஜெயிக்க முடியாதச் சக்தியான வரம் வேண்டும்.மூன்று லோகத்திலும் உள்ளவர்களாலும் அழிக்க முடியாத படியும் எல்லோருக்கும் தலைவராய் வாழவும், சண்டைக்கு வருபவர்களை எதிர்த்துப் போராடும் சக்தியையும் தந்து, உமக்கு பணிச் செய்யும் தேவர்கள் இனி எனக்குப் பணிச் செய்து எங்களை வணங்கிடவும் வேண்டும் என்றார்கள்.

அவர்கள் பிடிவாதமாய் கேட்ட வரத்தைச் சிவபெருமான் மறுப்பு இல்லாமல் கொடுத்தார். கொடிய நீச பாவிகளுக்கு வாழ்வதற்கு “நெடிய யுகம்” ஒன்றையும் கொடுத்தார். உலக ஆசைக்கு அடிமைப்பட்டு, பாவியாகவும் முழு முட்டாளாகவும், இருந்த சூரர்கள் இருவருக்கும் தில்லை மல்லாலன்,மல்லோசி வாகனன் எனச் சூரர்கள் இருவருக்கும் பெயர் வைத்தார்.

இவ்வாறு சிவனிடம் வரம்பெற்று சூரர் இருவரும் சிவன் கொடுத்த நெடிய யுகத்தில் நிலத்தில் வாழ பூலோகம் வந்து சேர்ந்தார்கள். அரக்க குணம் படைத்த அசுரர்கள் வந்து சேர்ந்த நேரம் குறோணியினுடைய உதிரத்தில் இருந்து தோன்றிய அசுரப் படைகளும் உயிர்பெற்று பூமியில் வாழ வந்தார்கள்.சதுர யுகத்தில் வாழ்ந்த அரக்கர்களைப் போன்றுச் சூரக்குலமாகச் சேர்ந்துக் கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்தார்கள். நெடிய யுகமாகப் பெயரிட்டு சூரன் ஆண்டு வந்தது மூன்றாவது யுகமாகும்

சூரப்படைகளை ஆண்டு வந்த தில்லைமல்லாலன், மல்லோசி வாகனன் இருந்த சிம்மாசனமானது, வானலோகத்தையும் தாண்டி நிற்கின்ற அளவில் மண்ணுக்கும், விண்ணுக்கும் ஓங்கி காணப்பட்டது. மன்னனாக இருந்த அவனை தினமும் வணங்கி அவன் இட்ட வேலைகளைச் செய்து அடிமைகள் போல அவர் விருப்பத்திற்கு நடந்துத் தனித்தனியாக வாழ்ந்தார்கள். தில்லை மல்லாலனும் , மல்லோசி வாகனனும் கொடுமுடி சூடி மன்னர்களாக ஆட்சிச் செய்து, மிகப்பெரிய பலம் கொண்ட அரண்மனையை கட்டி இருவரும் வாழ்ந்தார்கள்.

இவ்வாறு சூரர் இருவரும் வாழ்ந்த நெடியயுகத்தில் அழிவு நெருங்கியது. விட்டில் பூச்சிகள் தனக்கு வரப் போகின்ற மரணத்தைப் பற்றி நினைக்காமல் ஒளியைக் கண்டு மகிழ்ந்து, ஆகாரம் என்று எண்ணி அதில் விழுந்து இறப்பதுப் போலவே முன்னரே விதிக்கப்பட்டச் சூரனுடைய ஊழ்வினையால் கர்ம விதிப்படி அவன் புத்தி தடுமாறினான். வினை விதைப்பவன் வினை அறுப்பான் என்பதற்கிணங்க, அண்ணன், தம்பி, மக்கள், மந்திரிமார் எல்லோரும் மமதையால் மதிகெட்டுத் தீய வழியில் நடந்தார்கள்

குறோணியின் உதிரத்தில் தோன்றிய சூரர்களை நம்பி அவர்கள் திறமையைக் கண்டு சந்தோஷம் கொண்டு நேர்மையை மறந்து நானே பெரியவன் என்ற ஆணவத்தால் அறிவிழந்து செயல்படத் தொடங்கினார்கள். அதனால் இருவரும் அகங்காரத்தால் அழிந்துபோனார்கள்.தில்லை மல்லாலனும், மல்லோசி வாகனனும் செய்த அநியாயம் பொறுக்க முடியாதத் தேவர்கள் வருத்தமுற்று, சிவபெருமானிடம் முறையிட்டார்கள். அது கேட்ட சிவன் மன வருத்தம் கொண்டார். தேவர்களின் அபயக் குரல் கேட்ட சிவன் என்ன செய்வது என்று யோசனை செய்தார்

தன்னில் பாதியாக இணைபிரியாமல் இருந்துச் செயல்படுகின்ற சிவசக்தி பார்வதியிடம் கேட்டார். என் கண்மணி போன்ற நியாயத்தின் இருப்பிடமே, நான் பெரிய தவறு செய்துவிட்டேன். யாராலும் எந்த ஆயுதங்களாலும், சிவபெருமானாகிய என்னாலும் அழிக்க முடியாத வரம் கேட்டான். அந்த அசுரன் ஆகிய இருவரும், யாரும் அசைக்க முடியாத படி பெரிய வரங்களை அசுரர்கள் கேட்டபடிக் கொடுத்து விட்டோம் என்று கவலையோடு கூறினார்.

துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாத தேவர்கள் எல்லாம் ஹரி ஹரி நாராயண எங்களை காப்பாற்ற வேண்டும் என்று அபயக்குரல் இட்டு முறையிடுவதைக் கேட்க வருத்தமாக இருக்கிறது என்றார். அம்மை பார்வதி அந்த மொழிக் கேட்டு அம்மை உமையவள் மலைமேலே உள்ளவர்களாலும் மேலோகத்தாராலும், பூலோகத்தாராலும் கொல்லமுடியாமல் போனால் என்ன? கடல் அலை மேல் பள்ளி கொள்ளும் மாயாண்டி ஆகிய நாராயணரை மறந்து விட்டீர்களா? என்றாள் அம்மை உமையவள்.

சிவ பொருளே! சுருதி முனிவர் சூரனை அழிப்பதற்குத் தானே மந்திரப் புரக்கணையாக இருக்கிறான். அதுவும் பாற்கடலுக்குள் மாய பெருமாள் பக்கத்தில் வளர்ந்து கொண்டே இருக்கிறான் என்றால் அம்மை பார்வதி தேவியார். அந்த மொழி கேட்ட அம்பலவாணர் பார்வதியுடன் திருமாலைக் அறைக்கு வரவழைத்து எல்லா விவரங்களையும் தெளிவாகச் சொன்னார்கள். மாயத்தால் விளங்குகின்ற திருமால் உடனே அசுரர்களை அழிப்பதற்குச் சம்மதம் என்றுக் கூறினார்

வம்பினை மாய்ப்பதற்கே அவதாரப் புரிகின்ற நாராயணமூர்த்தி நம்பியவருக்கு அன்பாய் நல்லருள் கொடுப்பவர் அய்யா. பாற்கடலுக்குள் மந்திர புரகணையாக வளர்ந்து நின்ற , சக்தி வாய்ந்த அம்பைக் கொண்டுச் சூரனை அழிக்கத் திட்டம் வகுத்தார். வில்லில் அம்பு தொடுத்து, மனம் மிக மகிழ்ந்து, நாண் ஏற்றினார் பச்சைமால் நாராயணர். அம்பாக இருந்த சுருதி முனிவரின் கோபத் தீயாலும், அதி சக்தி வாய்ந்தத் திருமாலுடைய வீரத்தாலும், சூரப்படைகளோடு சூரர்கள் இருவரையும் சேர்த்து , பஷ்பமாக்கி , தூள் தூளாக்கி சிதற வைத்தார்.

தில்லை மல்லாலனும் , மல்லோசி வாகனனும், இவர் இருவருடையத் தலைகளையும் வெட்டித் துண்டுகளாக்கிப் பூலோகத்தில் இல்லாதபடி நடுக்கடலில் வீசி எறிந்துவிட்டார்.

அம்பாக நின்ற சுருதி முனி பாவம் போக்க கடலில் தீர்த்தமாடி பாவத்தை கழைந்து திருமாலினுடையத் திருப்பாத மலரை வணங்கி எனக்கு வைகுண்ட பதவி வேண்டும் என்று கேட்டார். சுருதி முனிவரின் பாவங்களை மன்னித்து வைகுண்டத்தில் அமரச்செய்தார் அய்யா. சூட்சுமமாக நின்று சுகங்களைத் தருகின்றவரும் பாவங்களை தீர்க்கும் பச்சைமால் நாராயணர் சூரனைக் கொன்று நெடிய யுகத்தை வெற்றியோடு முடித்து ஈசனைக் காணச் சென்றார். அநீதி மேலோங்கி நீதி நலிவடைகின்றன போதெல்லாம் அசுரச் சக்தியை அழித்து நல்லவர்களுக்கு வாழ்வுக் கொடுக்கும் எண்ணத்தில் அடுத்த யுகம் படைக்க ஆர்வம் கொண்டு திருமால் திருக்கைலாயம் வருகிறார்.

## Day 15

கிரேதா யுகம்

அவ்வுகத்தை மாயன் அன்றழித்து ஈசரிடம்
செவ்வாக நின்று செப்பினா ரீசருடன்
இன்னமொரு யுகத்தை இப்போ படைக்கவென்று
மன்னதியத் திருமால் மனமே மிகமகிழ்ந்து
சொன்னவுட னீசுரரும் தொன்னூல் மறைதேர்ந்து
முன்னே குறோணி முடிந்ததுண்ட மாறதிலே
ஓரிரண்டு துண்டம் உகமாய்ப் பிறந்தழிந்து
ஈரிரண்டு துண்டம் இருக்குதுகாண் மாயவரே
நூல்முறையைப் பார்க்கில் நெடிய யுகங்கழிந்தால்
மேலுகந்தா னிங்கே மிகுத்தகிரே தாயுகந்தான்
இருக்குதுகா ணென்று ஈச ருரைத்திடவே
மருக்கிதழும் வாயான் மனமகிழ்ந்து கொண்டாடி

துண்டமொன்றை ரண்டாய்த் தூயவனார் தாம்வகிர்ந்து
மண்டலங்கள் மெய்க்க வாணாள் கொடுத்தருளி
சிங்கமுகச் சூரனெனும் திறல்சூர பற்பனெனும்
வங்கணமாய்ப் பிண்டம் வகுத்தனர்கா ணம்மானை
சூர னுடசிரசு தொளாயிரத்து நூறதுவும்
போரக்கால் கைகள் பொருப்பெடுக்கு மாபலமும்
சூரன் சுரோணிதத்தைச் சுக்கிலங்கள் தானாக்கி
ஊரேநீ போவென்று உற்ற விடைகொடுத்தார்
விடைவேண்டிச் சூரன் வேண்டும் படையோடே
திடமாகப் பூமி செலுத்தியர சாளுகையில்
வரம்வேண் டவென்று மலரோ னடிவணங்கி
திறமான ஓமமிட்டுச் செப்புக் குடம்நிறுத்தி
நின்ற தவத்தில் நெடியோனைக் காணாமல்
அன்றந்தச் சூரன் அக்கினி யில்விழுந்தான்
சூரபற்பன் விழவே சிங்கமுகச் சூரனவன்
பாரமுள்ள தன்சிரசைப் பறித்தெறிந்தா னக்கினியில்
ஆனதா லீசுரரும் அம்மைஉமை யுமிரங்கி
ஈனமாஞ் சூரனுக்கு ஏதுவரம் வேணுமென்றார்
ஈச னுரைக்க ஏற்றஅந்தச் சூரனுந்தான்
பாசமுடன் செத்த பற்பனென்ற சூரனையும்
எழுப்பித் தரவேணும் யாங்கள்மிகக் கேட்டவரம்
மழுப்பில்லா வண்ணம் வரமருள்வீ ரென்றுரைத்தான்
சூர னிவன்கேட்க சிவனா ரகமகிழ்ந்து
பாரமுள்ள ஓம பற்பமதைத் தான்பிடித்துச்
சிவஞான வேதம் சிந்தித்தா ரப்பொழுது
பவமான சூர பற்பன் பிறந்தனனாம்
இறந்து பிறந்தனற்கும் இளையோ னவன்தனக்கும்
சிறந்த புகழீசர் செப்புவா ரப்பொழுது
சூரரே உங்களுக்குத் தோற்றமுள்ள தோர்வரங்கள்
வீரரே கேளுமென்று வேத னிவையுரைக்க
அந்நாளில் சூரன் அகமகிழ்ந்து கொண்டாடி
உன்னாலு மைந்துமுகம் உள்ளவர்கள் தம்மாலும்
உலகமதில் பண்ணிவைத்த உற்றஆயு தத்தாலும்
இலகுமன்ன ராலும் இந்திரனார் தம்மாலும்
கொல்லத் தொலையாத கொடிய வரமதுவும்
வல்லவனே நீயும் வாழுங் கயிலையதும்
தேவர்தே வேந்திரனும் திருக்கன்னி மாமறையும்
ஏவலா யுன்னுடைய லோகமதி லுள்ளவர்கள்
முழுது மெனக்கு ஊழியங்கள் செய்திடவும்
பழுதில்லா திந்தவரம் பரமனேநீர் தாருமென்றான்
தாருமென்று சூரன் தாழ்மை யுடன்கேட்க
ஆரு மொப்பில்லா ஆதி யகமகிழ்ந்து
கேட்டவர முழுதும் கெட்டியா யுங்களுக்குத்
தாட்டிமையா யிப்போ தந்தோ மெனவுரைத்தார்
வரங்கொடுத் தீசர் மலைகயிலைக் கேகாமல்
பரம உமையாளைப் பையஎடுத் தணைத்து

அலைமே லேஆயன் அருகிலே போயிருந்து
மலைமே லேசூரன் வாய்த்ததென் றவ்வரங்கள்
கயிலை முழுதும் காவலிட்டுத் தேவரையும்
அகில முழுதும் அடக்கியர சாண்டனனே
ஆண்டிருக்கும் நாளையிலே ஆறெதிரி இல்லாமல்
தாண்டிஉலகை தானாண்டி இருந்தனை
அப்படியே சூரன் அரசாண் டிருக்கையிலே
முப்படியே விட்டகுறை முடிவாகும் நாளையிலே
தேவரையும் வானவரைத் தெய்வேந் திரன்வரையும்
மூவரையும் பாவி முட்டுப் படுத்தினனே
ஆனதால் தேவர் அரிக்கே முறையமிட
ஈனமில்லா தாயன் எடுத்தா ரொருவேசம்
ஈசனிடஞ் சென்று இயம்பினா ரெம்பெருமாள்
வாசமுள்ள ஈசுரரே மாபாவிச் சூரனுக்கு
ஏது வரங்கள் ஈந்திர்கா ணென்றுரைக்கத்
தாது கரமணிந்த தாமன்பின் னேதுரைப்பார்
வையகத் திலுள்ள வலுவாயு தத்தாலும்
தெய்வலோ கத்தில் சிறந்தமன்னர் தம்மாலும்
அஞ்சு முகத்தாலும் அழியா தவனுயிரும்
தஞ்சமிட வானோர் தையல்தெய்வக் கன்னிமுதல்
கயிலை முழுதும் கமண்டலங்க ளேழுமுதல்
அகில முழுதும் அடக்கி வரங்கொடுத்தோம்
என்று வேதாவும் இவையுரைக்க மாலோனும்
நின்று தியங்கி நெஞ்சமது புண்ணாகிப்
பேயனுக் கென்னுடைய பிறப்பைக் கொடுத்தல்லவோ
தேயமதில் நானும் திரிந்தலையக் காரணந்தான்
என்றுத் திருமால் இது சதையஞ் சொல்லியவர்
இன்றந்தச் சூரர் இருவர் தன்னைக் கொல்லவே
ஆறுமுகமாய் ஆயனள விட வே
கூறிட வேசத்திதனைக் கொண்டார் வேலாயுதமாக
நல்லசிவனாரை நந்தி சுரராக்கி
வல்லபெலமுள்ள வாய்த்த திக்கெட்டிலுள்ள
பாலரை வீரர்களாய்ப் பண்ணினாரெம்பெருமாள்
வாலமுள்ள சன்னாசிமாரைப் பெரும்படையாய்
கந்தனென நாமம் கனத்தச் சடையாண்டியுமாய்
கொந்து கொந்தாய்ப் பீற்றைக்கூறை மிகவணிந்து
வேலுமிகப் பிடித்து வெண்ணீறுமே தரித்து
நாலு ரண்டு சிரசில் நல்ல ரு த்திராட்சமிட்டு
பத்து ரண்டு காதில் பைம்பொன்னாச் செம்பணிந்து
முத்திரிகளிட்டுக் கந்தப் பொக்கணங்கள் தோளிலிட்டு
சன்னாசிப்போலே தானடந்தெம் பெருமாள்
தன்னாதானாவெனவே நாலஞ்சி கவிதான் பாடி
வந்து ஒரு மலைமேல் வாய்த்த கூடாரமிட்டு
சந்து மிகச் சொல்லிதான் விட்டார் சூரனுக்கு
சூரனிடத்தில் தூதா நீ சென்றே கி
பாரமுள்ள கயிலைப்பருவதமுந் தேவருட

சிறைகளகற்றி வானோர் தேவரையும் நீயனுப்பி
திறவானாயாகச் சீமை யரசாளுமென்று
இப்படியே ஆகாட்டால் இன்று கழித்தெட்டாம் நாள்
அப்படியே உந்தனுக்கும் ஆன கந்தசுவாமியர்க்கும்
சண்டை தான் என்று தரங் கூறி வா எனவே
அண்ட பிரான் தூது அனுப்பினா ரம்மானை

நெடிய யுகத்தை நிறைவுச் செய்த பின்னர் , திருமால் கைலையில் சிவபெருமானிடம் திருவாய் மலர்ந்து சந்தோஷமாக மீண்டும் யுகம் அமைக்க வேண்டும் என்று கூறுகிறார். மந்திர சக்தி படைத்த பெருமாள் ஈஸ்வர பெருமானை! நீங்கள் இன்னும் ஒரு புது யுகத்தை உடனே படைக்க வேண்டும் என்று மிக பூரிப்போடு வேண்டினார்.

இப்படியாக திருமால் கூறிய உடன் ஈஸ்வரரும் மறுப்பு ஏதும் சொல்லாமல் வேத சாஸ்திர நூலை பார்த்தார். திருமாலே! நீடிய யுகத்தில் தோன்றிய அசுரன் குறோணியின் ஆறு துண்டங்களில் இன்னும் சில துண்டுகள் உள்ளன

இரண்டு துண்டங்கள் சதுர யுகம், நெடிய யுகம் ஆக இரண்டு யுகமாக பிறந்து அழிக்கப்பட்டது. இன்னும் நான்கு துண்டம் பிறக்காமலும் அளிக்கப்படாமல் இருக்கின்றது மாயவரே! நூலில் சொல்லப்பட்டுள்ள ஆகம முறைப்படி பார்த்தால் நெடிய யுகத்திற்கு அடுத்து வருவது ஒரு மேன்மையான சிறந்த ஒரு யுகமாகும்.அதுதான் கிரேதா யுகம் என்றுக் காணப்படுகிறது. பூலோகத்தில் பெருமை அடைய போவதும் கிரேதா யுகம் தான். அவ்வளவு பல சிறப்புகள் அந்த கிரேதா யுகத்திற்கு இருக்கிறது என்று சிவபெருமான் திருவாய் மொழிந்தார். சிவனர் சொல் கேட்ட தாமரை போன்ற பொன்மலர் வாய் உடைய மாய பெருமாள் உள்ளம் மகிழ்ந்தவராய் காணப்பட்டார்.

மேலே சொல்லிய ஆகமத்தின் விதிமுறை படியாக, குறோணியின் ஒரு துண்டை எடுத்து இரண்டு துண்டாக பகிர்ந்து இருவரை பிறவி செய்தார்கள். மேலோகம் எங்கும் அதிசய படும்படி அவர்கள் இருவருக்கும் பகட்டு வாழ்க்கையும், உயிரும் கொடுத்தார்கள். அசுரர்களுக்கு தலைவனாக ஒருவனை நியமித்துச் சூரபற்பன் என்ற பெயரையும் வைத்தார்கள்.மற்றும் ஒருவன் சிங்கமுக தோற்றமாய் காணப்பட்டதால் அவனுக்கு சிங்கமுகாசுரன் என்று பெயர் சூட்டினார்கள். சதையை இரண்டாக வகுத்து பிறப்பு எடுத்தால் அண்ணன் தம்பி போல் நட்பு கொண்டு வாழ்ந்தார்கள். சூரர்களுக்கு தலைகள் ஆயிரமாய் அதிசய தன்மையோடு காணப்பட்டது. நடமாடும் கை, கால்களுமாய் தலைவனாகப் பொறுப்பெடுத்து நடத்தும் வலிமைப் பெற்றும் திகழ்ந்தனர். சூரனாகியக் குறோணியின் குருதி இந்திரியச் சக்தியாக மாறி சூரப்படைகளும் தோன்றியது.

இப்படியாக தோன்றியச் சூரர்களைப் பூலோகத்திற்கு அனுப்பினார். படையும் பட்டாளமும்மாய் பூலோகத்திற்கு வந்து ஆட்சிச் செய்து கொண்டிருந்த காலம், தலைவனாய் இருந்தச் சூரபற்பன் ஆசையால் தூண்டப்பட்டு வரங்கள் பெற வேண்டும் என்ற ஆசைக் கொண்டான்.

ஆசையே துன்பத்திற்கு காரணம். அது அழிவுக்கும் அடிகோலாகும் என்பதை அறியா மூடன், பாம்பணை மேல் பள்ளிகொண்ட பெருமாளை நோக்கி தவம் செய்தான். யாகம் வளர்த்து,மனதை நாராயணர் மேல்வைத்துக்

கடுந்தவம் புரிந்தான். இடைவிடாமல் முறையான தவம்செய்தும் நெடிய'மால்' வரவில்லை.

உலக ஆசை அற்ப அளவாவது ஒருவனுக்கு இருக்குமாகில் அவன் ஈஸ்வரனுடைய அருளை பெறமுடியாது. எக்கருமத்தை வேண்டுமானாலும், ஆத்ம சாதனையாக செய்யலாம். ஆனால் அக்கர்ம பலனின் பற்று சிறிதும் வைக்காது அதை ஈசனுக்கு ஒப்படைக்க வேண்டும். அதுதான் நல்ல ஒரு ஆத்ம சாதனை. மற்றது எல்லாம் வேதனையாகவும், சோதனையாகவும் அமையும். வரம் பெற ஆசைக் கொண்டு யாகம் முறையாக செய்தும் பலன் கிடைக்கவில்லையே என்று மனம் மாறிய சூரபற்பன் எரிந்து கொண்டிருந்த யாகத்தில் விழுந்து இறந்தான். விரக்தி அடைந்தவனாகச் சூரபற்பன் இறந்தவுடன் அதைக் கண்ட சிங்கமுகசூரன் வாழ விருப்பம் இல்லாமல் அவனுக்குச் சுமையாக இருந்த அவனுடைய ஆயிரந் தலைகளைக் கொய்து அந்த வேள்வியில் போட்டான்.

இதைக்கண்ட பரமனும், பார்வதியும் இரக்கம் கொண்டு இழிவானக் குணம் கொண்ட பாவி என்று பார்க்காமல் என்னவரம் வேண்டும் என்றுக் கேட்டார் சூரனிடம். ஈசன் கேட்டவுடன் ஆர்வம் கொண்ட சிங்கமுக அசுரன் என் உடன் பிறந்து என்னோடு நட்புறவாடி பாசத்தோடு இருந்த சூரபற்பன் எனக்கு உயிரோடு எழுப்பித் தரவேண்டும் என்றான்.

சிவபெருமான் மகிழ்ந்து ஆயிரம் தலைகளோடு யாக குண்டத்தில் எரிந்த சூரபத்மனின் சாம்பலை உருண்டையாக பிடித்து சிவஞான மந்திரத்தை உச்சரித்து உயிர் பெறும் படிச் செய்தார். உடனே சூரபற்பன் உயிர் பெற்று எழுந்தான்.

இறந்தவன் மீண்டும் உயிர் பெற்று எழுந்ததால் சூரபற்பன், சிங்கமுகன் சூரனுக்குச் சொந்த தம்பியானான். சூரர்களுக்கு போர் செய்வதற்கான வல்லமையும், வலிமையான ஆயுதங்களையும் வரமாக ஈந்தார் சிவன். மறுபடியும் சூரன் ஆணவம் கொண்டு சிவனே! எனக்கு இன்னும் அதிக வரம் வேண்டும் என்றான்.

ஈசனே! உன்னாலும், ஐந்து முகம் கொண்ட எவராலும் வலுவானச் சக்தியால் உருவாக்கப்பட்ட எந்த ஆயுதங்களாலும் எங்களை அழிக்க முடியாத வரம் தரவேண்டும். யாராலும் கொல்ல முடியாதச் சக்தி வாய்ந்த வரத்தைத் தந்து அருள்புரிய வேண்டும் என்றான்.

ஈசனே அனைத்திற்கும் மேலான இறைவன் என்னும் மெய்ஞானம் வரும் வரையில், மனிதனுக்கு பிறவிகள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். உயிர்களை ரஜோகுணம் சிருஷ்டிகிறது. அதை சத்வகுணம் பாதுகாக்கிறது. தமோகுணம் அழிக்கிறது. அதில் பிரம்மம் ஆகியப் பரம்பொருள் முக்குணங்களும் அப்பாற்பட்டவர். என்பதைப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

மூடன் சூரன் ஆணவத்தோடு கேட்ட வரங்களை எல்லாம் தந்தேன் என்றார் ஈசன். கேட்டவர்க் கெல்லாம் இல்லை என்று சொல்லாத உயரிய பரம்பொருள். சூரனுக்கு வரத்தைக் கொடுத்துவிட்டு சிவபெருமான், உமையவள் பார்வதியோடுக் கைலைக்கு செல்லாமல் பாற்கடல் வாசனிடம் சென்று விபரங்களை உரைத்தார்கள். வரம் பெற்றச் சூரன் ஆனந்தத்தில் கைலாய மலை

நம் வசமாகிவிட்டது. ஆட்சிச் செய்யும் பொறுப்பும் நமக்குக் கிடைத்து விட்டது என்று மகிழ்ந்துக் கைலாய மலையைச் சுற்றிலும் யாரும் உள்ளேச் செல்லாதபடி, பூத கணங்களையும், வேதங்களையும் காவல் காக்கும் படி வைதான். அனைத்து தேவாதி தேவர்களையும் அடிமைப்படுத்தி ஆட்சி நடத்தினான். இவ்வாறுச் சுயநலத்தோடுப் பதினான்கு உலகங்களையும் அடக்கிச் சூரன் ஆண்டு வருகின்ற வேளை அவனுக்குக் கெட்ட காலம் தொடங்கியது.

ஒருவனுக்கு போகம் அதிகரிக்கும்போது யோகம் குறைந்து போகிறது. போகம் எப்பொழுதும் மனிதனைத் துன்பத்தில் தான் கொண்டு சேர்க்கும் . சூரன் அதிகாரத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களையும், ரிஷிகளையும், இந்திரன் வரையிலும் கொடுமைப்படுத்தினான். சிவன், பிரம்மா,விஷ்ணு ஆகிய மூலப்பொருளான மூவரையும் சூரன் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நினைத்தான். அவனுக்கு முன் ஜென்ம கர்ம வினைப் பயனை அடையும் நாளும், வேகமாகப் பக்கத்தில் நெருங்கியது.

சூரனின் கொடுமைகளைப் பொறுக்க முடியாதத் தேவர்கள் ஆதிநாராயணரிடம் அபயம் இட்டனர். தேவர்களின் அபய குரல் கேட்ட நாராயணர் பக்தர்களின் துயர் போக்க திருவுளம் கொண்டார். எப்படி என்றால், ஆதிமூலமே! என்றவுடன், மார்பிலே கனகமணி மாலை அசைய ஓடிவந்துக் கஜேந்திரன் என்ற யானையை காத்த காருண்ய மூர்த்தியல்லவா?

தேவர்களின் அபயம் கேட்டும் பேசாமல் இருந்து விடுவாரா? பரமேஸ்வரனிடம் சென்றுத் தேவர்களின் நிலையைக் கேட்டார் எம்பெருமான் நாராயணன். பெரிய, பெரிய தவம், யாகம் செய்தும் கூட எல்லாத் தெய்வங்களும் எளிதில் இறங்கி வரம் கொடுப்பதில்லை. ஆனால் படியளக்கின்றப் பரமன், பாகுபாடு இல்லாதக் கருணை மனம் உடையவர். கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும், கருவறையில் வளரும் சிசுவிற்கும் கருத்தோடுப் படியளப்பவர். கருணா மூர்த்தி யாரும் வருந்தி அழைத்தாலே வந்துக் கருணைப் புரிபவர்.

ஆகாதச் சூரர்களுக்கும், அருள் பொங்க, வரம் கொடுத்தவர். ஆகையால் வரம் கொடுத்த சிவனிடம் நாராயணர் எங்கும் புகழ், பொங்கு, கருணை புரிகின்ற ஈசனே! மறுக்காமல் வரம் வழங்கும் கைலைவாழ் பேரொழியே! சூரனுக்கு என்ன வரம் கொடுத்தீர். தேவர்களின் அபாயகுரலால் காதுகள் அடைகின்றது, என்று கேட்டார். பஞ்ச பூதங்களுக்கும், பூதகணங்களும் மற்றுமுள்ள எல்லாச் சக்திகளுக்கும் மேலான, சூர்யப் பிரகாச மூர்த்தியாகிய சிவன், நாராயணனுக்குப் பதில் உரைப் பார். அச்சுதரே! கேளும்! எல்லா லோகத்திலும் இருக்கின்ற எந்தவிதமானச் சக்தி வாய்ந்த ஆயுதங்களாலும் கொல்ல முடியாத வரம் கேட்டான்.

தேவாதி தேவர்களாலும், தேவேந்திரனாலும் கொல்ல முடியாதபடியும், ஐந்து முகங்களை உடைய ஆதி சிவனாகிய என்னாலும் கொல்ல முடியாதப் படியும் மற்றும் வானவர், தானவர் தெய்வக் கன்னிகைகள் ஆகிய அனைவரும் என்னை பணியும் படியான வரத்தையும் கேட்டான், யாமும் கொடுத்து விட்டோம் என்றார்.

இவ்வாறுச் சிவன் சொல்லக் கேட்டதும், நாராயணர் மிகவும் வருத்தம் கொண்டார். பதினான்கு உலகத்தையும் காத்து ரட்சிக்கின்ற நாராயணப்

பரம்பொருள் மாயவர் மனம் செய்வதறியாமல் தயக்கத்தோடு வேதனைப்பட்டது. அறிவில்லாத அரக்கனை தேடி, கள்வனை போல் அலைந்துத் திரிய வேண்டுமே சிவனே! என்று மனம் வாடினார்.

நாராயணர் சூரனை அழிக்க எந்த வடிவில் சென்றால் அவனை முடிக்கலாம் என்று சிவனே தியானித்தார். மண்ணை அளக்க வாமனனாய் வந்தவர் ஏரணியும் மாயவன், ஏழைகளின் ஈசன், கோலக் குறும்பர்களின் சூரக் குலத்தை வேரோடு அழிக்கக் கந்தவேல ஆண்டியாய் அவதாரம் எடுத்தார்.

கந்தன் அவதாரம்:

மனம் வருந்திய திருமால் நினைக்கிறார் இது எப்போதும் சகஜமாய் நடப்பதுதான் என்று திடம் கொண்டு இன்றைக்கு இந்தச் சூரர்களை அடியோடு அழித்துவிட வேண்டும் எனத் திட்டமிட்டார். ஆறு முகங்களோடு, ஆறு விதமானச் சக்திகளையும் வதம் செய்ய முடிவு எடுத்தார். சக்தியை வேல் ஆயுதமாகக் கையில் எடுத்துக்கொண்டு, கேட்டதைக் கொடுக்கும் சிவனிடம் நந்தியுடையச் சூலம் மற்றும் ஜபமாலையும் வாங்கிக்கொண்டுப், பலசாலியானப் படைகளையும் எட்டுத் திசைகளில் இருந்துத் தெரிந்து எடுத்துப் பெருந்திரளாக்கி தன் வீரப் போர் படைகளாக்கினார்.



கந்தன் என்கிறப் பெயரில் சடைமுடி அணிந்துப் பண்டார கோலமாய் மாயப் பெருமாள் உருமாறினார். துண்டுத் துண்டாய் கிழிந்த ஆடைகளை உடுத்திக் கொண்டு எதுவும தெரியாதப் பண்டாரமாய் வடிவமானார். சக்தியை வேலாயுதமாக மாற்றிக் கையில் பிடித்துக் கொண்டார். திருநீறைத் தன் உடல் முழுவதும் பூசிக்கொண்டு ஆறுமுகம் கொண்ட திருக் கழுத்தில் உத்திராட்ச மாலை அணிந்தார்.

காதுகளில் ஐம்பொன்னாலானக் குண்டல மணியையும் தொங்கவிட்டார். கையில் சிவனுடைய ஜபமாலையும், கந்தலான மந்திர பையும் தோளிலே தொங்கவிட்டு, சகலச் சக்திகளையும் சிவனருளால் தன்னுள் அடக்கி, பண்டாரக் கோலம் கொண்டுப் பூலோகம் வந்தார் மாயப் பெருமாள்.

படைகளுடன் தங்குவதற்காகப் பழனி மலையின் மேல் கூடாரம் இட்டார்சூரினிடம் தான் வந்தக் காரணத்தை அறிவிக்க வேண்டும் என்று ஒரு தூது விட எண்ணம் கொண்டார். தூதுச் சொல்ல ஒரு தகுதி வாய்ந்த, திடமான, பேசும் திறம் பெற்ற வீரவாகுவைத் தெரிந்து எடுத்து, வீரவாகுவே! நீ சூரபத்மனிடம் சென்று நான் சொல்வதைச் சொல்வாயாக!

# Day 16

தூதன் மிக நடந்து சிவனே செயலெனவே
காதமொன்று தான் கடந்துக் கண்டானே சூரனையும்
கந்தச் சுவாமி கருத்தாயுரைத்ததெல்லாம்
அந்த அசுரனுக்கு அத்தூதன் தானுரைத்தான்
சூரா கேள்கந்த சுவாமியரு ளென்றுரைக்க
ஏராத பாவி இகழ்த்தினா னப்போது
தூதனென்றோன் போகாமல் துடர்ந்து மிகப்பிடித்துப்
பாரப் பெருவிலங்கில் பாவியைவை யென்றுரைத்தான்
ஆரடா நீதான் அறியாயோ என்பலங்கள்
பாரடா வுன்றன் கந்தன் படுகிறதை
ஈசுரனு மென்றனுக்கு இருந்த இடமுமருளி
மாயனிடம் போயலையில் வாழ்ந்ததுநீ கண்டிலையோ
எமலோகம் வானம் இந்திரலோ கம்வரையும்
நவகோளும் நானல்லவோ நாட்ட மறிந்திலையோ
முப்பத்து முக்கோடி உற்றதே வாதிகளும்
நாற்பத்துநாற் கோடிரிஷி நமக்கென்ற றிந்திலையோ
அறியாத வாறோகாண் ஆண்டிக்குத் தூதுவந்தாய்ச்
சிறியனென் றிராதேயென் சிரசுடம்பு கண்டிலையோ
உன்னுடைய கந்தன் உயரமது நானறிவேன்
என்னுடைய உயரம் இனிநீ யறிவாயே
ஆனதா லென்னுடைய ஆங்கார மத்தனையும்
கானகத்தில் வாழும் கந்தனுக் கேவுரைநீ
என்று மதமாய் இவன்பேசத் தூதனுந்தான்
அன்று அந்தச்சூரனுக்கு அறையாம லேதுரைப்பான்
நீயோ தானெங்கள் நிமலன் தனக்கெதிரி
பேயோரி நாய்நரிகள் பிச்சிப் பிடுங்கியுன்னை
கண்ட விடத்தில் கழுக்கள் மிகப்பிடுங்கிக்
கொண்டோடித் தின்னவே லாயுதங் கொண்டுவந்தார்
தேவர் சிறையும் தெய்வமட வார்சிறையும்
மூவர் சிறையும் மும்முடுக்க முந்தீர்த்து
உன்னுடைய சேனை உற்றபடை யழித்து
நின்னுடைய கோட்டை நீறு பொடியாக்கி
அரசாள்வா ரெங்கள் ஆறுமுக வேலவனார்
துரையான கந்த சுவாமிசொல்லி யனுப்பினர்காண்
என்றேதான் தூதன் இவையுரைக்கச் சூரனுந்தான்
அன்றே மனது அளறித்துணிந் தேதுரைப்பான்
ஆனா லறிவோம் ஆண்டி தனையுமிங்கே
போனா லென்னோடே போருசெய்ய யேவிடுநீ
சூர னிவையுரைக்கச் சூலாயுதப் பெருமாள்
தூதன் மிகநடந்து சொன்னான் சுவாமியர்க்கு

சூரன்பாடு

சுவாமி மனமகிழ்ந்து சூரன் தனையறுக்கக்
காமிவே லாயுதத்தைக் கையிலெடுத்தா ரம்மானை
வேலா யுதமெடுத்து வேதப் படைசூழ
சூலாயுதப் பெருமாள் துடியாய் நடக்கலுற்றார்
கந்தனார் வேசம் கரந்திருந்த மாயவனார்
வந்தார்காண் சூரன் வலுவிழந்தா னம்மானை
சூர னவன்கண்டு தோசப் படையணிந்து
மூரன் படைக்கு முன்னே நடக்கலுற்றான்
கண்டா ரீராறு கரத்தோ னகமகிழ்ந்து
பண்டார வேசம்பண்பா யெடுத்திறுக்கி
முன்னே வருஞ்சூரன் முகத்தை யவர்பார்த்துப்
பின்னே சுவாமி புத்தி மிகவுரைப்பார்
வம்பி லிறவாதே வாழ்விழந்து போகாதே
தம்பி தலைவன் தளமு மிழவாதே
பற்பக் கிரீடப் பவுசு மிழவாதே
அற்ப மிந்தவாழ்வு அநியாயம் விட்டுவிடு
கரணமீ தில்லாமல் கௌவையற்று வாழ்ந்திருந்து
மரணம் வந்துசீவன் மாண்டுபோ கும்போது
நன்மை யதுகூட நாடுமே யல்லாது
தின்மை வராது தேவரையும் விட்டுவிடு
தீட்சை யுடன்புத்தி செவ்வேநே ரிட்டுவொரு
மோட்ச மதுதேட முடுக்கமதை விட்டுவிடு
இத்தனையும் நாதன் எடுத்து மிகவுரைக்கப்
புத்திகெட்டப் பாவி போர்சூர னேதுரைப்பான்
இரந்து திரியுகின்ற இரப்பனுக் குள்ளபுத்திப்
பரந்த புவியாளும் பாரமுடிக் காவலற்கு
ஏற்குமோ ஞானம் இரப்போருக் கல்லாது
ஆர்க்குமே சொல்லாதே ஆண்டிவுன் ஞாயமதை
சண்டைக்கு வாவெனவே தரங்கூறித் தூதுவிட்டப்
பண்டார மென்ற படைக்கார னும்நீயோ
என்னுடைய சேனை எல்லாமிக அழித்து
என்னையும் நாய்நரிக்கு இடுவேனென் றதும்நீயோ
என்றே யச்சூரன் இயம்பி மிகநகைத்துப்
பண்டார னோடே படையெடுத்தா னம்மானை
சூரனுட படைகள் துண்டந்துண்ட மாய்விழவே
வீரர்களும் வந்து வெட்டினா ரம்மானை
வெட்டிதினால் செத்தார் மிகுசூ ரக்குலங்கள்
பட்டார்க ளென்று பார்சூரன் தான்கேட்டு
வந்து எதிர்த்தான்காண் மாயாண்டி தன்னோடே
இன்றுவந்து வாய்த்துதென்று எம்பெருமா ளுமகிழ்ந்து
வேலா யுதத்தை விறுமா பதஞ்சேவித்து

மேலாம் பரனார் விமல னருளாலே
எறிந்தார்காண் சூரன் இறந்தானே மண்மீதில்
பறிந்தேவே லாயுதமும் பாற்கடலில் மூழ்கியதே
சூரன் மடிந்து துடித்துயிர் போகுகையில்
வீரமுள்ள நாதன் வீணனவன் முன்பில்வந்து
சொன்ன மொழியெல்லாம் சூட்சமாய்க் கேளாமல்
இந்நிலமேல் பாவி இறந்தாயே வம்பாலே
நாட்டமுடன் நானுரைத்த நல்லமொழி கேளாமல்
கோட்டையு முன்னுடைய குஞ்சரமுந் தோற்றாயே
சந்துவிட்ட சொற்படிக்குத் தந்தரசு ஆளாமல்
விந்துக் குலங்களற்று வீணாய்நீ மாண்டாயே
மாளா வரங்கள் மாகோடி பெற்றோமென்று
பாழாக மாண்டாயே பண்டாரங் கையாலே
என்றந்த ஆதி இத்தனையுந் தான்கூற
முந்து பிறந்த முப்பிறப்புச் சூரமதால்
என்னையோ கொல்ல இரப்பனோ ஏலுவது
உன்னையோ கொல்ல ஒட்டுவனோ நான்துணிந்தால்
வேலா யுதத்தாலே வென்றுகொன்ற தல்லாது
ஏலாது வுன்னாலே இளப்பமிங்கே பேசாதே
என்றானே சூரன் எம்பெருமாள் கோபமுடன்
கொன்றாரே சூரனுட குறவுயிரை யம்மானை

விருத்தம்

சூரனைத் துணித்த சத்தி சூலமும் கடலில் மூழ்கி
வீரமால் பதத்தைப் போற்றி விளம்புவாள் சத்தி மாது
மூரனைச் செயிக்க முன்னே முச்சூலமாய்ச் சபித்தசாபம்
தீரவே வேணு மென்று திருப்பதம் வணங்கி நின்றாள்

வலிமை வாய்ந்தக் கைலாய மலையையும் மற்றும் எல்லோர் வாழும் மலைவாழ் இடங்களையும் கொடுத்துவிடு. தேவர்களை அடிமைத்தனத்தில் இருந்து மாற்ற, சகல ரிஷி மார்களையும் அவரவர் இடங்களுக்கு அனுப்பி விடு. சிவன் அருளால் கிடைத்த வரபலத்தால் நல்லச் சிந்தனையுடன் நியாயமான வழியில் நாட்டைச் செவ்வனே ஆட்சி புரிவாய்.

மறுத்தாயானால் இன்று கழித்து எட்டாம் நாள் அசுரனான உனக்கும், ஆண்டியான கந்தசாமிக்கும் சண்டை ஏற்படும். நீ அவர் சொல்லுக்கு இணங்காவிட்டால் பகை உண்டாகி கந்தசாமியின் கையால் நீ அழியப்போவது உறுதி என்றுச் சொல்லி வரும்படி என்னைத் தூதாக அனுப்பினார் என்றான் வீரவாகு. தூதுச் சொல்லும் வீரவாகு மனதில் நினைக்கின்றான் அண்டச் சராசரங்களை பாதுகாக்கின்ற கருணைக்கடல். சிவன் திரு நடனம் புரிவது போல் மாயன் ஆண்டி உருவில் திருவிளையாடல் புரிகின்றார். என்று எண்ணி பல மைல் தூரம் கடந்து சூரபத்மனைக் கண்டுச் செய்தியை உரைத்தான். கந்தசாமியாகிய மாயப் பெருமாள் சொன்னதை எல்லாம் வீரவாகு விவரமாகச் சொன்னான்.

அதுகேட்டச் சூரபற்பன் கோபம்கொண்டுச் சீறினான், வீரவாகு அசுர! வீணாக உன் அழிவைத் தேடிக் கொள்ளாதே இது வீரமிக்கக் கந்தசாமியின் ஆணை என்றான். வீரவாகுவின் வாக்கைக் காதுக் கொடுத்துக் கேட்டும் உண்மையை உணராத மட முட்டாளானக் சூரன் ஏளனமாய் நகைத்துக் கொண்டுச் செல்வான் யாருடா நீ? எனக்குப் புத்திச் சொல்ல வந்தவன்.

யாரங்கே! இவனைப் பிடித்துப் பெரியச் சங்கிலியால் கை கால்களில் விலங்கு மாட்டிச் சிறையில் அடையுங்கள் என்றான் ஆணவம் கொண்ட அசுரன்.

கோபம் கொண்ட சூரபற்பன் வீரவாகு விடம் அடோ தூதா! நான் சொல்வதை நீ கேள். ஈஸ்வரனும் கூட இன்று எனக்கு அடிமையானார். அவர் சஞ்சரிக்கின்ற கைலாய மலையை எனக்குத் தந்துவிட்டு அவர் இருக்க இடமில்லாமல் அலைந்துத் திரிகிறாரே அது உன் கண்ணுக்குத் தெரியவில்லையா?

சிவபெருமானின் மைத்துனனான திருமால் எனக்கு பயந்து போய் கடலுக்குள் ஒளிந்து வாழ்வதை நீ காணவில்லையா. எமலோகம், வான்லோகம், இந்திரலோகம் ஆகிய மூன்று லோகத்தையும் என்னிடம் தந்துவிட்டுத் தங்க இடமில்லாமல் தத்தளித்துக் கொண்டுத் தவிப்பதை நீ அறிய வில்லையே?

சூரியன் முதல் ஒன்பது கிரகங்களையும் நானல்லவா ஆண்டுக் கொண்டிருக்கிறேன் என்பது தெரியாதா உனக்கு? தேவலோகத்தில் வாழ்கின்ற முப்பத்து முக்கோடி தேவாதி தேவர்களும் எனக்கல்லவாப் பணிந்துக் கிடந்து, தவிப்பதை நீ ஏன் புரியாமல் தூது வந்தாய். எதைப்பற்றியும் அறியாத நீ போயும் போயும் ஒரு ஆண்டிப் பண்டாரத்திற்குத் தூதுவனாக வந்தாயே! மானம் கெட்டவனே! என்று வசைக் கூறினான்.

என்னை வீரம் குறைந்தவன் என்று நினைத்து விடாதே. என் முழு உருவத்தையும் காண்கிறாயல்லவா? நீ சொல்கின்றக் கந்தசாமியின் உயரத்தையும் ஆற்றலையும் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நீ என்னிடம் பயம் உருவாக்கும் வேலைக் காட்டாதே என்றான். என்னிடம் உள்ள ஆணவம் என் பலம் இவற்றால் உன் பண்டாரம் படுகின்றப் பாட்டைப் பொறுத்திருந்துப் பார். என் வீரப் போரை நீயும் கண்ணால் காண்பாய் என்றான்.

சந்தன மரக் காட்டில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற ஆண்டியிடம் சொல் என்று அசுரன் மதம் பிடித்த யானையை போல் ஆணவத்துடன் பேசினான். வீரவாகு அவனைப் பார்த்துப் பரிதாபம் கொண்டவனாகப் பொறுத்திருந்துப் பார்ப்போம். நீ கந்தனுக்கு எதிரியானாய், அவர் வீரம் உனக்கு இப்போதுத் தெரியாது.

பேய், பிசாசுகளும், நாய்களும், நரிகளும் சேர்ந்து உன்னைக் கடித்துக் குதறும் படி செய்வார். உன்னைக் கண்டதும் சித்திரவதைச் செய்ய வேல், ஆயுதத்துடன் வந்துள்ளார், வேலாயுதப் பெருமாள் மூன்று லோகத்தில் உள்ளவர்களையும், தெய்வக் கன்னிமார்களையும், தேவர்களையும் உன்னிடம் இருந்து விடுவித்து உனதுப் படைப் பட்டாளங்களையும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கவும் கோட்டைக் கொத்தளங்களைத் தவிடுப் பொடியாக்கியும் விடுவார்.

உனக்கு சிவன் கொடுத்த வரங்களையும் அழிக்க ஆறுச் சக்திகளைக் கொண்ட ஆறுமுக வேலவன் வருவார் என்றுக் கூறினான். அசுரனானவன் அதைக் கேட்டு ஆவேசம் கொண்டவனாக என்னோடு யுத்தம் செய்யவரச்சொல் என்று சவால் விட்டான் தூதனாக வந்த வீரவாகு விடம் அசுரனாகிய சூரன் சொன்னதை எல்லாம் வீரவாகு சென்று ஆண்டி வேடம் கொண்டச் சுவாமியிடம் சொன்னான். மாய பெருமாள் மிகவும் சந்தோஷப்பட்டு, அடியோடு சூரனை அழிப்பதற்காக வேலாயுதத்தையும் கையில் ஏந்திக்கொண்டு ஞான அறிவுள்ள பெரும் படைகளுடன் ஆவேசம் கொண்டு அவனை நோக்கிச் சென்றார்.

கந்தனாக ஆண்டிக் கோலத்தோடு மாறு வேடத்தில் சென்ற மாயப் பெருமாளின் தோற்றத்தை பார்த்தச் சூரன் தைரியத்தை இழந்து விட்டான். அவனின் கை, கால்கள் நடுக்கம் கொண்டது. உள்ளம் படபடத்தது. உடல்கள் உருக்குலைந்துக் கலக்கம் உற்றது. தீயச் சகுணங்கள் தோன்றியது.

எதையும் கண்டுக் கொள்ளாத அறிவு கெட்ட முட்டாள் அவனது கர்மம் பிடித்த படைகளை திரட்டிக்கொண்டு தலைவனாக முன்னால் நடந்து வருகிறான். அவனின் விதியை அவன் தெரிந்திருக்கவில்லை. சூரபத்மனைப் பார்த்த மாய பெருமாள் தன்னுடைய பன்னிரண்டுக் கைகளையும், ஆறு திரு முகங்களையும் கொண்ட கந்தசாமியாகியக் கடவுள் சூரனுக்கு பின்னால் வரும் துன்பத்தை எண்ணிப் புத்திமதிக் கூறுவார்.

சூரனே, நீ வம்பு சண்டைக்கு வந்து உன்னுடைய உயிரையும் வாழ்க்கையையும் இழக்க போகிறாய். உற்றார், உறவினர், திரண்ட படையுடன் நீ அழியப் போகிறாய். இராஜப் பதவியும் பலம்கொண்ட வரங்களையும் தொலைக்கப் போகிறாய். ஆயுதங்களை தூரே எறிந்து விட்டு வாழ்ந்து போ. பகை வேண்டாம் என்றார்.

ஆயுள் முடிந்து உயிர் உடல் விட்டுப் பிரிந்துப் போகும்போதுப் புண்ணியம் மட்டுமே புகழோடுச் சேர்ந்து வரும். தீமை எதுவும் பயன்தராது. நான் சொல்லும் புத்திமதிகளைக் கேட்டு நீ அடிமையாக வைத்திருக்கும் தேவர்களை விட்டுவிடு என்றும் சொர்க்கத்தில் சுகம் பெற வேண்டும் என்றும் உன் அதிகார ஆணவத்தை விட்டு விலகிப் போ என்றார். ஒருவன் செய்யும் தீமையே ஆனாலும் சரி, நன்மையே ஆனாலும் சரி அவனுடையக் குலத்திற்கே வாரிசாக வருகிறது. இதை நீசன் தெரிந்துக் கொள்வதில்லை.

சூரபத்மனுக்கு எல்லா அறிவுரைகளையும் விவரமாக கந்த சுவாமி கடவுள் சொல்லியும் அறிவுக் கெட்ட கபடக் குணம் கொண்ட அசுரன் கேட்டு ஏளனமாக சிரித்தான். இரந்து வாழுகின்ற நீ எனக்கு உபதேசம் சொல்வதா? மூவுலகம் ஆளும் திறன் கொண்ட நான் கேட்பதா?

உன்னுடைய ஞான உபதேசமும் ஆறுதல் பேச்சும் உன்னைப் போன்றப் பிச்சைக் காரனுக்கு தான் தகும். வீரம் இருந்தால் என்னோடு யுத்தம் செய் என்று அவதூறாய் பேசினான். ஆண்டியாகிய கந்தா! என்னுடைய படை வீரர்களையும் என் வல்லமை பொருந்திய ஆயுதங்களையும் அழித்து என்னையும் கொன்று நாய் நரிகளுக்கு இரையாக போடுவேன் என்று

வீராப்பாய் பேசியது நீதானே? என்ற அசுரன் சொல்லி ஆவேசத்தோடு ஆர்ப்பரித்தான்.



சூரன் பாடு:

அவன் சிரிப்பை அடக்கி ஆணவத்தை அழித்து அவனை கூண்டோடு அழிக்க, ஆண்டிக் கோலம் பூண்டக் கந்தசாமிக் கடவுள், பத்மாசூரனுடைய அசுரப் படைகளை எல்லாம் திரிச்செந்தூர் கடற்கரையில் கண்டத் துண்டம் ஆக்கினார். அனைவரும் மாண்டனர். அதிகமான அசுரப் படைகள் அழிந்ததை அறிந்தச் சூரன் நேருக்கு நேராக நின்று மாயப் பெருமாளானப் பண்டாரத்தோடு சண்டையிட்டான். இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று மாயப் பெருமாள், தன் இருப்பிடத்தையும் வணங்கிவிட்டு, வேல் ஆயுதங்களைக் கையில் தூக்கிக்கொண்டுச் சிவபெருமானையும் தியானித்து அம்பு கணையைத் தொடுத்தார்.

நேருக்கு நேராக நின்று யுத்தம் செய்ய முடியாதச் சூரன் மாயையாய் மறைந்து விடுவான். மாய பெருமாள் கண்டுபிடித்து விட்டார். கந்தசாமி மரத்தை வெட்டி சாய்த்து விடுவார். அவன் சேவலாய் ஓடுவான். அவர் துரத்திப் பிடிப்பார்.

இப்படியாகச் சூரன் மாயத்தால் பல உருவம் கொண்டு ஓடினான். மாய பெருமாள் மந்திரமே வடிவானவர். சூரன் செய்த மாய்கையை அறுக்க வந்தவர்

அல்லவா? அவரிடம் செல்லுமா? சூரனின் வித்தைகள் யாவையும் உடைத்து அழித்தார். யுத்தம் தொடர்ந்தது.  முடிவில் மாய பெருமாள் வேலை எடுத்து எறிந்து, சக்தி ஆயுதத்தால் சாய்த்தார். சூரபற்பன் செந்தூர் கடற்கரையில் குற்றுயிராய் வீழ்ந்துக் கிடந்தான். சூரனை அழித்து வெற்றிக் கொடிக்கட்டிக் கந்தசாமி வீணாக அழிந்துப் போனச் சூரனை கடைக்கண்ணால் காட்சிக் கொடுக்க அருகில் வந்தார்.

நான் சொன்ன நல்ல வார்த்தைகளை மதிக்காமல் நடந்தப் படியால், உன்னுடைய வரம்பெற்ற வாழ்வும், வீரமுள்ளப் படைகளும், உன்னால் ஆணவத்தால் இறந்து விட்டாயே, அந்தோ! பரிதாபம் என்றார். என்னைப் பண்டாரம் என்றுப் பரிகாசம் செய்தாயே! பல கோடி வரங்களைப் பெற்றும், எல்லாம் இழந்து விட்டாயே! என்று ஆண்டியாக வந்த ஆதிநாராயணப் பெருமான் அந்தோ! பரிதாபம் என்றார். என்னைப் பண்டாரம் என்றுப் பரிகசித்தாயே! பலக் கோடி வரங்களைப் பெற்றும், எல்லாம் இழந்துவிட்டாயே என்று ஆண்டியாக வந்த ஆதிநாராயணர் பொறுமையோடும், பெருமையோடு சொன்னார்.

அதைக்கேட்டச் சூரன் கூறுவான், முன் ஜென்மத்தில் பிறந்த குரோணியின் வம்சத்தைச் சேர்ந்த சூரன் நான். என் குலமும், அதன் பலமும் என்னவென்று உனக்குத் தெரியாது. என் உயிரை கொல்ல எந்த பண்டாரத்தாலும் முடியாது. நான்தான் உன்னைக் கொன்றிருப்பேன். ஆனால் உன்னிடம், பராசக்தியினுடைய வேலாயுதம் இருந்ததால் நீ வென்று விட்டாய். இல்லாவிட்டால் உன்னால் என்னை கொல்ல முடியாது என்றான். இப்படி ஆணவம் பேசிய சூரனின் பேச்சைக் கேட்டு வெகுண்டெழுந்த ஆதிநாராயணர் கண்கள் சிவக்க கூறுவார், அடுத்த பிறவியில் உன்னை இரணியனாய் பிறவி செய்து, என் பலம் கொண்ட கையால் ஆயுதம் எதுவுமின்றி கொல்வேன் என்று குற்றுயிராய் இருந்த சூரனை கொன்றழித்தார்.

சூரனை அழித்த சக்தியின் வேலாயுதம் பாவ அழுக்கைப் போக்கச் செந்தூர் கடலில் மூழ்கி நீராடி எழுந்து ,சுவாமியின் கையில் வந்து அடங்கியது. பின் ஆண்டி வேடம் அகற்றி சுவாமி மலையில் கோயில் கொண்டு திருச்செந்தூரிலும் நின்று அருள் பாலித்து வருகிறார்.

நான் என்ற ஆணவத்தோடு இருந்த சூரர்கள் அழிந்த செய்தியை இந்த உலக மக்கள் அறிய வேண்டும் என்பதாலும், நான் என்ற, ஆணவம் கொண்டவர்கள் எவ்வளவு வல்லமை உடையவர்களாக இருந்தாலும், இந்தச் சூரர்களுக்கு எப்படி அழிவு வந்ததோ, அது போல் நமக்கும் ஆணவம் மேலோங்கும் போது சூரர்களுக்கு அழிவு வந்தது போன்றுத் தான் நமக்கும் வரும் என்பதை உணர்த்துவதற்காகவும், நாம் ஆணவம் கொள்ளக்கூடாது என்பதற்காகவும் தான்

சூரர்கள் என்ற ஆணவம் அழிந்ததை மக்கள் அறிவதற்காக, ஆண்டுக்கு ஒரு முறை கந்தசுவாமி கடவுளுக்கு கந்த சஷ்டி விரதம் ஏற்று சூரன் பாடு என்று திருவிழா எடுத்து கந்தனே நேரில் வந்து சூரனை சம்ஹாரம் செய்வதுபோல் ஆண்டு தோறும் பூலோக திருவிழா நடந்து வருகிறது. தீமையை அழித்து தர்மத்தை காக்க வந்த நாளை காண சூரன் பாடு என்று மக்கள் திரளாக

கடற்கரையில் அலைபோல் கூடுவதை பெருமையாக கோவிலின் அருகினில் கூடிடும் கூட்டம் தலையா? கடல் அலையா? என்று காணும் பக்தர்கள் உள்ளத்தை பெருமை அடையச் செய்வதோடு மட்டுமல்லாமல் ஆணவம் என்ற அழுக்கு நம் மனதில் இருந்து அழிந்தால், ஒற்றுமை என்னும் அன்பின் கூட்டம் இப்படித் திரளாக இருக்கும் என்பதையும் காட்டுக்கிறது.

மாய பெருமாளுக்கு சக்தியாகிய பார்வதிதேவி வேலஆயுதமாகி உதவிய காரணத்தால், வீர திருமாலுடைய பாத திருவடிகளை வணங்கி, ஆதியும் அந்தமாய் இருக்கின்ற ஆதிநாராயணக் கருணைக்கடலே! ஒளிமயமாக எங்கும் நிறைந்த பரம்பொருளே! என்னைச் சூலாயுதமாக பிறவிச் செய்த முன் சாபத்தைத்தீர்க்க வேண்டும் என்று வேண்டினால் அம்மை உமையவள்.

மாய பெருமாளும் சூரனைக் கொள்வதற்காகச் சக்தியைச் சூலமாக போ என்றுச் சாபமிட்டச் சாபத்தைத் தீர்க்கச் சாந்தி ஹோமம் ஒன்றை யாகமாகச் செய்து வேள்வி வளர்த்தார். ஓமசாந்தியில் சூரனைக் கொன்றப் பாவ தோஷம்கழித்த காரணத்தால் தாயாகியச் சக்தி தேவியின் முன்வினைச் சாபம் ஆனது திருமால் உதவியோடு தீர்க்கப்பட்டது. சிவபெருமான் அமர்ந்திருந்த கயிலையங்கிரிச் சென்றுச் சக்தியாகிய பார்வதியும், மனநிறைவுடன் சந்தோஷம் கலைந்து மேலோகம் சென்று சிவனுடன் சேர்ந்துச் சிவசக்தியானாள் அம்மை உடையவள்.

## Day 17

ஆதியே நாதி அனாதித் திருவுளமே
சோதியே யென்னுடைய சூல்சா பந்தீரும்
என்று உமையாள் எடுத்து மிகவுரைக்க
நன்றெனவே அந்த நாரா யணர்மகிழ்ந்து
சாப மதுதீரச் சாந்தி மிகவளர்த்தார்
தாபமுடன் மாயன் சாந்தி மிகவளர்க்க
அம்மை உமையாளின் ஆனசாபந் தீர்ந்து
செம்மையுடன் கயிலை சென்றனள்கா ணம்மானை

இரணியன் பாடு

சத்திசா பந்தீர்த்துத் தவலோக மேயனுப்பித்
தத்தியாய்ச் சூரனையும் சங்காரஞ் செய்துஅந்த
சூரனூர் தன்னைத் தீயோன் தனக்களித்து
வீரசூ ரன்தனையும் மேலுமந் தவ்வுகத்தில்
பார இரணியனாய்ப் படைத்தார்கா ணம்மானை
சூர னிரணியனாய்த் தோன்றினா னவ்வுகத்தில்
மாய னொருகோலம் மகவா யுருவெடுத்து
வாயில் நடையில்வைத்து மாபாவிச் சூரனையும்
நெஞ்சை யவர்நகத்தால் நேரேப் பிளந்துவைத்து
வஞ்சக னோடே மாயன் மிகவுரைத்தார்
சூர பற்பனாகத் தோன்றினா யந்நாளில்

ஊரிரப்ப னாக உருவாக நான்தோன்றிக்
கொன்னே னானென்று கூறினே னப்போது
அந்நேரம் நீதான் ஆண்டியல்லக் கொன்னதென்றாய்
வேலா யுதத்தாலே வென்றாய்நீ யல்லாது
ஏலாது உன்னாலே என்றன்று பேசினையே
ஆயுதங்க ளம்பு அஸ்திரம்வா ளில்லாமல்
வாயிதமா யென்னகத்தால் வகிர்ந்தேனா னுன்வயிற்றை
என்றுமா யனுரைக்க ஏதுரைப் பான்சூரன்
பத்து மலையைப் பாரநக மாய்ப்பதித்து
இத்தலத்தி லென்னை இறக்கவைத்தா யல்லாது
ஏலாது உன்னாலே இந்தமொழி பேசாதே
மாலா னவேதன் மனதுகோ பம்வெகுண்டு
உன்னை யின்னமிந்த உலகில் பிறவிசெய்து
கொன் றா லேவிடுவேன் கிரேதா யுகம்வயது
திகைந்தல்லோ போச்சு திரேதா யுகம்பிறந்தால்
பகையுந் தானப்போ பார்மீதி லுண்டாகும்
முப்பிறவித் துண்டம் உயிர்ப்பிறவி செய்கையிலே
இப்பிறவி தன்னில் இசைந்தமொழி கேட்பேனான்
என்று இரணியனை இரணசங் காரமிட்டு
அன்று கிரேதா யுகமழித்தா ரம்மானை
அந்தக் கிரேதா யுகமழித்த அந்நாளில்
கந்தத் திருவேசம் கலந்திருந்த மாயவனார்
செந்தூர்ப் பதியில் சேர்ந்திருந்தா ரம்மானை

இரணியன் பாடு:

விளக்கம்:

அநியாயம் செய்த சூரபத்மனை மீண்டும் அதே யுகமான கிரேதாயுகத்தில் இரணியனாக பிறவிச் செய்து அவன் கர்வத்தை என் இரு கைகளால் கொன்று தீர்க்கவேண்டும் என்று எண்ணி இரணியன் பிறவியும் நடந்தது. மாயப் பெருமாளே இரணியனுக்கு மகனாக பிறப்பு எடுத்தார்.

தீய எண்ணம் கொண்ட ஒருவன் தன் வாழ்வில் எந்நிலையில் இருந்தாலும் மற்றவர்களுக்கு தீங்கான விளைவுகளை ஏற்படுத்தும் தீயச் செயல்களை புரிகின்றான். கர்மா என்னும் விதை அவனுக்கு இருப்பதால் பிறப்பு மற்றும் இறப்பு எனும் சூழலில் அவன் தொடர்ந்து இருக்கிறான்.

தர்ம முறையில் வாழ்பவனுக்கு முன்வினைக் காரணத்தால் சமயம் வரும்போது விழைவைச் சந்திக்கிறான். ஆனால் பகவான் அவனைக் கர்ம விதியில் படாமல் அந்த துன்பத்தை ஒரு தற்காலிகமாய் போகச் செய்துக் காப்பாற்றுகிறார். பக்தன் ஒருவன் வாழ்வில் இன்பமும், துன்பமும் கலந்து அனுபவித்தாலும் இறைவன் எப்பொழுதும் அருகில் நின்றுக் காப்பாற்றுகிறார். கர்ம வினையால் தீமை செய்பவர்களும் அழிவார். ஆனால் தீய எண்ணம் கொண்டவர்களின் வாழ்விலே தீய விளைவுகளை ஏற்படுத்திப் பிறப்பென்னும் சூழலில் நிரந்தரமாகச் சிக்கிக் துயரம் கொள்கிறான்.

கிரேதா யுகத்திலே தோன்றிய இரணியனும், மிகப்பெரிய வரங்களைப் பெற்று வர பலம் உடையவனாக திகழ்ந்தான். அவன் பெற்ற வரங்கள் என்னவென்றால் இந்த உலகில் உண்டு பண்ணி வைத்த உற்ற ஆயுதத்தாலோ, மனிதர்களாலோ, மிருகங்களாலோ, பூமியில் வைத்தோ, மலையின் மீது வைத்தோ , வீட்டிற்கு உள்ளேயோ அல்லது வீட்டிற்கு வெளியில் வைத்தோ, பகலிலோ , அல்லது இரவிலோ இறப்பு வந்துவிடக்கூடாது என்ற வரத்தை பெற்று வந்தான்.

இப்படி பல வரங்களைப் பெற்று வந்தவனுக்கு சிவபெருமான் இருக்கும் கைலாயத்தின் மேல் ஆசை வந்தது. தேவர்களையும் அடக்கி ஆள வேண்டும் என்று தவ நிலையில் இருந்தார். அவன் மனைவி லீலாவதியாவாள்(கயாது) . அவள் வயிற்றில் மாயப் பெருமாளான திருமால், தீமையை அழிக்க இரணியனுக்கு மகனாக பிறந்து, இரணியனின் மனைவியான லீலாவதியின்(கயாது) வயிற்றில் கருவாய் உருவானார் அதை அறிந்த தேவரிஷி நாரதர் எட்டெழுத்து மந்திரமாகிய விளங்கும் “ஓம் நமோ நாராயணாய” என்னும் உயரிய நாமத்தை உச்சரிக்கும் படி வயிற்றில் இருந்த சிசுவுக்கு நாரத மாமுனி மூலம் போதித்தார்.

அந்த சிசுவானது கருவிலேயே நாராயணமந்திரத்தின் மகிமையை புரிந்து உச்சரித்து திருமால் மீது மாறாத பற்றுக் கொண்டது. மாதங்கள் உருண்டு ஓடியது. லீலாவதி(கயாது)க்கும், இரணியனுக்கும் அழகான ஆண் குழந்தை பிறந்தது. பிரகலாதன் என்று பெயரிட்டார் நாரதர். நாரத முனிவரால் உபதேசம் பெற்ற குழந்தை விஷ்ணுவாகிய திருமால் மீது மாறாத பற்றுடனும் பக்தியோடும் இருந்தது.

குழந்தை பிரகலாதன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருகிறான். சிவபெருமானை நினைத்து தவம் செய்த இரணியன் கணக்கில் அடங்கா வரம் பெற்று வரும் வேளை, அவனுக்கு குழந்தை பிறந்தது என்று அறிந்து ஆனந்தம் கொண்டான். மகனை வாரி எடுத்து முத்தமிட்டு மகிழ்ந்தான்.

குழந்தைக்கு தக்க வயது வந்ததும், அறிவு ஞானத்தைப் பெருக்குவதற்காகக் குருகுலத்திற்குக் கல்விப் பயில, அசுர குல குருவான சுக்கிராச்சாரியாரிடம் அனுப்பி வைத்தார்கள். சிவபெருமானிடம் வரம் பெற்று வல்லமை கொண்ட இரணியன் நானே கடவுள் என் பெயராகிய இரணிய நாமத்தைத் தான் இனிமேல் கடவுள் நாமமாகச் சொல்லி எல்லோரும் என்னை வணங்க வேண்டும் என்றான்.

அப்படி வணங்காதவர்களை அடித்து துன்புறுத்தினான். இரணியன் மகனான பிரகலாதன் குருவிடம் பயிற்சி பெற்று வரும் சிறு பாலகன். குருவான சுக்ராச்சாரியர் எல்லா சீடர்களுக்கும் “இரண்யாய நம” என்று போற்றி வழங்கும்படி பயிற்றுவித்தார். ஆனால் பிரகலாதன் குரு வார்த்தையை மறுத்து திருமாலாகிய நாராயண தான் நமக்கெல்லாம் இறைவன் ஆகும்.

அவர்தான் நம்மை எல்லாம் காக்கும் கடவுள். ஆகையால் எல்லோரும் "ஓம் நமோ நாராயணாய " என்னும் நாமம் தான் நமக்கு நன்மை தருகின்ற நாமம். ஆகையால் குருநாதரே அந்த நாமம் அல்லாது, உலகில் பிறந்து,பிறந்து இறக்க போகும் உயிர்களின் பெயர் சொன்னால் நன்மைத் தராது என்று வாதாடினான். குருவும் குழந்தை பிரகலாதனின் நிலைகண்டு பயம் கொண்டார்.

எல்லா சீடர்களையும் குருவையும் பிரகலாதன் பேச்சால் மாற்றி குருகுலத்தில் ஒரே நாமமான நாராயண நாமம் பரவியது. எல்லோரையும் ஒன்றுச் சேர்த்து நாராயணா என்னும் நாமம் நித்தம் நாவால் சொன்னால் வரும் ஷேமம் என்று பக்தியோடு பாடி பேரின்பம் கொண்டனர். ஆவலுடன் ஆடி ஆனந்தம் கண்டனர்.

அதை அறிந்த இரணியன் மிகவும் கோபம் கொண்டான். தன் அன்பு மகனை மாற்ற பெரும்பாடுப் பட்டான். தன் குழந்தை என்றுப் பாராமல் பெரிய தண்டனையாக யானையை விட்டுத் தலையை இடறச் செய்தான். யானை பிரகலாதனை வணங்கி வாழ்த்திச் சென்றது.

இரணியன் உள்ளுக்குள் ஒருவித பயம் கொண்டாலும், பகட்டுக்காக யானையும் எனக்கு பயந்து என் மகனை வணங்கி சென்றது என்றான். ஆனால் பிஞ்சு மகன் பிரகலாதன் இல்லை அப்பா! என்னை திருமால் தான் யானையின் முன் நின்று காப்பாற்றினார் என்றான்.

இரணியன் மகனிடம் என் பெயரை ஒருமுறையாவது சொல் மகனே என்றான். பிரகலாதன் தந்தையின் பெயரை சொல்ல மறப்பேனா? ஆனால் நம்மைப் படைத்தவன் நாராயணன் அல்லவா? என்றான். கோபம் கொண்ட இரணியன் இந்த கயவனை கடலில் வீசி எறியுங்கள் என்று காவலர்களிடம் கட்டளையிட்டான். காவலர்கள் கடலில் வீசினார்கள்.

பிரகலாதன் “அரி ஓம் நமோ நாராயணா” என்ற அபயம் விட்டதும், கை, கால்களில் கட்டி இருந்த கயிறுகள் கட்டவிழ்ந்த நிலையில் தோணியில் அமர்ந்து மகர மீன் வழி துணையாய் கரை சேர்ந்து ஓடிவந்தான் தாயிடம். அப்போது இரணியன் பார்த்தாயா மகனே! என் பலத்தை அறிந்தக் கடல் கூடப் பயம் கொண்டு உன்னைக் கரைச் சேர்த்தது என்றான். ஆனால் அன்பு மகன் இல்லை அப்பா என் இறைவனாகிய பரம்பொருள் எங்கும் நிறைந்தவர். என் குரல் கேட்டு ஓடிவந்து என்னைக் கரைச் சேர்த்தார்.

பக்தர்களின் துன்பம் துடைத்து கரை ஏற்றுபவர் அல்லவா நாராயணர்? என்றான். இப்படியாக இரணியன் எவ்வளவு துன்பங்கள் செய்தும் மீண்டான் மகன்.பிழைத்துக் கொண்டான் பிரகலாதன். கோபம் கொண்டான் இரணியன். நான் தான் கடவுள் என் பெயரை தான் சொல்லி வணங்க வேண்டும் என்பான் அப்பன். மறுப்பான் மகன்.

சீற்றம் கொண்டுக் கொதித்தெழுந்தார். பாம்புப் பிடாரனைக் கொண்டுவந்து கொடியப் பாம்பின் விஷத்தைப் பாலில் விட்டுப் பெற்றத் தாயாகிய நீலாவதி(கயாது) இடம் கொடுத்துக் குடிக்க வைத்தான். மற்றவர்கள் கொடுப்பதை நம்பாத பாவி. தாயின் கையால் கொடுக்கும்படி உத்தரவு போட்டன்.

பெற்றவள் அவன் பார்வைப் படும்படித் தான் பெற்ற மகனுக்கு விஷம் கலந்தப் பாலைக் கொடுத்தாள். பிரகலாதன் பாலைக் குடித்து இறந்து விட்டான். தாயானவள் இரணியனைப் பார்த்து கேட்டாள். என் மகன் இறந்து விட்டான். இறைவன் என்ற பெயரில் இருக்கின்ற நீர் உமது சக்தியை கொண்டு என் மகனை எழுப்பி தர வேண்டும் என்று வேண்டினாள்.

உம்மை என் கடவுளாக என்றும் நினைக்கிறேன் சுவாமி! என் மகனை உயிருடன் தாரும் என்றாள். மாமதைக் கொண்ட அரக்கனால் எழுப்ப முடியுமா? அவன் பிள்ளை பாசத்தால் தன்னை மறந்து மனைவியிடம் என்னால் இறந்த என் மகனை எழுப்ப முடியுமா? அது எல்லாம் வல்ல நாராயணனின் செயலல்லவா என்றான்.

அவன் பிள்ளைப் பாசத்தால் வாய் குளறுதலாக நாராயணனின் செயலல்லவா என்றுக் கூறி விட்டான். ஆபத்து நேரத்தில் அந்த பரந்தாமன் பெயரை நினைத்தாலே போதும் ஓடி வந்து காப்பாற்றும் கருணைக்கடல் அல்லவா? அந்த திருமால் அருளால் பிரகலாதன் தூங்கி எழுந்தது போல் எழுந்து நின்று இரணியனை வணங்கினான்.

மகனே எழும்பி விட்டாயே! என்று மகிழ்ச்சியால், மனைவியிடம் பார்த்தாயா? உன் பிள்ளையை நான் உயிர்தெழச் செய்தேன். எனக்குப் பயந்துக் கொடியப் பாம்பின் விஷம் கூட முறிந்துப் போய் விட்டது என்றான். ஆனால் பிரகலாதன் சொன்னான் இல்லை தந்தையே!, அந்த ஹரியே என்னை எழுப்பினார் என்றான். கோபம் கொண்ட அசுரன் எருமை போல் உறுமினான்.

எங்கடா இருக்கிறான் உந்தன் ஹரி. அப்படி என்றால் அந்த கள்வனை எனக்கு காட்டுப் பாக்கலாம் என்று கடும் கோபமாய் இரணியன் கேட்க மகன் அமைதியாக அன்புள்ளத் தந்தையே நம்மைக் காக்கும் ஹரிநாராயணன் எனக்குள்ளும் உமக்குள்ளுமாய் எங்கும் நிறைந்து உள்ளார். அவர் எங்கும் வியாபித்து இருப்பவர். தூணிலும் இருப்பார். துரும்பிலும் இருப்பார் என்றதும்,



மதம்பிடித்த யானையைப் போல், அரண்மனையில் அமர்ந்து நின்றத் தூணைக் காட்டி இந்தத் தூணில் இருக்கிறானாடா உன் ஹரி என்றான். கோபமாக ஆரவாரத்துடன் கேட்டான். பிரகலாதன் நிதானமாக ஆமாம் தந்தையே! இந்தத் தூணிலும் இருக்கிறார். எதிர் தூணிலும் இருக்கிறார். அந்த தூணிலும் இருக்கிறார் அரி என்ற திருமால் என்றான். அப்படியென்றால் இந்த தூணில் இருக்கும் உன் இறைவனைக் காட்டு என்று கூறி, உடனே இரணியன் கடும் கோபமாகக் கையில் வைத்திருந்த தாண்டா ஆயுதத்தைக் கொண்டு ஓங்கி அடித்தான்.

அந்தத் தூண் இரண்டாகப் பிளந்தது. உள்ளே இருந்து மனித உடலோடு சிங்க தலையை உடைய நரசிம்மனாய் உருவம் கொண்டு அவன் முன் தோன்றினார். உடனே அவனிடம் உனக்கு நான் உன் மகன் மூலம் புத்தி உரைத்தேன். நீ கேட்கவில்லை. இப்போதாவது இறைவன் மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டு

இருக்கிறார் என்பதை உணருகிறாயா? என்றார். அவன் ஆணவத்தோடு மறுத்துரைக்கவே, அவன் வேண்டிய வரத்திற்கு இணங்க ( அவன் எதிர்பார்க்கவில்லை) சூரியன் அங்குமிங்குமாய் மறையும் தருவாயில் இரணியனை இரு கையால் தூக்கி எடுத்து, வாயில் நடையில் வைத்து, மாய பெருமாள் தன் மடியிலே நிமிர்த்தி கிடத்தி , இதயம் முதல் சிறுகுடல் வரை கிழித்து இரணியனை இரண சம்காரம் செய்தார்.

அவன் குற்றுயிராய் இருந்தும் வீராப்பு அடங்கவில்லை. அந்த நிலையிலும் முன்பே என்னை சக்தியின் வேலால் கொன்றாய். இப்போதும் மலை போன்ற வலிமையுள்ள நகத்தால் தான் என்னைக் கொன்றாய் அல்லாது உன்னால் கொல்ல முடியாது என்றுச் சக்தி எல்லாம் அடங்கிய நிலையிலும் கூறினான் . சிவஞான அறிவுள்ள திருமால் மிகவும் கோபம் கொண்டு உண்மையை ஒத்துக் கொள்ளாத உன்னை மீண்டும் இந்த உலக வேதனையை அனுபவிக்க பிறவிச் செய்வேன்.

ஆனால் கிரேதா யுகம் முடிவுக்கு வந்து விட்டதால் திரேதாயுகம் பிறந்த உடன் நீ மீண்டும் பிறப்பு எடுப்பாய். பத்துத் தலைகளுடன் இருபது கையுமாய் உருவம் கொண்டுக் கொடுமைகள் புரிவாய். அப்பொழுது நான் இருகையால் ஒரு வில் கொண்டு உன் தலைகளை அறுப்பேன் என்றார்.

இவ்வாறாக கிரேதா யுகத்தை அழித்தார் மாய பெருமாள். இரணியனோடு நான்கு யுகங்கள் முடிந்தது. மாய பெருமாளும் செந்தூர் பதியை அடைந்துப் பள்ளி கொண்டார். அங்கேயே அமர்ந்திருந்தார். நாட்கள் கடந்தன ஆதி நாராயணர் ஆதி சிவன் இடம் செல்ல செந்தூர் பதியை விட்டுப் புறப்பட்டார். கைலாயம் சென்று சிவபெருமானை வணங்கித் திருவாய் மலர்ந்து உரைப்பார்.

## Day 18

### அருள்நூல்

### .உகப்படிப்பு

உலக ஜீவராசிகள் அனைத்தும் கலி மாயையிலிருந்து விடுபட்டு தர்ம உச்சத்தை அடைவதற்கான வழியைக் காட்டும் ஒரு ஒப்பற்ற திருநாமம் இந்த உகப் படிப்பு ஆகும் . உகப்படிப்பானது இறைஞானத்தையும், இறை கலைகளையும் பெருக்கி நம்மை சான்றோராக்கி மேன்மையாய் வாழச் செய்கிறது.

வழிமுறைகள்:

பதிகளில் அல்லது கூரைகளில் [வீடு] அய்யாவுக்கு பணிவிடை செய்து தீபம் ஏற்றி சங்குமணி முழங்கிய பின்பு விழுந்து வணங்கி முதலாவதாக மாப்பு கேட்க வேண்டும்.

மாப்பு கேட்டல்

“அய்யா "
“நாங்கள்”
“அறிஞ்சி அறியாமல் செய்ததெல்லாம் “
“அய்யா பொறுக்கனும் “
(வலதுகை கொண்டு வாயில் மாப்பு தட்டியவாறு ஐந்து முறை மாப்பு கேட்க வேண்டும் )
அதன் பின்பு எழுத்து நின்று அய்யாவைமனதில் நினைத்து
“அய்யா பொறுமை தரணும்”
“அய்யா நாங்கள் “
“ஒன்று சொன்னத ஒன்னு கேட்டு”
“ஒன்று சொன்னத ஒன்னு கேட்டு”
“ ஒன்னுக் கொன்னு நிரப்பாஇருக்கனும் “
“அய்யா நல்ல புத்தி தரனும்”
“அய்யா அன்னமும் வஸ்திரமும்தந்து”
“அய்யா வச்சி இரச்சிக்கணும் “
“அய்யா எங்களை”
“ யாதொரு நொம்பலம் இல்லாமலும் “
“யாதொரு சஞ்சலம்இல்லாமலும் “
“அய்யா காத்து இரச்சிக்கணும் “
என்று சொல்ல வேண்டும்.
அதன் பிறகு உகம் பெருக்க வேண்டும் பொதுவாக பல பதிகள் மற்றும் தாங்கல்களில் வாராந்திர ஞாயிற்றுக்கிழமைகள், திருவிழா காலங்கள், தேரோட்டம் நிறைவு நேரங்களில் மற்றும் தர்மம் நடக்கும் காலங்களில் பெரிய உகப்படிப்பும் மற்ற தினங்களில் சிறிய உகப்படிப்பு படிக்கும் வழக்கம் உள்ளது.

சிறிய உகப்படிப்பில் உள்ள ஒவ்வொரு திருநாமமும் தினமும் 11முறை சொல்லப்படவேண்டும் .முன்னொருவர் சொல்ல அவர் சொல்லி முடித்த பின் அதை தொடர்ந்து மற்ற அன்பர்கள் அந்த நாமத்தை திரும்ப சொல்ல வேண்டும். பெரிய உகப்படிப்பு படிக்கும்போது "தேசம் மயம் ஏகம் " என்ற உகப்படிப்பு வாசகத்தைத் தொடர்ந்து அதன் பின்வரும் வாசகங்களை முன் சொல்பவர் சொல்லும்போது அதை மற்ற அனைவரும் ஒருமனதோடு கவனித்து முன் சொல்பவர் சொல்லி முடித்தபின் "அய்யா நாராயணர்க்கும் அம்மை உமையாளுக்கும் தெய்வார் இடுவது முறையோம் முறையோம் முறையோம்"என்ற வாசகத்தை சொல்லி அனைத்து அன்பர்களும் முறையிட வேண்டும்.

உகப்படிப்பு:

அய்யா சிவசிவா சிவசிவா அரகரா அரகரா
சிவசிவ சிவசிவா அரகர அரகரா

சிவசிவா குருவுக்கும் குருபண்டாரத்திக்கும்
சிவசிவா முறையாம் முறையோம் முறையோம்

சிவசிவா ஆண்டிக்கும் ஆண்டிச்சிக்கும்
சிவசிவா முறையோம் முறையோம் முறையோம்

சிவசிவா அய்யா நாராயணர்க்கும்
நாட்டுக்குப் பெரிய வைகுண்டருக்கும்
சிவசிவா கட்டியம் கட்டியம் கட்டியம்
சிவசிவா அய்யா நாராயணசுவாமி செயம் செயம் செயம்
சிவசிவா அரகரா செயம் செயம் செயம்

மேலுள்ள ஒவ்வொரு மந்திரமும் 11 முறை சொல்ல வேண்டும்.

தேசமயம் யேகம் திட்டித்த இந்திர நாராயணர்
நிச்சயித்தபடி யல்லாது மனிதன்
நிச்சயித்த படியிலலை அய்யாவே

இங்கும் யெங்கும் யெவ்வுயிர்க்கும் யெங்கள்
அய்யா சிவசிவா அரகர அரகரா

அய்யா நாராயணர்க்கும் அம்மை உமையாளுக்கும்
தெய்வோர் இடுவது முறையோம் முறையோம் முறையோம்.

உகப்படிப்பு நற்பலன்கள் :

உகப்படிப்பு என்பதற்கு உகப் பெருக்கு என்று ஒரு பெயர் உண்டு. சங்குநாதத்துடன் நாம் ஒலியை பெருக்குவதன் தொடர்ச்சியாக நாம் பாடும் இந்த உகப்பெருக்கின் ஒலி உலக கலி மாயை அழித்து சுத்தப்படுத்தி தர்மத்தை வளரச்செய்து கலியுகம் மாறி தர்மயுகம் மலர வழி வகை செய்கிறது .உகப்படிப்பை உள்ளன்போடு அய்யாவை நினைத்து சொல்லும்போது நாம் தரும யுகத்தில் இருப்பது போன்ற ஒரு இறை சுகத்தை அனுபவிக்க முடியும். நம் மனதிலுள்ள கலி இருள் அகன்று மனம் தூய்மை அடையும்.

தினந்தோறும் உகப்படிப்பு படிப்பதன் மூலம் இறைவனுக்கும் நமக்கும் உள்ள அன்பு அதிகரித்து ,மனமானது தூய்மையான சிந்தனையில் ஈடுபடுவதை மட்டுமே இலட்சியமாக கொள்ளும். கலியை வெல்லும் ஆற்றலும் தரும யுக பதவியும் கிடைக்கும். ஒரு மனதுடைய உத்தமர்க்கு உற்ற பதவிகள் [தர்ம யுகம் ] கொடுக்க வந்தவர் வைகுண்டர். இறைநாமத்தை முழுமனதோடு அதன் மீது கவனத்தை வைத்து சொல்வதன் மூலம் மன ஒருமைப்பாடும் ஒற்றுமையும் ஒரு சேர கிடைக்கும். ஆகவே உகப்படிப்பு நாம் ஓதுவதன் மூலம் நாம் உத்தமனாகவும் வாழ முடியும் ஒரு மனதோடும் வாழ முடியும்.

வாழப்படிப்பு

சாஸ்திரம் என்பது வேதம். சாஸ்திர நூல் முறைப்படி இதைச் செய். இதைச் செய்யாதே என்று நம்முடைய வாழ்க்கை நெறிகளையும், நாம் வாழ வேண்டிய விதத்தையும் நாம் கற்றுக் கொள்ள நமக்கு ஒரு ஆதாரமாக இறைவனால் வகுத்துத் தரப்பட்டு இருக்கிற சாஸ்திரம் தான் அகிலத்திரட்டு அம்மானை மற்றும் அருள்நூல் ஆகும். இங்கு சாஸ்திரத்திலுள்ள கன்னி மக்கள் என்று

சொல்லப்படுவது சப்த மாதர்களால் பெற்றெடுத்து , பத்திரமாகாளியால் வளர்க்கப்பட்ட சான்றோர் மக்கள் ஆவார்.

சான்றோர் மக்கள் சாஸ்திர வேத நூலுக்குச் சரியொத்தபடி வாழ வேண்டும். அவ்வாறு அறவழியில் வாழுகின்ற சான்றோர் மக்கள் எல்லா நலமும் பெற்று நித்திய வாழ்வு பெற வேண்டும் என்றும், சான்றோர் மக்கள் ஆத்மஞானம் விளங்கப் பெற்று இறைவனின் பாதாரமாகிய தர்மயுக வாழ்வைப் பெற வேண்டும் என்று வாழ்த்தி பாடுவதுதான் வாழப் படிப்பாகும்.

வாழப்படிப்பு

சாஸ்திரத்திலுள்ள கன்னிமக்கள் நம்முடைய
சான்றோர்கள் நன்றாய் தழைத்துவாழ
பத்திரத்தாள் பெற்றமக்கள் நம்முடைய
பைந்தொடிமார் கன்னிமக்கள்
கோத்திரத்தோடே நன்றாய் தழைத்துவாழ
விழிமடைவார் படைத்தலைவர் நம்முடைய
வெற்றிச் சான்றோர் நன்றாய் தழைத்துவாழ
கடலதிலே தவசிருந்தேன் நம்முடைய
கண்ணுச்சான்றோர் நன்றாய் தழைத்துவாழ
வில்லு கொண்டே எய்துவிட்டேன் நம்முடைய
விசயன் சான்றோர் நன்றாய் தழைத்துவாழ
பார்த்துவிட்டேன் இரண்டுகண்ணுங்கொண்டு நம்முடைய
பத்தினி மக்கள் நன்றாய் தழைத்துவாழ
மலைக்கன்னிமார் தங்காவில் பெற்ற நம்முடைய
மக்கள் வலியசீமை கட்டி அரசாளவாழ
தர்மருட குலத்தி லுள்ள நம்முடைய
தெய்வச்சான்றோர்கள் நன்றாய் தழைத்துவாழ
கோத்தி ரத்து சான்றோர்கள் நம்முடைய
குடும்பத்தார்கள் நன்றாய் தழைத்துவாழ
கோட்டைத்தளம் மதிலிடித்து வாழநம்முடைய மக்கள்
கோடிச் சீமைக்கட்டி அரசாள வாழ
ஆல்போல தழைத்து வாழ நம்முடைய
ஐவர் மக்கள் சீமைகட்டி அரசாள வாழ
பயலுடைய தரமறுத்துப் பண்டாரஞ் சீமையான
மக்கள் நன்றாய் தழைத்துவாழ,

தானநிறைவு வாசகம்

கொத்துச் சரப்பளிக்காரன் வர்த்தக நாராயணன்
தெச்சணத்தில் வந்திருந்து பிச்சைகொடுத்த பக்தன்
சித்தூர் குடும்பத்தை வைத்தரசாளுவது எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா

பிரமனை அடுத்ததுக்காக பூவண்டன்மாவர் காவிக்கொள்ள
பூச்சலங்கை கொடுப்பதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா

ஆண்டியும் ஆண்டிச்சியுங்கூடி அழித்துவரும்போது
அன்புள்ள பக்தரை ஆல்போல் தழைக்க வைப்பதும்
எங்கள் அய்யா சிவசிவ சிவசிவ அரகர அரகரா

*************அய்யா உண்டு************